

சாதாரணமாக ஆற்றிலோ குளத்திலோ நீராடும் தென்னிந்திய மக்கள் முன்னே யெல்லாம் தேய்த்துக் குளிக்க சோப்புக்குப் பதில் இலுப்பைப் பிண்ணாக்கை உபயோகித்து வந்தனர். அந்நாளில் சோப்பென்றால் என்னவென்பதே அவர் அறியார். ஆனால் இன்றோ உடனடி சுத்தம் செய்யும் ஏராள குளிர் நுரையுடைய ஹமாம் தானிருக்கிறதே, அவர்கள் ஸ்நானத்தை இன்பமயமாக்க! தூய்மையான தாவர எண்ணெய்களைக்கொண்டு தயாரிக்கப்படும் ஹமாம் பண்டைய முறைகளின் குண விசேஷங்களோடு நவீன சோப்பின் சகல குணம்சங்களையும் பொருந்தியமையப் பெற்றிருக்கிறது:

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய சோப்பு

டாம்கோ விற்பனை இலாகா

4/117 திருச்சிரோடு, கோயமுத்தூர்.

[தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.]

மிஸ்டர் நளினிரஞ்சன் ஸர்க்கார், மாஜி அங்கத்தினர், வைஸ்ராய் எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில்: மாஜி திரவிய மந்திரி, வங்காளம்: ப்ரெஸிடென்ட், ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைட்டி லிமிடெட்.

"நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் பணத்தை வட்டிக்குப்போட்டுவைப்பதை முக்கியமாய் இரண்டு காரணங்களுக்காக நான் சிபாரிசு செய்கிறேன். முதலாவதாக, பொது ஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் தேசீய சேமிப்புகள் ஒரு முக்கிய பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இதை நோக்கமாகக் கொண்டு, பணம் சேர்த்து வைப்பதன் உபயோகத்தைப் பற்றிப் பொதுஜனங்களுக்கு இப்போதிருந்தே போதனை செய்து வரவேண்டும். அப்படிச் செய்தால்தான், சேர்த்துவைத்த அப் பணத்தை இன்னும் சுபிட்சமான ஓர் இந்தியாவைத் தோற்றுவிப்பதற்காகச் சரியான காலத்தில் உபயோகிக்கமுடியும். இரண்டாவதாக, நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள் மிக ப்பத்திரமானவை என்பதோடுகூட, தற்போதைய நிலைமைகளில் அவைகளிலிருந்து நல்ல வருமானமும் கிடைக்கிறது. அசல், வட்டி ஆகிய இவ்விரண்டுக்கும் கவர்ன்மென்டார் உத்திரவாதம் கொடுக்கிருர்கள். மேலும் அதிலிருந்து $4\frac{1}{6}$ சதவீதத் தனிவட்டியாக லாபம் கிடைக்கிறது. இந்த வட்டிக்கு இன்கம்-டாக்ஸ் கிடையாது."

Nalini Ranjan Sarkar

உமது பணத்திலிருந்து 50 சதவீதம்

நேஷனல் ஸேவிங்ஸ்

பார்த்ததும் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள்

1. நேஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000, அல்லது 5,000 ரூபாய்களுக்கு வாங்கலாம்.

2. எந்த ஒருவரும் 5,000 ரூபாய்க்கு மேல் வாங்க முடியாது. இவை மிகச் சிறந்தவைகளான படியால், எல்லாருக்கும் கிடைக்கும்பொருட்டு ஒருவருக்கு அவைகளை இன்ன மதிப்புவரையில்தான் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டுபேர் கூட்டாக 10,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவீதம் உயருகிறது. வட்டிக்குப்போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது.

4. உரிய காலத்தில் இவைகளினால் கிடைக்கும் லாபம் $4\frac{1}{6}$ சதவீதம் தனிவட்டியாகும்.

5. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

6. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம்; ஆனால், நீர் இவைகளை முடி **காலம் முழுவதும் வட்டிக்கு விட்டு வைத்திருந்தால்,** உமக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

7. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். சேர்க்கப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக்கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

8. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

லாபம் கிடைக்கும்படிச் செய்துகொள்ளவும்

ஸெர்டிபிகேட்டுகள் வாங்கவும்

AC-3-TM

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு
எக்மோர்	

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 44,42,662
ரிஸர்வ் நிதி ,, 50,00,000
டிபாஸிட்டுகள் 31—12—45 முடிய
ரூ. 13½ கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதராஸ்

வசந்தம் சந்தா விபரம்

வருஷ சந்தா	... ரூ.	6 0 0
ஆறு மாத சந்தா	... ரூ.	3 0 0
தனிப்பிரதி	... ரூ.	0 8 0

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மானேஜர், வசந்தம் காரியாலயம்,
4/12 A, திருச்சிரோட், கோயமுத்தூர்.

வசந்தம்

20 JUL 1946
MADRAS

மலர் 5	விய ஆடு வைகாசி மீ	இதழ் 2

பொருளடக்கம்

மலர் மணம்	...	... ...	... 1
இந்தியர் கண்ட சீனக் கலை	...	ஜி. வெங்கடாசலம்	... 2
விஷவெள்ளம்	...	கே. சி. எஸ். அருணாசலம்	... 9
ஒரு தோழி	...	க. பஞ்சாப கேசன்	... 16
சாவித்திரி	...	ஆர். ஷண்முக சுந்தரம்	... 25
நிரந்தர விடுமுறை	...	கோமதி சுவாமிநாதன்	... 40
நிருபர்கள் பல ரகம்	...	ரா. நா	... 46
கமலாவும் மேரியும்	...	சி. ஆர். ராமசாமி	... 48
இசை இன்பம்	...	பாரதி	... 53
அந்த நாட்கள்	...	பி. மாரிசெட்டி பி. ஏ. ஆனர்ஸ்	... 54
கலைக்கோயில்	...	சுவாமி சுத்தானந்த பாரதி	... 56
வானவில்	...	"செந்தாமரை"	... 68
பச்சை நிறம்	...	"சுகி"	... 69
புத்தக ஆராய்ச்சி	...	... ...	... 74
ஆனந்த நிலையம்	...	கு. ப. சேது அம்மாள்	... 75
ஜங்கார சுருதி	...	"மாறன்"	... 81

'வசந்தத்'தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.

தச்சுவேலைக்காரர்

எந்த சமூகத்திலும் மரவேலை செய்பவர்கள் உண்டென்றாலும் சிக்கியர்களையே தங்கள் சொந்த மாகாணமான பஞ்சாபை விட்டு வெளியிடங்களில் காணலாம். இந்தியாவின் தென் கோடியிலுள்ள மலையாளிகளும் தச்சு வேலையில் சமர்த்தர்கள்.

அழகிய மரச்சாமான்கள் செய்யக் கைப் பழக்கம் வேண்டும். துண்டுகளை இழைப்பதிலும் இணைப்பதிலும் கவனிப்பும் கைலாகவமும் அவசியம்.

தச்சர்களிடம் மதுவருந்தும் வழக்கமில்லை, ஆனாலும் ஒரு கோப்பை தேனீர் அவர்கள் வேலையில் கவனம் செலுத்த உதவுகிறது. மற்ற கைத்திறமை வாய்ந்தவர்களைப் போலவே தச்சர்களும் தாங்கள் உபயோகிக்கும் பொருள்களின் தராதரங்களைக் கவனிப்பவர்கள் புதுமையே நன்மையின் காரணம் என்பது தெரியா விட்டாலும் ப்ரூக்பாண்ட் தேயிலையை நன்கு அனுபவிக்கத் தெரியும் இந்தியாவெங்குமுள்ள இத்தகைய தொழிலாளிகளுக்கும் தோட்டத்திலிருந்து நேராக ப்ரூக்பாண்ட் தேயிலை போய்ச்சேருகிறது

தோட்டத்திலிருந்து
பறித்த போதுள்ள
புத்தப்புதுமை

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

B. B. 5438

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் ஆதி காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு உண்டு. கலை, நாகரிகம் அவ்வளவு ஒன்றி இணைந்திருந்தது. இந்த இதழில், புகழ் பெற்ற கலாவிமர்சகர், ஜி. வெங்கடாசலம் அவர்கள் தமது சீனத்து யாத்திரையில் நம்மையும் பங்கு எடுத்துக் கொண்டு அனுபவிக்கச் செய்கிறார். அருமையான பிரயாணந்தான் அது.

போக போக்கியங்களை மக்கட் குலத்தின் நல்வாழ்வுக்காகத் துறந்து, ஒரு புது வழியை நாட்டின புத்தனது வாழ்வின் கோணங்களைச் சித்திரிக்கும் கதையைத் தந்திருக்கிறோம். 'ஆனந்த நிலையம்' என்னும் அந்தக் கதை உள்ளங்களில் எதிரொலிக்கும்!

செய்திப் பத்திரிகைகளின் 'ஜீவனாடி'களான பத்திரிகை நிருபர்களைப் பற்றி ஆராய்ந்திருக்கிறார் பத்திரிகை ஆசிரியர் ரா. நா. அவர்கள். அது 'சரடு அல்ல'! வேடிக்கையும் விநயமும் பிணைந்து வெகு சுவாரஸ்யமாயிருக்கிறது.

கே. சி. எஸ் அருணாசலம் 'தாய்மை'யை அழகு படச் சித்திரிக்கிறார், "விஷ வெள்ள"த்தில். 'விஷவெள்ள'த்தின் நடை வெள்ளப் பெருக்குப் போலப் பொங்கிப் பெருகுகிறது. மற்றும் இவ்விதழில், ஹாஸ்யக் கதைகள், சரித்திரக் கதைகள், கலைக் கதைகள், சிந்தனைக் கட்டுரைகள் பலவும் நிறைந்திருப்பதைச் சுவைக்கலாம்.

ஆசிரியர்

47243

இந்தியர் கண்ட சீனக் கலை

[ஜி. வெங்கடாசலம்]

ஷாங்காயிலுள்ள அணை, வரிசை வரிசையாயுள்ள பிரமாண்ட மான பேங்க் கட்டிடங்கள், சுங்கவரி காரியாலயம், பிரதம தபால் ஆபீஸ், காதே ஹோட்டல், வானளாவும் உயரமுள்ள மாட மாளிகைகள், முன்னணியில் நீர் பரப்பும் அதில் பல்வேறு வகை யான படகுகளில் சீனர் வாழ் வது — தூரக் கிழக்கிலுள்ள ஏழு மகாபாப நகரமென அழைக்கப் படும் இந்நகருக்கு வரும் யாத் ரிகர்கள் யாவரும் இவைகளைக் கண்டு களித்திருப்பார்கள். அதன் வெளித் தோற்றத்தையும், மக்கள் வாழ்க்கையையும் பார்த்தால் இது ஒரு சீன நகரமா என்று நினைக்கத் தோன்றும்.

ஆனால் ஆச்சரியப் படத்தக்க முறையில் இங்குதான் மிங் சகாப்த காலத்திலிருந்து சமீப காலம் வரையில் பிரசித்தி பெற்ற சீன கலையின் பல அபூர்வ சின்னங் களை இந்த ஷாங்காயில்தான் பார்த் தேன். நாங்கிங்கிலுமல்ல, பீகிங் கிலுமல்ல. சீனக் கலையின் சர்வ தேசக் கண் காட்சி இங்கு ஒரு மாதம் நடந்தது. அக்கலையின் அபூர்வமான பெருமைப் படக் கூடிய சின்னங்களை இங்கு கண் டேன் என்பது மிகையாகாது. இந்த காட்சிப் பொருள் கண் காட்சி முடிந்தவுடன் லண்ட னுக்கு எடுத்துச் செல்லப் பட்டன.

வட சைனு டெய்லி நியூஸ் காரி யாலயத்தினருகிலுள்ள பெரிய தோர் பேங்க் கட்டிடத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது. பித்தளை, மோர்ஸிலெய்ன் (சீனு வில் தயாராகும் வனப்புமிக்க மண்பாண்ட வகை) சித்திரம், சித்திர எழுத்துக்கள், பீங்கானில் வர்ண வேலைப்பாடுகள், சீனுவில் பல பாகங்களிலிருந்து பல பழைய புத்தகங்கள், கையெழுத் துப் பிரதிகள் பல காட்சி சாலை யில் இடம் பெற்றிருந்தன. இக் காட்சி சர்க்காரின் ஆசி பெற்றே நடந்தது.

இந்தக் காட்சியைப் பார்க்க எந்த கலைஞனும் தவற மாட் டான். ஒரே இடத்தில் பல முதல்தர சீன கலைப் பொருள்களை சேர்த்துக் காண்பது அரிதல்லவா? கி. மு. 1000 வருஷத்திற்கு முன்னி ருந்த கீர்த்தி வாய்ந்த ஒரு புராதன மக்களின் சிருஷ்டி மேன்மையை எடுத்துக் காட்டும் சின்னங்களல் லவா இவை? சீனர்களுக்கே நம் கலை இவ்வளவு மேன்மை வாய்ந் ததா என்ற பிரமிப்பு ஏற்படச் செய்யும் சிருஷ்டிகள் இவை. கலைப் பொருள்கள் சிருஷ்டியில் செய்யப் பட்டிருந்தும் விலை இல்லா இம் மாணிக்கங்களை அன் னிய நாட்டிற்கு அனுப்புவது உசிதமா என்பது பற்றியும், சில காட்சிப் பொருள்களின் மேன் மை உண்மையில் சீனக் கலையின் சின்னமா என்பது பற்றியும் பண்டிதர்களிடையே அபிப்பி ராய பேதம் ஏற்பட்டது. இது இயற்கைதான். கலை ஆர்வம் கொண்டவர்கள் சீனுவை நாடி அங்குள்ள கலைப் பொருள்களைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றதால் மறுபடியும் அவை களை வெளி நாட்டிற்கு அனுப்பி

ஞல் அவை அனைத்தும் திரும்பி வந்து சேருமா என்கிற அச்சம் ஏற்பட்டது இயல்புதான்.

சுமார் 1,000 கலைப் பொருள்கள் சுமார் 30 அறைகளில் அமைக்கப் பட்டிருந்தன. அச்சிட்ட அட்டவணை தவிர பொருள்களின் தன்மையையும் பெருமையையும் விளக்கிச் சொல்பவர்கள் இருந்தனர். இவைகளைக் கவனித்துப் பார்த்து அவைகளின் பெருமையை அறிய குறைந்தது ஒரு வாரமாவது பிடிக்கும். நான் இதை மூன்று நாட்களில் பார்க்க வேண்டி வந்தது. ஆனல் அதிருஷ்ட வசமாக சில கை தேர்ந்த கலைஞர்கள் எண்ணற்ற அறைகளையும், மாடிகளையும் பார்த்துவர உதவி புரிந்தனர். இக்காட்சியை நான் கண்டது பெரியதோர் கலைப் பயிற்சி என நான் கருதுகிறேன். அஜாந்தா பார்த்த நான் பார்த்துப் பெருமை யடைந்த பிறகு என் வாழ்க்கையிலேயே இக்காட்சி சாலையைப் பார்த்தது மறக்க முடியாத சம்பவம்.

சீனவுக்குச் செல்வதற்கு முன் சீனக் கலைபற்றி ஓரளவு எனக்குத் தெரியும். இந்தியாவிலேயே சில சீனக் கலைப் பொருள்களைக் கண்டிருக்கிறேன். கலை மதிப்பிடும் நிபுணனில்லா விட்டாலும் கலையின் உண்மை மதிப்பை உணரும் இயல்பு எனக்கு உண்டு. சமயம், தத்வம் இரண்டில் மட்டுமல்ல கலை வியாபார அபிவிருத்திகளிலும் இந்தியாவுக்கும் சீனவுக்கும் நீண்ட கால இடையருத தொடர்பு இருந்து வந்திருக்கிறது. திபெத், திபோ வட்டாரங்களில் நேபால் பித்தளை சாமான்கள் மொகலாய சித்திரங்களிலும், நவீன இந்திய ஓவியங்களிலும் சீனச் சாயல் தென்படுகிறது.

சீன கலை அபிவிருத்திக்கு இந்திய ஆதரவும் இருந்திருக்கிறது என்பதற்கு சீனவின் புத்த கால சித்திரங்களே போதிய சான்ருகும்.

ஆகையால் சீனக்கலை எனக்குப் புதிதல்ல. காட்சி சாலையில் என்னென்ன கலைப் பொருள்களில் எது அசல், எது போலி, எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதை நான் சுலபமாகக் கண்டு பிடித்தது என் சீன நண்பர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. பழைய சீன பித்தளை வேலைப்பாடுகளைக் குறிப்பிடுவதில் தென்னிந்திய பித்தளை உருப்படிகளை நான் அறிந்து அனுபவம் பெற்றிருந்தது உதவியாயிருந்தது. அங்கு மிக அபூர்வமாயிருந்தவைகள் 4000 வருஷங்களுக்கு முன் உலோகத்தில் அடிக்கப்பட்ட கலை சிருஷ்டிகளே யாகும். புராதன இந்தியா மாதிரி பண்டைக்கால சீனவிலும் அழகும் உபயோகமும் முரண்பட்டதல்ல என்பதன் சின்னங்கள் காணப்பட்டதுடன் கலைஞனுக்கும், தொழிலாளிக்கும், லட்சிய வாதிக்கும், காரிய வாதிக்கும் வித்தியாசம் பாராட்டப்படவில்லை. கலைஞர்கள் ராஜ தந்திரிகளாகவும், ராஜ தந்திரிகள் கலைஞர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

பித்தளை வேலைப்பாடுகளில் பல ரகங்கள் இருந்தன, அன்ருட உபயோகத்திற்கான பாத்திரங்கள், சங்கீத கருவிகள், பூஜா பாத்திரங்கள், விக்கிரஹங்கள், மணிகள் அவைகளில் பல ரூபங்கள், பலவித வேலைப்பாடுகள் அமைந்தவையும் இருந்தன. கிரேக்கரோமாபுரியி லிருந்து பல நூதன வேலைப்பாடுகள் அமைந்த கலைகளெல்லாம் காட்சியளித்தன.

ஆனல் அவைகளை ஆக்குவதில் அழகும் உபயோகமும்தான் பிரதானமாகக் கருதப்பட்டன. அவைகளின் பெயர்களும் பாகுபாடுகளும் பலவகைப் பட்டவை. உட்புறம் வெள்ளி, தங்க முலாம் பூசப்பட்ட வட்டில்கள் இருந்தன. வேலைப்பாடமைந்த தூபதீபங்கள் இருந்தன; மதுபானக் கிண்ணங்கள் இருந்தன. அழகான சீன சித்திர எழுத்துக்களில் அவைகள் எப்பொழுது ஆக்கப்பட்டன என்கிற விவரம் பொரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் மிகப் பழமையானது கி. மு. 1000 வருஷத்தில் சைன வம்சத்தார் ஆட்சி புரிந்த காலத்தில் செய்யப்பட்டது.

தென்னிந்தியாவில் ஐந்து உலோகக்கலப்பு பித்தளை உபயோகிக்கப்படுகிறது போலல்லாமல் தாமரம், தகரம் பல்வேறு விகிதத்தில் கலக்கப்பட்ட பித்தளையே இங்கு பெரிதும் உபயோகிக்கப் படுகிறது. எந்த அளவில் உலோகங்களைச் சேர்ப்பது என்பது புஸ்தகங்களில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இதை அணுப் பிசகாமல், வேலை செய்பவர்கள் பின்பற்றுகிருர்கள்.

உதாரணமாக மணிகளுக்கும்' வட்டில்களுக்கும் 5 பங்கு தாமிரமும், ஒரு பங்கு தகரமும் சேர்க்க வேண்டும். கண்ணடிகளில் பாதி தாமரம், பாதி தகரம் சேருகிறது; வாள்கள் செய்வதில் இரண்டு பகுதி தாமரமும் ஒரு பகுதி தகரமும். இவைகளில் பல்வேறு ரகங்களும் திட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. தினசரி உபயோகத்திற்கான சமையல் பாத்திரங்களுக்கு லி, டிங் அல்லது கியூயி எனவும், சங்கீதக் கருவிகளுக்கு சுங் அல்லது லிங் என்னும் நாமம் சூட்டப் பட்டிருக்கின்றன.

இவைகளில் மிகவும் உயர்ந்த கிண்ணம்சைனவம்சத்தார்ஆண்ட காலத்தில் தயார் செய்யப்பட்ட பித்தளை பூஜைக் கிண்ணம். நன்கு செதுக்கப் பட்ட பீடத்தில் அமைக்கப் பட்டு கிண்ணத்தின் உட்புறம் வெள்ளி, தங்க வேலைப் பாடு செய்யப்பட்டது. உட்புறத்தில் சீன சித்திர எழுத்தில் விபரம் பொரிக்கப் பட்டிருந்தது.

வெளிப்புறம் சில படங்கள் லேசாகப் பதிக்கப் பட்டிருந்தன. என் மனதைக் கவர்ந்த மற்ருெரு காட்சிப் பொருள் 13-வது நூற்ருண்டில் செய்யப்பட்ட பித்தளைப் பிடியால் இணைக்கப்பட்ட கண்ணடி. அதன் பின்புறம் சமஸ்கிருத எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருந்தன. அதில் காணப் பட்ட புத்தர், போதித்து வருகின்றவைகளிலிருந்து இந்திய கலையின் ஆதர்சம் நன்கு புலப்பட்டது. நாம் அறிந்ததைவிட அதிகமாகப் பண்பாட்டுத் துறையில் சீனவுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க

இந்த சின்னங்கள் இடந்தருகின்றன.

பித்தளைக் கடுத்தபடி போர்ஸிலெய்ன் எனும் சீன மண்பாண்டக்கலை நம் மனதைப் பெரிதும் கவருகிறது. பல்வேறு அறைகளில் இவைகளின் பல்வேறுவகைகள் காட்சியளித்தன. இவைகளில் பெரும்பாலானவைஸுங் வம்சத்தார் ஆண்ட காலத்தில் உருப்பெற்றவை. ஆனல் மிக உயர்ந்த வேலைப் பாட்டைக் காட்டும் பல மிங், கிங் வம்சத்தார் ஆண்ட காலத்தவையாயிருக்க வேண்டும்

போர்ஸிலெய்ன் வேலைப்பாடு சீனவின் தலை சிறந்த கலை என்பது உலகமறிந்தது. மண்பாண்ட வேலையில் பளபளப்பானது; இதன் சிறப்பிற்குக் காரணம் ஒரு பிரத்தியேகமான களிமண்ணும், கற்பொடியும் கலந்திருப்பதும் இதைச் சுட்டு சூளை போடுவதில் காட்டும் அதி நுட்பமான கவனமும்தான். சீனவிலிருந்து வரும் மண்பாண்டங்கள் தான் மிக சிறந்தவை.

இவைகளில் மிகச் சிறந்ததும் அழகாயுள்ளதும் பீங்கான் பூச்சுடைய போர்ஸிலெய்ன் பாத்திரங்கள்தான். இது சிங் தலைமுறையினர் காலத்தில் பிரசித்தமடைந்தது. இவைகளில் சிலவற்றை கண்காட்சியில் கண்டேன். சாதாரண பளபளப்பு போர்ஸிலெய்னை விட இந்த பீங்கான் வகையே மிகவும் சிறந்தது. கி. மு. 3 அல்லது 4 வது நூற்றுண்டில் சீனவில் போர்ஸிலெய்ன் தொழில் ஆரம்பித்தாலும் கி. பி. 18–வது நூற்றுண்டில்தான் பீங்கான் போர்ஸிலெய்ன் சிறப்புப் பெற்றது. இதற்கு தக்க சான்றுகள் பிரஸ்தாபங்கள் காட்சியில்

காணப்பட்டன. இந்த துறையில் சீனர்களைவிட ஜப்பானியர் அதிக தேர்ச்சியடைந்து அவர்களை மிஞ்சி விட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

கண்காட்சி சாலையில் சுமார் 20 அறைகளை நிரப்பி சீனர்கள் திறமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கிய சீன கலைச் சின்னங்கள், சீன ஓவியங்களும் அவர்கள் லிபி சித்திரங்களுமாகும். சுமார் 2000 வருஷங்களாக பிரசித்தி பெற்ற கலை விற்பன்னர்களின் கைத் திறன்களைப் பார்ப்பது மனதிற்கு அபார ஆனந்தத்தை அளிக்கும் அனுபவமாயிருந்தது. உலகம் அழகு வாய்ந்ததைக் கற்பனை செய்து பார்ப்பதற்கு உதவியா யிருந்தன. இக்கலை சின்னங்கள் பறந்த இயற்கை தேவியின் வனப்பு, பனி மண்டலத்தில் மூடிக்கிடக்கும் மலைச் சிகரங்கள், பாறைப் பிளவுகளுக்கிடையே தவழ்ந்து விளையாடும் நீரோடை களும், நீர் வீழ்ச்சிகளும், தங்கள் நிழலால் வனப்பளிக்கும் மூங்கில் புதரின் அழகும், நீந்தும் பறவை களின் வெண்ணிறச் சிறகுகள் மனதிற்கு எத்தனை ரம்மியத்தை அளிக்கின்றன.

சீன ஓவியம் எளிமை, மெல்லிய வர்ண வேலைப்பாடு, கருத்தை நேரடியாகக் கற்பிக்கும் தன்மை, கலைஞன் கற்பனைத் திறன் யாவற் றிற்கும் எடுத்துக் காட்டாயிருப்ப துடன் உலக ஓவியங்களுக்கு சிக ரம் போல் விளங்குகிறது. கீழ்த் திசை ஓவியத்தில் கலைஞனின் கற்பனை உள்ள உணர்வு இரண் டிற்கும் ரூபம் கொடுக்கப்பட் டிருப்பதைக் காண்கிறோம். இந்த அளவுக்கு கலை உள்ளுணர்வின் பிரதி பலிப்பாயிருக்கிறது. அத னால்தான் கீழ்த்திசை ஓவியத்தில் சிருஷ்டி, இயற்கையை அப் படியே பிரதிபலிக்கும் தனி ஒளி நிழல் பாகுபாடு, பாமரர்களையும் பரவசப்படுத்தும் அம்சங்கள் முதலியவற்றைக் காண முடிவ தில்லை.

அதனால்தான் கீழ்த்திசைக் கலை யாவற்றையும் சூக்ஷமமாகவும் சூசகமாகவுமே காட்டுகிறதே ஒழிய இயற்கையை 'காபி'யடிப்ப தாக இல்லை. சீன சித்திரக்காரர் கள் இந்தியர்களைப் போலவே சாஸ்திரியமாகவே கலை பயின்ற வர்களாயிருக்கிறார்கள். கோடு கள் மூலம் சித்திரத்தை பூர்த்தி செய்பவர்கள் தான் இவர்களில் அதிகம். இம்மாதிரி கோடு வரை வது சீனர்களுக்கும் ஜப்பானிய ருக்கும் இயல்பு. ஏனெனில் குழந் தைப் பருவத்திலிருந்தே தங்கள் எழுத்துக்களை சித்திரமாகவே வரைந்து வந்திருக்கின்றனர். அத னால்தான் லிபி சித்திரம் இந்நாடு களில் தேர்ந்த கலையாகத் திகழ் கிறது. ஓவியத்தில் வர்ணப் பெருக்கை எதிர்பார்ப்பவர் களுக்கு இவர்களுடைய கலை மேன்மை எளிதில் விளங்காது. ஏனெனில் எழில் மிக்க சித்திரங் களில் இவர்களுக்குள்ள ஆர்வம் மிகவும் மேன்மையானது.

புத்தமதம் தழைத்தோங்க ஆரம்பித்தவுடன் சீன ஓவியத் திற்கு புத்துயிரும் கவர்ச்சியும் ஏற்பட்டது.

இயற்கைக் காட்சிகளையும், இயற்கையின் லீலாவினோதங்களை யும் சித்தரித்து வந்த டாங்க் கால பாணியைப் பின்பற்றியவர்கள் புத்தருடைய ரூப லாவண்யத்தை சித்தரிப்பதில் ஆதர்சம் பெற்று மத்திய அரசாங்க மன்னர்களின் சமஸ்தான சித்திரக்காரர்களானார் கள். தென்னிந்திய பிக்ஷுவாகிய

போதிதர்மனின் உருவ சித்திரம் பல நூற்றுண்டுகளுக்கு சைனு, கொரியா, ஜப்பான் முதலிய தேசங்களில் பிரபல்யமாயிருந்தது. காஞ்சி பாவாஸியும், துறவிகளில் மன்னன் போன்று விளங்கிய போதிதர்மனையும் மதாசாரியராகக் கொண்டவர்களிடையே அவர் படம்தான் எழில் மிக்க சித்திரமாக விளங்கிற்று.

சீனக் கலையைப்பற்றி விமர்சனம் செய்து வந்த ஒரு பிரபல ஐரோப்பியர் சீனக் கலைஞர்கள் மேதையையும் அதன் மூலம் அவர்கள் சாதித்ததையும் பற்றி வருமாறு எழுதியிருக்கிறுர்: "புராணம், மதம், சரித்திர சம்பந்தமான விஷயங்களில் பல அம்சங்களைப் பற்றி சீன ஓவியர்கள் படம் எழுதியிருக்கின்றனர்; தினசரி வாழ்க்கையையும் சித்தரித்திருக்கிறுர்கள்; கற்பனை காதல் முதலிய ரகஸியங்களுக்கும் ரூபமளித்திருக்கின்றனர்; ஜடப் பொருள்கள் இயற்கை வனப்பையும் படம் தீட்டியிருக்கிறுர்கள். இயற்கைக் காட்சிகளை சித்தரிப்பதில்தான் அவர்கள் முதன்மை பெற்றிருக்கின்றனர்.

அந்தப் படங்கள் மூலம் இயற்கை தேவியிடம் அவர்களுக்குள்ள பக்தி, அவர்களுடைய கவிதாரஸம் நிறைந்த கற்பனை, எல்லாம் தெளிவாகத் திகழ்கிறதைக் காண்கிறேம். எக்காலத்திலும் பிராணிகளையும், பட்சி ஜாலங்களையும், பூக்கொத்தில் வண்டு வர்ணங்கள் மொய்க்கும் அழகையும் படம் எழுதுவதில் விற்பன்னர்களாயிருந்திருக்கின்றனர். இடையருத பயிற்சியினுல் படம் தீட்டும் கோலாள்வதில் ஏற்படும் சூரத்தனத்தை காலத்திற் கேற்றபடி சிரத்தையுடனும், லாகவமாகவும் அவர்கள் வரையும் படங்கள் மூலம் காண்கிறேம். சில சைத்திரிகர் தங்கள் முழு மேதையையும் ஒரே துறையில் காண்பித்திருக்கின்றனர். உதாரணமாக மூங்கில் கொம்புகள் அசைந்தாடும் அழகை, கருப்பு, வெள்ளை வர்ணங்கள் மூலம் அற்புதமாகச் சிலர் எடுத்துக் காட்டியுள்ளனர். மற்றும் சிலர் சீனுவில் பிரசித்தி பெற்ற புஷ்பங் குலுங்கும் மரத்தைப் படம் தீட்டுவதில் தங்கள் திறமையைக் காட்டியிருக்கின்றனர்.

சுருள் படங்கள் இருவகை உண்டு; ஒன்று உயரத்தில் தொங்க விடுவது, மற்றென்று அகலத்தில் விரிவது. முதல் வகை ஜப்பானில் பிரபல்யமாயிருக்கிறது. இதில் தனிப் படங்களும் உண்டு, அல்லது பூ வகைகள், பட்சி ஜாலங்கள் சித்திரங்களும் இருக்கலாம். மற்றென்று சீனுவில் பிரபல்யமாயிருக்கிறது. கஜக் கணக்கில் பட்டிலோ, காகிதத்திலோ வரையப்பட்ட மலைத் தொடர்காட்சிகளும், இவைகளைப் பார்த்தால் இயற்கையாக மலைகளையும், மரங்களையும், இதர காட்சிகளையும் நேருக்கு நேர் பார்ப்பது போல் பிரமை ஏற்படும். பானை பானையாக வர்ணங்களைக் கொண்டு வனப்பு மிக்க யாஸ்க்ஷீஸி பிராந்தியத்தை மைல் கணக்கு நீளமுள்ள திரையில் தீட்டி விடலாம் என்று ஒரு கலைஞன் கனவு கண்டானும். புராதன சீனுவில் எதுவும் நடக்கும்.

ஸையூஸ், வியூமே, சூகைசீ (இந்திய குருகா மலாக்ரிதியின் படத்தை எழுதியவர்) சுங்காலத்திய ஹூடான்வே, டாங்காலயென் லிடேயம், ஹூடாடுட்ஸுவும், யூவான்மாகாண சேமெஸ்ழு,

ஹியூஸான் மன்னன் (இவருடைய பட்சி படங்கள் முகலாய சைத்ரிகர் மன்சூரை ஞாபகப் படுத்துகிறது.) கியூஇங், லின்லியால் முதலியசிரஞ்சீவித்வத்வம் பெற்ற சீன சைத்ரிகர்களின் படங்கள் கண்காட்சி சாலையில் இடம் பெற்றிருந்தன. கி. பி. 6-வது நூற்றுண்டில் வே மன்னனின் சமஸ்தான சைத்திரிகராயிருந்த இந்திய பிக்ஷுகபோதா வரைந்த தேவர் படங்கள் இந்திய யாத்ரிகர் கண்ணைக் கவருபவையாயிருந்தன.

எழுத்துக்களை சித்திரங்கள் போல் வரைவது பிரத்தியேகமேன்மையடைந்திருக்கிறது சீனுவில். சீனுவில் ஒவ்வொரு எழுத்திற்கும் பொருள் உண்டாகையால் அவைகள் சித்திர ரூபம் பெறுவது சாத்திய மாகிறது. எட்டு விதமான சித்திர வகைகள் உபயோகப்படுகிறது. இந்த எழுத்து சித்திரம் தீட்டுவதில் பரத நாட்டியத்தில் காணும் அசைவு, நெளிவு, அழுத்தம், எல்லாம் இந்த சித்திர முறையிலும் காணலாம். ஆனல் அதன் சிறப்பை மக்கள் உணரத் தவறி விட்டதுமன்றி சைத்திரிகருள அதன் நுட்பத்தை மறந்து விட்டனர் என்று கூறலாம். இந்த சித்திரக் காரன் கோடுகள் வரைவதில் தேர்ந்தவனுயிருக்க வேண்டும். இது தெரிந்து கொண்ட பிறகு வர்ணப் பூச்சில் தேர்ச்சிபெற வேண்டும். அராபிய லிபி புஷ்பச் செண்டு மாதிரியிருந்தால் சீன லிபி கோண வடிவங்கள் மாதிரி யிருக்கும். சாதாரண சித்திரத்தை விட எழுத்து சித்திரம் கலைஞனுக்கு மிகவும் முக்கிய மானது. ஆகையினல் அவன் எழுத்து சித்திரங்களை பெரிதும் போற்றுகிருன்.

கற்களை பல வடிவங்களாக வெட்டிச் செப்பனிடுவது சீனக் கலைகளில் ஒன்று. மத்திய ஆசியா பர்மாவிலிருந்து வந்த கலையானுலும் இதை இவர்கள் பெரிதும் போற்றுவதற்குக் காரணம் இக் கற்கள் ஒருவித சக்தி பெற்றவை என்பதனல்தான். இம்மாதிரி கற்கிண்ணங்கள் அரண்மனைகளில் தண்ணீர் குடிக்கும் பாண்டங்களாக உபயோகப் படுத்தப் பட்டன. இது மிகவும் கடினமான உலோகமாயிருப்பினும், சீனர் தங்கள் புராதனக் கருவிகளைக் கொண்டே அற்புதமான ஜாடிகள், கிண்ணங்கள், ஜப மாலைகள் செய்தனர். மொகலாய மன்னர்கள் இம்மாதிரி பாண்டங்களை தங்கள் ஆட்களைக் கொண்டே செய்வித்தனர். சீனக் கலையின் பல்வேறு அம்சங்கள் இந்தியருக்குத் தெரிந்ததே. இந்தியாவின் அண்டை நாட்டாரும், ஒரே பண்பாடுடையவர்களுமாக சென்ற 20 நூற்றுண்டு களாக நம்முடைய சினேகிதர்களாக வாழ்ந்து வந்த சீனர்கள் கலையைப் பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை.

★

வீட்டு வெள்ளம்

கே. சி. எஸ். அருணசலம்

[நீலக்குவளை மலர்களின் மெல்லிய இதழ்களிலே அமுதகலை பெய்வதற்காக இரவாகிய மங்கை ஏந்திய வெள்ளிக் குடத்தைப் போல வான வெளியிலே வெண்மதி. அஸ்தினபுரியிலே குந்தி தேவியின், மேல் மாடியிலே பதிந்துள்ள சந்திர காந்தக் கற்கள் நிலவின் பூங்கதிர்கள் பட்டு நீர் கசிகின்றன. பாண்டவர்க்காகத் துரியோதனனைத் தூது கண்டு திரும்பிய கண்ணன் குந்தி தேவியைக் காண வருகின்றான்.]

குந்தி:- வா! வா! கண்ணா! கருமுகில்களால் இடையறாது மூடப்படும் கார்கால வானத்தைப் போல, ஓயாது துன்ப நினைவுகளால் மூடப்பட்ட மனத்தோடிருந்த நான் உன் வருகையையே எதிர்நோக்கி யிருந்தேன்.

கண்ணன்:- வானை மூடியுள்ள கார் முகிலைக் கலைத்தொதுக்க ஒரு ஊழிப்புயல் வரப்போகின்றது அம்மணி!

குந்தி:- கண்ணா! நீ என்ன சொல்லுகிறாய்?

கண்:- தன் கொடியில் அசைகின்ற பாம்பை விடக் கொடிய நஞ்சைத்தான் உள்ளத்திலே கொண்டிருக்கின்றான், துரியோதனன். தேவி! அவன்பால் நான் சென்ற தூது விழலுக்கிறைத்த நீராயிற்று. ஐந்து நாடுகளோ வீடுகளோ அல்ல பாண்டவர்க்கு ஊசிமுனை நாட்டுதற்குக்கூட இடந்தர ஒப்ப மாட்டேன் என்று சொல்லி விட்டான்.

குந்தி:- (ஏங்கிய குரலில்) அந்தோ! கண்ணா! தேவர்களும், ஞானிகளும், வேதங்கள் நான்கும், தேடுகின்ற உன் பாதங்கள் சிவக்க எமக்காக நீ சென்ற தூது வீணாகிவிட்டதா? ஐயோ! இனி என்ன செய்வோம்?

கண்:- கருணைக் கடலாகிய தரும நந்தனின் கடைசி முயற்சியும் தோல்வி யுற்றது. பொறாமை என்னும் பெருந் தீயினாலே கௌரவர் தலைவன் அறிவு சாம்பலாகி விட்டது. அவன் இரத்த வெறி கொண்டு அலைகின்றான், தாயே!

குந்தி:- அந்தோ! இனி என்ன செய்வோம் கண்ணா!

கண்:- செய்வதற்கு ஒன்றும் இனியில்லை. பாண்டவ, கௌரவ சைன்யங்களின் இரத்தத்தினால் பாரத பூமி ஒரு முறை சிவந்தேதான் தீரவேண்டும். இதைத் தடுப்பதற்கில்லை.

குந்தி:- (அஞ்சினவளாய்) பாரதப் போர்! கற்பனையைக் கடந்த ஒரு இரத்தக்காடு ஐயோ! கண்ணா! நான் நினைக்கவும் நடுங்குகின்றேனே.

கண்:- தேவி! கலங்க வேண்டாம். வீமன் கையிலே வஜ்ரகதை. விஜயன் கையிலே காண்டீவம் இவை போதும். எனினும் கடலெனப் பொங்கும் கவுரவர் படைகளிலே மஹா வீரர்

களான துரோணர் பீஷ்மன் அசுவத்தாமன் கிருபன், கர்ணன் முதலானவரும் ஆயுதம் பூண்டு நிற்பார்கள்.

குந்தி:- கோபாலா! உனது திருவடிகளின் குளிர்ந்த நிழலிலே வாழ்கின்ற எங்களை அச்சுறுத்தும் படைக்கலம் ஒன்றும் உண்டா?

கண்: பாரதப்போரிலே பாண்டவரின் வெற்றிக்கு வெறும் படைபலம் மட்டும்போதாது தாயே! தந்திரமும் வேண்டும். தங்களால் ஆகவேண்டிய ஒரு இன்றியமையாத உதவியும் உண்டு.

குந்தி:- மஹாபாரத போருக்கு என்னால் உதவியா? இது என்ன விந்தை கண்ணா?

கண்:- நிகரற்ற மஹா வீரனாகிய கர்ணன் அர்ச்சுனனது உயிர்ப் பகைவன் கௌரவ சைன்யத்தின் உயிர்நிலையாகத் திகழ்பவன் அவன். பலத்தைத் தந்திரமாகக் குறைக்காது போனால் பாரதப் போரின் முடிவு விபரீத மாகிவிடும்.

குந்தி:- அதற்கு?

கண்:- அம்மா! கனவாய் மறந்துபோன ஒரு கதையைக் கேளுங்கள். சிவ ஞானியாகிய துர்வாசர் தனக்கு அன்பொடு பணிவிடை புரிந்த ஒரு அரசிளங்குமரிக்கு, பல ஆண்டுகளுக்கு முன்னால், ஐந்து மந்திரங்களை உபதேசித்துச் செல்ல, பேதமை மிகுந்த அந்த அரசகுமாரி அவற்றைச் சோதிக்க விரும்பி ஒருநாள் ஏகாந்த நிலையிலே அம்மந்திரங்களில் ஒன்றால் சூரியனை வணங்க, கதிரவன் குளிர்ந்த வடிவோடு அவளை அணுகினான். அவள் அவனது தேவ எழில் கண்டு காதல் கொள்ள, அதனால் தேவ கர்ப்பமாக ஒரு கணத்திலே தேவ அம்சமுள்ள கவசத்தையும் கனக குண்டலங்களையும் பூண்ட ஒரு ஆண் மகவைப் பயக்க, கதிரவன் மறைந்தான். பின்பு கன்னி கழியாத அந்த அரசகுமாரி அக்குழந்தையால் வரநேரும் உலகப் பழிக்குப் பெரிதும் அஞ்சினவளாய் அக்குழந்தையை ஒரு பேழையிலிட்டு காரிருளிலே யமுனா நதியிலே விட்டுவிட்டாள். அவள் யார்? தாயே!

குந்தி:- நான் தான் இந்தப்பாவியே தான் கண்ணா! என் உயிரை உறுஞ்சும் இந்த நிகழ்ச்சியை இப்போது ஏன் நினைவூட்டுகின்றாய்?

கண்:- யமுனா நதியிலே விடப்பட்ட அந்தப் பேழையை யமுனை கங்கையிலே சேர்ப்பிக்க, திருதராட்டிரனது சாரதியாகிய அதிரதன் அக்குழந்தையைக் கண்டெடுத்துப் பேரன்போடு வளர்த்தான். சூரிய தேவனது அசரீரிக்கு இணங்க அக் குழந்தையை கர்ணன் எனப் பெயரிட்டு வளர்த்தான். பின்பு மஹாவீரனாகிய கர்ணனை வணங்காமுடி மன்னனாகிய துரியோதனன் தன் ஆருயிர் நண்பனாக கொண்டு அங்கநாட்டின் அரசனாக்கினான். நாளை வரும் மஹா பாரதப்போரிலே காண்டீபனுக்கு எதிராக வில்லெடுக்கப்போகும் இணையில்லா வீரனாகிய கர்ணன் தங்களது முதல் மகன் தாயே!

குந்தி:- (துயர் பொங்க) ஐயோ! கண்ணா! கண்ணா! கர்ணன் என் மகனா! இந்தப் பாவியினால் அநாதியாக, யமுனையில் இடப்பட்ட குழந்தையா இன்றைய

பெரும் வள்ளலாகிய கர்ணன். அந்தோ! கண்ணு! அமுதக்குட மேந்திய பச்சை மோகினியாய் நடித்து அரக்க குலத்தை அழிப்பதற்கு நீ செய்த வஞ்சனை என்பாலும் செய்துவிட்டாயே! பாரதப் போருக்குக் கொடியேற்றி விட்டு, இன்று வந்து "கர்ணன் உன்மகன்" என்று சொல்லுகிருயே! முன்பாகவே இதனை அறிந்திருந்தால் கர்ணனைத் துரியோதனனிடம் அணுகாமலே தடுத்திருக்கலாமே.

கண்:- கடந்ததை நினைத்துக் கலங்கிப் பயனில்லை. விதிப்படி கர்ணன் மடிய வேண்டியவன். பாரதப் போரிலே பாண்டவர் வெற்றியடைய வேண்டுமானுல் நீங்கள் ஒன்று செய்தாக வேண்டும். காண்டா வனத்தை அர்ச்சுனன் அக்கினிக்கு இரையாக்கிய காலத்திலே, அதிலிருந்த ஒரு கொடிய நாகம் உயிர்தப்பி அர்ச்சுனனது உயிர்ப் பகைவனுகிய கர்ணனை அடைக்கலம் புகுந்துள்ளது. தன் குலத்தையே வேருடன் அழித்த அர்ச்சுனனிடம் பழிக்குப் பழி வாங்கக் கடுஞ்சினம் பூண்டுள்ள அந்த நாகத்தைக் கர்ணன் நாகாஸ்திரமாக ஏற்றுக் கொண்டுள்ளான். கர்ணனிடமுள்ள மஹா வல்லமை யுள்ள, தடுக்க முடியாத படைக்கலம் அதுவாகும். தாங்கள் இன்று கர்ணனைக் கண்டு, அவனிடமுள்ள தெய்வீகத் துகிலை அணிந்து அவனுக்குத் தாங்களே 'தாய்' என்பதை நிரூபியுங்கள். பின்பு "தருமன் முதலான உன் தம்பியர் ஐவரும் தனித் தனி ஏவல் செய்ய குரு குல சாம்ராஜ்யத்தின் அரியணையை அங்கீகரிக்க வருமாறு" அழையுங்கள். மறுத்தானுகில், அந்த நாகாஸ்திரத்தை அர்ச்சுனன்மேல் ஒரு முறைக்குமேல் ஏவாதிருக்குமாறு கர்ணனிடம் வரம் பெற்றுத் திரும்புங்கள்.

குந்தி:- (விம்மியவளாய்) அந்தோ! யமுனைநதியின் நெளிகின்ற அலைகளின்மீது 'அநாதி'யாக அன்று மிதக்கவிட்ட மகனை இன்று எந்த முகத்துடன் சென்று காண்பேன் கண்ணு! நாகாஸ்திரத்தை மறுமுறை ஏவாத வரத்தைப் பெற்ருல் என் முதல் மகனுகிய கர்ணன் மடிவான். நாகபாசத்தைத் தடுக்காவிடில் என் நான்காம் புதல்வன் மடிவான் இருதலைக் கொள்ளி எறும்பாய் விட்டேனே!

கண்:- தேவி வேறு வழியில்லை. அகிலத்தவர்க்கெல்லாம் வேண்டியதை அள்ளிக் கொடுத்துச் சிவந்த கையன் கர்ணன். உயிரையே வேண்டி அவனிடம் சென்று இறைஞ்சி நின்ருலும் உவந்தளிக்கும் ஒரு ஒப்பற்ற வள்ளல் அவன் தன் தாயின் கண்ணீரை அவன் தாண்ட மாட்டான். அம்மையே! பாண்டவ குலம் வெற்றியடைய வேண்டுமானுல் பாரத யுத்த களத்திலே கர்ணன் மடிந்தேதீர வேண்டும். ஐந்து தலைகளும், ஒருயிரும் கொண்ட காளிங்க நாகத்தைப்போன்ற பாண்டவர் மடிவதா? அல்லது கர்ணன் ஒருவன் வீர சுவர்க்கம் புகுவதா? இரண்டில் ஒன்றை முடிவு செய்து கொள்ளுங்கள். கர்ணனது கணையாலே காண்டீபன் மடிந்தானுனல் மற்ற நால்வரும் கணப்பொழுதிலே தம்மை மாய்த்துக் கொள்ளுவார்கள். நான் சொல்லுவதை மறுத்துத் தாங்கள் புலம்பினுல், அது ஐம்பெரும் வீரர்களாகிய

பாண்டவர்களுக்கு மரணப் பாட்டாக முடிந்துவிடும். புறப் படுங்கள்.

குந்தி:- கண்ணா! விதிப்படி நடக் கட்டும். இதோ நான் கர்ண னைக் காணச் செல்லுகிறேன்.

★

[பொன் விளக்குகள் செஞ்சுடர் சிந்தி ஒளிசெய்யத் தன் அழகு மிக்க மாளிகையிலே கர்ணன் குந்திதேவியை வணங்கி வரவேற்க, குந்தி அவனிட மிருந்த தெய்வீகத் துகிலை அணிந்து தானே அவனது தாய் என்பதை நிரு பித்து அவனது பிறப்பு வரலாற்றைக் கூறிமார்புற அணைத்து கண்ணீர் மழை பெய்ய நிற்கின்றாள். கர்ணன் அவளது திருவடிகளை வணங்கி எழுந்து]

கர்ணன்:- விந்தை! விந்தை! ஐம் பெரும் வேந்தர்களின் பாக்கி யம் நிறைந்த அன்னையே! நானும் உன் புதல்வன் தானா? நான் வெறும் இன்பக்கனவு காண்கின்றேன் இல்லையே? அம்மா! அம்மா! தாங்கமுடி யாத பேரின்பத்தினாலும் வியப் பினாலும் என் உடலும் உள்ள மும் சோர்வுறுகின்றனவே!

குந்தி:- ஆம் என் ஆருயிர்ச் செல் வனே! நீ சூரிய தேவனின் அருட் செல்வன். குந்தி தேவி யின் மூதல் மகன். உலகம் பழி தூற்றுவது போல நீ ஒரு அநாதி அல்ல.

கர்:- ஆஹா! நான் தரும நந்தன னுக்கு மூத்த சகோதரன் மஹா வீரனாகிய காண்டீபன் என் உடன் பிறந்தவன், என எண் ணும்போதே பெருமையினாலே எனது தோள்கள் பூரிக்கின்றன கர்ணன் ஒரு 'அநாதி' என்ற அவச்சொல் அழியும் காலம் வந்து விட்டது. என் மனத்தி னிலே இருந்த ஒரு பெரும் மாசு அகன்றது. ஆஹா! இன்றே என் வாழ்விலோர் திருநாள்.

குந்தி:- மகனே! கடந்த காலம் கண்ணீரொடு கழியட்டும். வனப்பு நிறைந்த வருங்காலத் தை நோக்கி நாம் அனைவரும் மகிழ்வுடன் செல்லுவோம்.

கர் -தாயே! தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

குந்தி:- நம் அனைவரின் வாழ்க்கை யின் இருட் படலமும் இன்று டன் ஒழிவதாக. வா சூர்ய குமார! தருமநந்தனன் முத லான உன் தம்பியர் ஐவரும் உன் திருவடிகளின் நிழலிலே தங்கவும், உனது கற்பகம் அனைய கரங்களிலே பிடித்த செங்கோலினாலே உலகெலாம் புகழ்மணக்கவும் பாரத நாட் டின் அரசரெல்லாம் உனது திருக்கோயிலின் முதல் வாயி லிலே வணங்கி நிற்கவும் குரு குல சாம்ராஜ்யத்தின் சிம்மா தனத்தை நோக்கி வா என் செல்வனே!

கர்:- புதிதாய் உதித்த தாயன்பி னாலே பொல்லாதன சொல்லு கின்றீர். அம்மா! மறுமுறையும் கூறுங்கள். என்னை எங்கே அழைக்கின்றீர்கள்?

குந்தி:- உன் வாஞ்சையினாலே பெரும் வேட்கை கொண்டுள்ள என் ஹிருதயத்திற்கு என் மகனே!

கர்:- அபாக்கியவானாகிய எனக்கு என் அன்னையின் இதயத்திலே இடமில்லை.

குந்தி:- கர்ணா.........

கர்:- அம்மா! மலைச்சிகரத்தின் மேற் படிந்துள்ள பனி கதிரவனின் கதிர் முத்தத்தினாலே கசிந்துருகுவது போல தங்களது கண்களின் கனிந்த பார்வையினாலே என் உள்ளம் உருகுகின்றது ஆயினும் எனது ஆன்மா தங்களது அழைப்பிற்குப் பதில் கொடுக்கிறது. கடந்த காலத்தின் காரிருள் நிகழ்ச்சிகள் இரவிலே கண்ட கனவைப் போல தெளிவற்றுத் தோன்று கின்றன. யமுனா நதியின் ஆழ்ந்த மார்பகத்திலே, அன்று பெற்ற அன்பை முற்றும் துறந்து தங்களது முதல் மகனை மிதக்க விட்டீர்கள். அன்று அன்னையின் அன்பைத் தர மறுத்த தாங்கள் இன்று என்னை அரச மகுடத்தைக் காட்டி மயக்க முயலுகின்றீர்கள்.

குந்தி:- பெற்றவள் செய்த பெரும் பாவத்தை மன்னித்துவிடு கண்ணே! உனது மன்னிப்பு எனது ஹிருதயத்தைச் சுட்டு அதன் பாவத்தை அழிக்கட்டும் என்னுடன்வா என் கண்மணி. இரவின் காரிருளால் மூடப்பட்ட உலகம் கதிரவனின் பொன் கதிர்களால் புது அழகு பெருவதைப் போல நீயிழந்த உரிமைகள் அனைத்தும் உயிர்ப்பிக்கப் பட்டு உனக்கு அளிக்கப்படும்.

கர்:- (திகைத்து) ஒருகாலும் இயலாது. அம்மா! அநாதி என்ற அவச்சொல்லுடன் அதர்மத்தையும் இணைத்துக் கொள்ள மாட்டேன். தாங்கள் வேரிலேயே பிரித்து விட்ட சகோதர பந்தம் இனி என்றும் தழைக்க முடியாதபடி மடிந்து விட்டது. யார் என்று அறியாத அநாதியாக இருந்த என்னை, அங்க நாட்டின் அரசனாக்கிய என் உயிர்க்கினிய நண்பன் சுயோதனனையா பிரிந்து வருவேன்? பெருமை மிகுந்த தன் உடன் பிறந்தோர் எல்லாம் என் ஏவலிலே நிற்கும் பெரும் பேரளித்தவனையா பிரிந்து வருவேன்? ஒருநாள் அவனில்லாக் காலத்திலே அவனது மனைவியாகிய பானுமதியுடன் சதுரங்கம் நான் ஆடிய காலத்திலே, துரியோதனன் வருவதறிந்து எழுந்த பானுமதியின் மேகலையை நான் கைப்பற்ற, அதிலிருந்து சிதறிய முத்துக்களை எடுக்கவோ கோக்கவோ எனக்கூறி என்னிடத்தே இன்முகங்காட்டிய வணங்காமுடி மன்னனையா பிரிந்து வருவேன். அன்று முதல் இன்றுவரை என்னை அமர வாழ்விலே வைத்தவனை அர்சுனனது தடுக்க முடியாத கொடிய கணைகளுக்கு அமர்க்களத்திலே இலக்காகி விட்டுப் பிரிந்துவிட்டால் இதுகாறும் நான் எனது திரண்ட தோள்களை வளர்த்த பலன் தான் என்ன தாயே? ஆருயிர் நண்பனை அமர்க்களத்திலே கைவிடுவதற்காக எனக்கு தாங்கள் தருவது அமுத சுரபியாயினும் அது துச்சம்.

குந்தி: ஆனல், உன் தாயின்அழு குரல் விண்ணப்பம் இந்தத் திறந்த வெளியிலே பலனின்றி ஒலித்துக்கொண்டிருக்க வேண்டியது தானா?

கர்: க்ஷத்திரிய தருமத்திற்குகந்த வேறு எதுவாயினும் கேளுங்கள். வணக்கத்திற்குரிய தங்களது பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன்.

குந்தி:- கர்ணா! வரப்போகும் பாரத யுத்தத்திலே அர்ச்சுனனை உனக்கு எதிராக வில்வளைப்

பான். அவன் காண்டாவனத்தை எரித்த காலத்திலே அங்கிருந்து தப்பி உன்னிடம் அடைக்கலம் புகுந்துள்ள கொடிய நாகத்தை நீ நாகஸ்திரமாக எற்றுக் கொண்டுள்ளாய். அதை நீ அர்ச்சுனன் மேல் ஒரு முறைக்குமேல் எவுவதில்லை என்று ஒருவரம் கொடு கண்ணே! அர்ச்சுனன் அல்லாத மற்ற நால்வரும் உனக்கு இளையவர்கள் என்று அவர்களிடம் போரிடேன் என்று ஒரு வரம் கொடு.

கர்:- ஒருமுறை தொடுத்த கணையை மறுமுறையும் தொடுப்பது மாசற்ற வீரம் அல்ல. எனினும் தாங்கள் விரும்பியவாறே, மஹா பாரத யுத்தத்திலே உலகம் புகழும் வெற்றிமாலை எனக்குக் கிடைப்பதாயினும் மறுமுறை நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மேல் தொடுக்க மாட்டேன். மற்ற நால்வரும் பிழைப்பார்கள்.

குந்தி: (தாங்கமுடியாத துயராலே குரல் சோர) விம்மியழுது நான் வேண்டிய இருவரங்களும் உன் வாழ்வையே நாசமாக்கும். ''விஷ வேள்ளம்'' எனத் தெரிந்தும் அவற்றை உவந்தளித்த வள்ளலே உலகுள்ளளவும் உன் புகழ் நிலவுவதாக!

கர்:- என்னை அணுகி இரப்பவர்களின் விருப்பத்தினல் என் வாழ்விற்கு ஆலகால விஷப் பலனே விளைந்தாலும் நான் அதை அமுதப் பெருக்காகவே அங்கீகரிப்பேன்.

குந்தி:- என் ஆருயிர்ச் செல்வனே, உன் மலர்க் கண்களுக்கு மையெழுதி, உன் மதிமுகத்தை முத்தமிட்டு, மடிமீதிருத்தி, மழலை மொழி கேட்டு, மகிழும் நற்பேறு எனக்கு வாய்க்கவில்லை. ஆனல் அன்று, அரக்கியினும் கொடிய நெஞ்சம் பூண்டவளாகி, யமுனையின் ஆர்த்தெழும் அலைகளுக்கிடையே உன்னைக் கைவிட்டு மறந்தேன். இன்றும், பாண்டவர் நலத்தையே கோரி, நாகபாசத்தை மறுமுறை விஜயன் மேல் எவாத வரம் பெற்று, காண்டீபனது கணையால் உன்னைக் களபலியாக்கவும் வழிகோலி விட்டேன். மாசற்ற மாணிக்கமே! வரங்களுக்கெல்லாம் ஒரு பெருங் கடலாய் வள்ளலே! தாயெனும் வடிவில் வந்த ஒரு பேயினும் தீயவளாய் என்னை உன் மனதார மன்னித்து விடு. உன் தாயின் பெருந்துயராலே பொங்கும் கண்ணீரை அங்கீகரி.

கர்:- அம்மா இனி வருந்தி என்ன பயன்? வினைப்படி எல்லாம் விளைகின்றன. தாயே! இரப்பவர்க்கு ஈந்துவப்பதல்லாமல் என் வாழ்விலே நான் எவரையும் ஒன்று இரந்தறியேன். ஆனல் கசிகின்ற கண்ணீரொடு தங்களது திருவடிகளிலே வீழ்ந்து நானும் இருவரங்கள் வேண்டி இறைஞ்சுகின்றேன்.

குந்தி:- கர்ண! நான் உனக்குக் கொடுப்பதற்கு இவ்வுலகிலே என்ன உண்டு?

கர்:- தாயே! காண்டீபனின் தேவகணைகளிலேயிருந்து என்னைக் காப்பாற்றும் வல்லமை மிகுந்த எனது தெய்வீகக் கவச, குண்டலங்களை அந்தணனுக வந்து இறைஞ்சிய இந்திரனுக்கு மகிழ்ந்து கொடுத்து விட்டேன். நாகக்கணையும் மறுமுறை தொடுக்கப்படப் போவதில்லை. எனவே வெறும் மனித பலம்

ஒன்றையே கொண்டு தான் மஹா வீரனாகிய அர்ச்சுனனை எதிர்க்கப் போகின்றேன். அம்மா! அர்ச்சுனனது பேராண்மை பொருந்திய கணைகளாலே நான் அமர உலகம் புகுவது உறுதி. அதுவரை பாண்டவர்க்கு நான் தமையன் என்ற மர்மத்தை அணுவளவும் வெளியாக்காதீர்கள். அவர்கள் அறிந்தால் குருகுல சக்ராதிபத்தியத்தை மனமுவந்து எனக்கு அளித்து விடுவார்கள். அதனை நான் உயிர்க்கினிய துரியோதனனுக்கே வழங்க நேரிடும். பின்பு, பாரதப் போர்க்களத்திலே நான் பலியான பின்னே என் உடலையெடுத்து தங்களது மடிமீதிருத்தி, தங்களது அழுகுரலினாலே அங்க நாட்டு அரசனாகிய கர்ணன் 'அநாதி' அல்ல என்பதை வெளிப்படுத்துங்கள். தங்களது தூய அன்பினால் பொங்கும் கண்ணீர்த் துளிகளாலே எனது ஆத்மா சாந்தியடையட்டும்.

குந்தி:- எழு கர்ணா! அப்பா, மகனே! நான் விடை பெறுகின்றேன். அப்பா, உனக்கு மரணத்தின் இருண்ட வாயிற் கதவுகளைத் திறந்து வைத்து விட்டு உயிர் சுமந்த பிணமான நான் விடை பெறுகின்றேன். என் கண்ணே!

கர்:- கவலை வேண்டாம், அன்னையே! பாரதப் போர்க்களத்திலே திரை வீசி ஓடப்போகும் இரத்த நதியின் மறு கரையிலே பாண்டவர்க்காக குருகுல ஏகாதிபத்தியத்தின் அரியணை காத்துக் கிடக்கிறது. வருந்தாதீர். அம்மா, அம்மா! கன்னித் தன்மைக்கு வந்த கடும் பழியை அஞ்சி அன்று காரிருளிலே என்னைக் கை விட்டீர்கள். இன்றும் மீண்டும் ஒரு முறை, விதியின் விளையாட்டாலே, வீரசுவர்க்கத்தை எதிர் நோக்கி நிற்கும் என்னை, என் ஆருயிர் நண்பனது வீரம் நிறைந்த தோள்களருகிலே, அவனை நான் என் கண்ணாரக் கண்டு, மனமார வாழ்த்தி பாரதப் போர்க்களத்திலே நெடுந் துயில் கொள்ளுமாறு கைவிட்டு விடுங்கள், அம்மா!

ஒரு தோழி

க. பஞ்சாபகேசன்

ராஜகுமாரி ஹேமமாலினி இது வரை தோழி சொல்வதொன்றும் சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளாம லிருந்தாள். திடீரென்று தோழி சிருங்காரம் ததும்பும் பேச்சை ஆரம்பித்து வைத்தவுடனே ஊன்றிக் கேட்க வாரம்பித்தாள்.

"ஹேமா! ராஜசபையில் அந்தக் கவி உன் தந்தையை ஏளனப் படுத்தி விட்டானானாலும் அவனுடைய நிகரற்ற அழகுக்காக — அவனுடைய காவிய லக்ஷணத்துக்காக — அவனை அவர் மன்னித்து அனுப்பிவிட்டாராம். நான்கூட அக்கவியைப் பார்த்தேன். ஹேமா, கோபிக்காதே! உடனே உன் ஞாபகம் தான் எனக்கு வந்தது......" என்றாள் தோழி மோஹனா.

"என்னடீ உளறுகிறாய்?" என்று கேட்டாள் ராஜகுமாரி.

"உளறவில்லை, உண்மையையே சொல்லுகிறேன். உன்னிடம் அழகு எப்படியிருக்கிறதோ, அதைவிட ஒரு படி அதிக சௌந்தரியமே அவன் பெற்றிருக்கிறான் ஆஹா! அந்தக் கவிக்குத்தான் எவ்வளவு மதுரமான சாரீரம் என்கிறாய்! எப்படிப்பட்ட நிமிர்ந்த பார்வை அவனுக்கு! அழகொளி வீசும் அந்தக் கவி தன்னுடைய கவர்ச்சி பொருந்திய புன்னகைகளால் அரசனுக்குப் பின்னாலே சாமரம் வீசுகின்ற பெண்களைக்கூட ஒரு க்ஷணம் தம்முடைய வேலையை நிறுத்தியிருக்கும் படியாகச் செய்து விட்டானாம்! நானும் என்னமோ என்று நினைத்தேன். எல்லோரும் சொன்னது உண்மையென்று பார்த்த பிறகு தான் தெரிந்தது......" என்றாள் மோஹனா.

"அடி மோஹனா! உனக்கு எப்பொழுதுமே வளவளவென்று பேசுகிற குணமிருக்கிறது. விஷயத்தைச் சீக்கிரமாகச் சொல்லேன். தந்தையிடம் அவன் ஏன் அப்படி நடந்து கொண்டானாம்?" என்று கேட்டாள் ஹேமா.

"சாதாரண விஷயம்தான். உன்னுடைய தந்தையிடம் வருகிற கவிகளெல்லாம் அவரை வானளாவப் புகழ்ந்து கவி பாடிப் பொன் பெற்றல்லவா செல்கிறார்கள்? அந்த விதிக்கு விலக்காகி விட்டான் இந்தக் கவி. இவன், 'மகாராஜா! மனுஷர்கள் ஒவ்வொருவரும் தவறு செய்வது சகஜம்தான்; ஒரு தவறு செய்வதிலிருந்து தவறியவன் உலகத்திலேயே கிடையாது. அப்படியே வருகிற கவிகளெல்லாம் உன்னுடைய புகழையே பாடுவதைக் கேட்டுக் கேட்டு, அவர்களுடைய உண்மைக் காவிய சம்பத்தின் தரம் என்னவென்பதை அறியாமலே இதுவரை உன்னுடைய பொருள் எல்லாம் விரயம் செய்து தவறு செய்து கொண்டு வந்தாய். அப்படி இருக்கிற உன் நிலைக்கு நான் இரங்குகிறேன். இந்த உண்மையைச் சொன்ன எனக்கு நீ என்ன தரப்போகிறாய்?" என்ற

பொருளுள்ள ஒரு அழகிய கவியைச் சொன்னனும்......''

"பைத்தியக்காரன்! பிறகு பொன் கிடைத்திருக்குமா இவனுக்கு? சரி, அப்புறமென்ன?..." என்று இடையிலே பேசினள் ராஜகுமாரி.

"சபையிலுள்ளவர்கள் காவிய உயர்வுக்காகவோ, அவனுடைய அமிர்த மயமான பாட்டுக்காகவோ எதற்காகவோ ஆரவாரம் செய்தார்களாம். ஆனல் அரசருக்குக் கோபமே வராததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்களாம்! அவர் ரொம்ப சாந்தமாக 'ஏ கவி! நீ அழகாக இருக்கிருய்; அற்புதமாகக் கவி பாடுகிருய்! உன் சௌந்தர்யத்துக்கும், கவித் திறமைக்கும் எதுவுமே ஈடாகாது. ஆகவே உன்னை வெறுங்கையோடு அனுப்புவதில் வருத்தமே கொள்கிறேன்'' என்ருராம்.

"சீக்கிரமாகச் சொல்வதற்கென்னடீ!"

"ஏனடீ அவசரப் படுகிருய்? அவன் அழகாயிருக்கிருன் என்று சொன்னதினல் ஆசை துள்ளுகிறதோ?" என்ருள் மோஹனு.

"இல்லா விட்டால் நீ ஏன் அவனைப் பற்றி இப்படி வானளாவப் புகழ்கிருயாம்?" என்ருள் ஹேமா.

"மேலே கேள் ஹேமா! உன் தந்தை அத்துடன் நின்றுவிடவில்லை. 'சௌந்தரிய சிகரத்தை எட்டிப் பிடித்திருக்கும் இளம் கவியே! உன் மனத்தகத்து வீசும் இளமை உணர்ச்சிகளுள் காதல் பாவமும் வளமுள்ளதாகவே இருக்க வேண்டுமல்லவா? உனக்கு மனைவியாக வாய்த்திருக்கிறவள் யாரோ? சொல்ல முடியுமா?' என்று கேட்டாராம்..."

ஹேமா இதைக் கேட்டுவிட்டு "தந்தைக்கு இதெல்லாம் எதற்கு? காதல் ரஸத்தைப் பற்றி நடுச் சபையிலா பேச்சு?" என்ருள்.

"கேளு, அதற்குக் கவி சொன்னனும். 'மகாராஜா! என் கவிதைச் செல்வியையே நான் தினந் தினம் பார்க்கிறேன். மற்றபடி என் தேவைக்கென்று ஒருவளை நான் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆனலும் மனுஷ்ய உணர்ச்சிகளுள் ஒன்ருகிற இந்தக் காதலைப் பற்றி நான் உமக்கு அறிவுறுத்தியே தீருவேன். ஏழு நாட்களில் வருகிறேன்!' என்று சொல்லி அவன் ராஜ சபையை விட்டுச் சென்ருனும்!" என்ருள் மோஹனு.

"அப்பா! இன்னும் ஏதாவது இருக்கிறதா, மோஹனு! அந்தக் கவியைப் பற்றிப் பேசுவதற்கு? என்று பரிகசித்தாள் ஹேமா.

"ராஜகுமாரி! நிச்சயமாக இந்த ஏழு நாட்களில் அவனுடைய இதய அரசியாகிய காவிய அரசிக்கு ஒரு தோழி ஏற்படுவாள் என்று நான் நினைக்கிறேன்!" என்ருள் மோஹனு.

"அப்படியென்ருல்?" என்று கேட்டாள் ஹேமா.

"தெரியாதவள் போலப் பேசுகிருயே ஹேமா! அவனுக்கு ஒரு மனைவி ஏற்படப் போகிருள்! நிச்சயமாக!" என்ருள் மோஹனு.

அலுத்துப் போனவள் போல, "போதுமடீ, இதென்ன பேச்சு? வா போகலாம்!" என்று ஹேமமாலினி சொல்லவும் இருவரும் எழுந்து அந்தப்புர நந்தவனத்தை நோக்கி நடக்க வாரம்பித்தார்கள்.

கவி ஹரீந்திரன் சிறு பிராயம் முதற் கொண்டு இயற்கையின் நடுவிலே வளர்ந்தவன். காட்டில் தனித்து விடப்பட்டிருந்த குழந்தையாகிய தன்னை எடுத்து வளர்த்த அவர் — குருவும் தந்தையுமான அவர் — தனது பதினாறும் பிராயம் வரைக்கும் அருகாமையிலுள்ள ஒரு நகரையாவது பார்க்க அழைத்துக் கொண்டு போனதில்லை. விகார மனுஷ உணர்ச்சிகளுள் ஒன்றுகூட இல்லாது மாசு மறுவற்று வளர்ந்தன ஹரீந்திரனின் உடலும் மனமும். அவை போலவே அவனுடன் கூடவே பிறந்திருந்த காவிய சம்பத்தும் இயற்கை இன்பத்தின் நடுவிலே பொலிவுற்று வளர்ந்து வந்தது. 'அழகு' பிறகு தானகவே வளர்வதற்குக் கேட்க வேண்டுமா?

விளையாட்டாக எத்தனையோ தடவை ஹரீந்திரன் இயற்கையின் அமைப்பை அவ்வப்போது சித்தரித்துக் கவி எழுதியிருக்கும் அநேக ஏடுகளை அவர் "உனக்கு அது எதற்கு ஹரீந்திரா? என்னிடம் கொடு!" என்று கேட்டு வாங்கிக் கொள்ளுவார். ஹரீந்திரனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. அதனிலும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது, அது போன்ற அநேக ஏடுகளை அவர் சேகரித்து வைத்திருப்பது!

ஆஸ்ரமத்தின் நடுவில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அன்னை சரஸ்வதி தேவியை இருவருமாக வலம் வந்த பிறகு "தேவி! பிற்காலத்திலே காவிய லோகத்திலே எவ்வளவோ பிரகாசிக்கப் போகிற இந்தப் பிள்ளையை ஏன் இவ்வாறு பிடாப்பிடியாக மனுஷ சகவாசத்திலிருந்து சில நாட்கள் பிரிக்கிறேன் என்பது நீ அறிந்தது தான். தாயே, அதற்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். இளமையில் மனசு சலிப்படையாமலிருக்குமானல், ஒரு மனுஷனைவிட அமரன் இருந்துவிட முடியுமா? அதிலும் என் பிள்ளைக்கு நீ காவிய சம்பத்து வேறு கொடுத்திருக்கிறய். ஆகவே இவன் நித்திய சுக வாசியாக வாழ இதுவே வழியெனத் தீர்மானித்து விட்டேன்!" என்று பிரார்த்தித்துக் கொள்ளுவார்.

அன்றைக்கு ஹரீந்திரனுக்குப் பதினறும் பிராயம் பிறக்கிறது. கண்களில் உள்ள பிரகாசம் அவனுடைய இளமையான காவிய உள்ளத்தின் பிரகாசமாகப் பொலிகிறது; அப்பழுக்கில்லாது கட்டுமஸ்தாக வளர்ந்திருந்த தேகம் 'பளபள' வென்று ஜொலித்துக் கொண்டிருந்தது. ஹரீந்திரனுக்கு இதுவரை அவனுடைய தந்தை வெறும் வெளுப்பான, சர்வ சாதாரணமான உடையையே அணிவித்திருந்தார். அது இப்போது இல்லை. தமது இளமையான நாட்களில் வாங்கியிருந்த புதிசுத் தன்மை போகாத காசிப் பட்டுடைகளை அவனுக்கு அன்று அணிவித்தார் அவர். இயற்கையழகுடன் உடையழகும் சேர்ந்து தகத்தகாயமாகப் பிரகாசித்தான் ஹரீந்திரன்.

ஹரீந்திரனைத் தழுவி முத்த மிட்டார் குரு. "ஹரீ! இந்த உடைகள் எவ்வளவு பிரகாசிக்கின்றன பார்! இதைப் போலத்தான் நீயும் பிரகாசிக்க வேண்டும், தெரிகிறதா?" என்றார் அவர்.

"தந்தையே! இவ்வுடைகள் நன்ருகத் தானிருக்கின்றன. ஆனல் இதுகளில் எனக்குச் சிறிது கூட ஆசை ஏற்படவில்லையே. இவ்வுடைகளில் வெள்ளமென ஓடும் பிரகாசம் — உடலை நோக

வைக்காத மிருதுத் தன்மை — ஆகிய இவைகளில் நிரம்ப உண்டு. ஆனால்......ஆனல்.......தந்தையே, என்னால் சொற்களில் அதைச் சொல்லிவிட முடியாது...'' என்று ஹரீந்திரன் சொல்லிவிட்டு உள்ளே போய் ஏட்டையும் எழுத்தாணியும் எடுத்து வைத்துக் கொண்டான். கையும் எழுத்தாணியும் கற்பனையும் கடகட வென ஓடிக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைப் பார்த்த அந்தக் கிழத்தந்தை ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். எவ்வளவு நேரம் போனதோ அவருக்கே தெரியாது. ''அப்பா! இந்தக் கவியைப் படித்துப்பார்!'' என்று ஹரீந்திரன் வணக்கத்துடன் அவர் கையில் ஏட்டை வைத்தபோது அவருக்கு நினைவு வந்தது.

ஏட்டிலே கீழ்க் காணும் பொருளுள்ள கவியிருந்தது:

''ஆம், பட்டுடைகளை அணிகிறோம். தேகத்திலே போர்த்தியிருக்கும்போது பட்டுடைக்கு மதிப்பு உண்டு; அணிந்திருப்பவனுக்கும் மதிப்பு உண்டு. பெட்டகத்தில் வைத்துப் பூட்டியிருக்கும்போது பெட்டிக்காவது அல்லது அவ்வுடைக்காவது மதிப்பு உண்டா? உண்டு என்று சொன்னால் மடமைதான்.

''நாலு பக்கமும் நீலக்கடல் சூழ்ந்து நட்ட நடுவிலே, ஒரு பவளத்திட்டு இருக்குமாயின் வானமாகிய கவிஞன் கண்களுக்கு அது பெரு விருந்தாக இருக்கும். பட்டுப் பூச்சிகளின் உடலத்திலே உருக் கொண்டுள்ள பட்டு அப்பூச்சிகளின் உயிர்களைச் சித்திர வதை செய்து எடுக்கப்படும் ரகஸ்யம் உலகம் அறிந்ததுதானே? ஆ! நான் உடுத்தியிருக்கும்படியான பட்டின் ஒவ்வொரு இழையிலும் கொலைப் பாதகமே நிறைந்திருக்கிறது. பட்டு உடுத்தியிருக்கும் கொலைஞனாகிய எனக்கு மதிப்புத் தருகிறீர்களே, உலகோரே, உங்கள் மடமையை — விஸ்தரிக்க, என் காவிய மனசு கூட வெட்க முற்றுச் சிணுங்குகிறதே!''

கவியைப் படித்த தந்தை, ஏட்டைக் கண்களில் ஒத்திக் கொண்டார். இனியும் ஹரீந்திரனை ஒளித்து வைத்திருப்பதில் உலக நன்மைக்குப் பாதகம் விளைவிப்பதாக அவருக்குத் தோன்றியது.

அன்று முதற்கொண்டு கவிஞனும், தந்தையும் புறப்பட்டார்கள். ஹரீந்திரன் ஊர் ஊராக, தேசம் தேசமாகப் பார்த்து ''இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா?'' என்று அதிசயப்பட்ட வண்ணமாக தன்னுடைய காவியத் திறமையையும் வளர்த்து வந்தான்.

இளமையில் ஏற்பட்டிருந்த நல்ல சாதகத்தினால் கவி ஹரீந்திரன், செல்வத்துக்கோ புகழுக்கோ கவி பாடவில்லை. ஆனால் அவனையறியாமல் அவன் கவி புகழிலேயே மிதந்து கொண்டிருந்தது. உலகத்தின் பிற்போக்கை எடுத்துக் கண்டித்து, நன் மார்க்கத்தையே எடுத்துக் காட்டிய கவி ஹரீந்திரன் அல்ப உலக ஆசைகள் மனத்திலே புக இடமே கொடுக்கவில்லை.

மூன்று வருடங்கள் ஓடி மறைந்தன. இம்மூன்று வருடங்களின் நாட்களில் ஒன்று அவன் வளர்ப்புத் தந்தையையும் விழுங்கி விட்டது. கவிஞன், கவிச் செல்வியே துணையாகக் கொண்டு அமிர்த புரத்தில் அந்தியிலே பிரவேசித்தான்.

ராஜ சபையை விட்டு வெளி வந்த கவி ஹரீந்திரன் தெருக்களில் நடக்க வாரம்பித்தான். அவனுடைய ஈடு இணையிலாத சௌந்தரியமும் நிமிர்ந்த நடையும் காவிய ஒளியும் சேர்ந்து வீதிகளில் சென்று கொண்டிருந்த அநேகரை வசீகரித்து மெய்மறந்து நிற்கச் செய்து விட்டன. ஆனால் கவி அவர்களைக் கவனிக்காமலே சிந்தனையில் ஈடுபட்டுச் சென்று கொண்டிருந்தான்.

என்ன ஆச்சரியம்! மனசிலே கவிஞர் குல மாதாகிய கவிச் செல்வியைப் பிரதிஷ்டை செய்து அவளுக்கு மானசிக பூஜை நடத்துகிறன் ஹரீந்திரன்! "கவிஞர்கள் கூடக் காவியம் பிறக்கும்; காவியத்தின் கூடவே காதலும் பிறக்கும்" என்று யாரோ சொல்லி அவன் கேள்விப் பட்டிருக்கிறன். மகத தேசத்திலே, "இவ்வளவு அழகாக இருக்கிறயே கவி, உனக்கென்று ஒரு அழகியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லையா?" என்று கேட்டார்கள். அப்பொழுது அப்படிப் பட்ட ஆசை தனக்கு ஏதுமில்லை என்று இறுமாந்திருந்த கவியின் நிலை இப்போது தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டது.

'சே! தந்தை இளமையில் என்னை அப்படி மனுஷ்ய உணர்ச்சிகளிலிருந்து பிரித்து வைத்திருக்கக் கூடாது!' என்று அவன் தன்னையே நொந்துகொண்டான்.

இவ்வாறாக எண்ணிக் கொண்டே வந்த கவி, ராஜகுமாரி ஹேமமாலினியின் பூங்கா வனத்துக்குள் தன்னையும் அறியாது பிரவேசித்து விட்டான்.

நேற்று அந்தி நேரத்தில் ஊருக்குள்ளே நுழைந்த போது அவனுக்கிருந்த உற்சாகம், இன்று அதே அந்திநேரத்தில் கவிஞனிடம் குடி கொண்டிருக்கவில்லை.

பறவைகள் கீச்சிட்டுக் கொண்டு தமது கூட்டை நோக்கிப் பறந்து கொண்டிருந்த அந்த வேளையில் — ஒளி மழுங்கிக் கை ரேகைகளைக் கூடக் கண்களுக்கு மறைத்து விடும்படியான அந்த வேளையில் — ஒளியும் இருளும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு மெய் மறந்திருக்கும்படியான அந்த வேளையில் — கவிஞன் பார்ப்பதற்கு வெகு ரம்யமாகக் கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும் மலர்களுள்ள அடர்த்தியான செடி கொடிகளையும் தாமரைகள் சோர்ந்து போயிருந்த தடாகங்களையும் தாண்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தான். இயற்கையின் அந்த அற்புத நடனத்திலே தன்னுடைய கவலையை மறந்திருந்தான் கவி ஹரீந்திரன்.

ஆ! 'சட்' டென்று கவி நின்று விட்டான். ஆமாம் அங்கே யார்? அந்த அருமையான குளத்தினருகில் — பேசிக் கொண்டிருந்த அவ்விருவர்களும் பெண் மணிகளே! ஹரீந்திரனுக்கு என்ன தோன்றியதோ, கரையினருகில் ஒரு செடி மறைவில் நின்று கொண்டு ராஜகுமாரி ஹேமமாலினியும் தோழி மோஹனவும் சம்பாஷிப்பதைக் கேட்கலானன்.

"ஆமாம், மோஹனு! நீ தான் சொல்லேன், அந்தக் கவிக்கு அவ்வளவு இறுமாப்பு இருந்திருக்கக் கூடாதல்லவா?" என்றுள் ஹேமா.

"பார்த்தாயா, அவனுடைய பேச்சை நீதானே ஆரம்பிக்கிருய்? நெஞ்சுக்குள்ளே உனக்கு எவ்வளவு விஷமம், ஹேமா?" என்றுள் மோஹனு.

"விஷம் தான் வைத்துக் கொள்ளேன்! சொல்லேண்டீ?"

"எதையடீ ஹேமா, சொல்லச் சொல்லுகிருய்?"

"இப்படித் தான் கேலி செய்வதோ, மோஹனு? இனிமேல் பார், நான் உன்னுடன் பேசப் போகிறேனு என்று!" கோபிப்பவள் போலப் பாவித்தாள் ஹேமமாலினி.

"அடாடா, மறந்து விட்டேனடீ......" என்று எதையோ மறந்து விட்டவள் போலச் சொன்னுள் மோஹனு.

"எதையடீ மறந்துவிட்டாய்?" என்று கேட்டாள் ஹேமா.

"ஹி ஹி! இப்பொழுது பேசியது யாராம்?" என்ருள் மோஹனு.

உடனே இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

கவிக்கு இது நரக வேதனையாக இருந்தது. 'அர்த்தமற்ற பேச்சைப் பேசுகிருர்கள்; சிரிக்கிருர்கள். எல்லாம் என் சம்பந்தமாக! அடக் கடவுளே!' என்று அவன் நினைத்தான்.

ஒளி இருளுடன் இட்ட சண்டையில் வெற்றியே பெற்றது. அந்திவேளைக்கப்புறங்கூட. வான வெளியில் சந்திரிகை உதயமாயிற்று. குளத்தின் நிர்மலமான நீரில் சந்திரிகையின் வட்டவடிவமான பிம்பம் மறைந்திருந்த இடத்திலிருந்து கவிக்கு நன்ருகத் தெரிந்தது.

மோஹனு ஆரம்பித்தாள்:

"ஹேமா! இனியும் என்னுல் விளையாட முடியாது; பொய் சொல்லவும் முடியாது. உண்மையாகச் சொல்லுகிறேன், இந்த சந்திரிகையின் சாட்சியாகச் சொல்லுகிறேன், அந்தக் கவி என் மனதை விட்டுக் கட்டாயமாக அகலவே மாட்டான்......" என்று கூறிக் கொண்டு கண்களைப் புதைத்த வண்ணம் விம்மி விம்மி அழ வாரம்பித்தாள் மோஹனு.

ராஜ குமாரிக்கு மிக ஆச்சரியமாகப் போய் விட்டது. தன்னுடைய அந்தரங்கத் தோழி மோஹனுவின் ஹிருதயத்தைத்தான் அந்தப் பொல்லாத கவி திருடிக் கொண்டு விட்டான் என்பது அவளுக்குத் தெரிந்தது. ஹேமாவின் மனசு — பெண் மனசு தானே! — இளக வாரம்பித்தது. மோஹனுவைத் தேற்றவாரம்பித்தாள் அவள்.

"ராஜகுமாரி! உன் அடிமைத் தோழியல்லவா நான்? உன் அடிமைச்சிதானே நான்? மரியாதையின்றி உன் எதிரே நடந்து கொண்டு விட்டேன்; என்னை மன்னிப்பாயா?" என்று ராஜகுமாரியின் கைகளைப் பிடித்த வண்ணம் கேட்டாள் மோஹனு.

"அடி அசடே! உன் காதல் நிறை வேறுவது சம்பந்தமாக நீ அநேக பொய்களைச் சொன்னுய்; என்னைக் கேலி செய்தாய். அதையெல்லாம் நான் பொருட் படுத்தினேனு? ஹேமா! எனக்கு இவையெல்லாம் தெரியாதா? வா, போகலாம். நீ நிம்மதியாகத் தூங்கு; பிறகு யோசித்துக் கொள்ளலாம்!" என்ருள் ராஜகுமாரி ஹேமமாலினி.

கவி செடி மறைவில் நன்ருகப் பதுங்கிக் கொண்டு படாடோபமில்லாது ஹேமமாலினியின் பின்னே சென்று கொண்டிருந்த மோஹனுவை நோக்கினுன்; குள

த்திலே சந்திர பிம்பத்தையும் பார்த்தான். ஒரு தீர்மானம் அவன் நெஞ்சில் காவிய அரசி யின் காதுகளுக்கு ஏறியது; சிந் தனை லோகத்திலே ஆழ்ந்து தனக் கென விடப்பட்டிருந்த ஜாகை யை நோக்கி நடக்க வாரம்பித் தான்.

★

இரவு நடு ஜாமமிருக்கலாம். விள க்கினடியில் உட்கார்ந்து ஹரீந் திரன், ஏடுகளின் மேலே எழுத் தாணியை வைத்து ஓட்டிக்கொண் டிருந்தான். ஆஹா! அத்தனைக் கற்பனை வெள்ளத்தை அவனுக் கென அள்ளி அள்ளிக் கொடுத்த ஈசுவரன் இனி கவிஞர்களே உல கில் உதயஞ் செய்ய லாயக்கில்லை என்பதாக எண்ணி விட்டானா?

இன்பமயமான காதல் ரஸக் கவிதை யெழுந்து கொண்டிருந் தது. எதிரே தந்தை கொடுத்துச் சென்ற சிலை வடிவத்தில் உயிர் கொண்டு விளங்கிய அன்னை சரஸ் வதி அந்த மஹா காவியத்துக்கு ஆசீர்வாதஞ் செய்து கொண்டி ருந்தாள்; அமர பதவி கொடுத் துக் கொண்டிருந்தாள்.

அதிகாலையிலே சங்கீதக் கலா ரஸிகனொருவன் உதயகீதம் பாடு வதும், கவி காவியத்தை முடிப் பதும் சரியாக இருந்தன.

வலது கையில் ஏடுகளுடனும் இடது கையில் போர்த்திருந்த உத்தரீயத்தின் நுனியுடனும் வெகு உற்சாகத்தோடு கவி ஹரீந் திரன் ராஜ சபையை நோக்கி நடக்க வாரம்பித்தான். ஏழு நாட்களில் முடிக்கப்பட வேண் டிய வேலையை ஒரே நாளில் முடி த்த சந்தோஷம் ஒருபக்க மிருக்க, தனது அவா ஒன்று பூர்த்தியாக வேண்டும் என்ற எண்ணத்துட னும் விரைவாகச் சென்று கொண் டிருந்தான் கவி.

ராஜ சபையை அடைந்த கவி அரசனுக்கு வணக்கம் புரிந்தான்.

"கவி ஹரீந்திரரே! உட்காரும். உமது காவியம் எந்த அளவிருக் கிறதோ? ஏது இவ்வளவு சீக் கிரம்?" என்று வினவினன் அர சன்.

"அரசே, காவிய வேலை முடி ந்து விட்டது!" என்ருன் ஹரீந் திரன்.

அரசனுடைய கண்களில் ஆச் சரியம் ஒளிவிட்டது.

"முடிந்து விட்டதா? இந்த சபை உமது குரலிலும் வதனத் திலும் ஈடுபட்டிருக்கிறது. படி யும் பார்க்கலாம்" என்ருன் அர சன்.

"அரசே! காவியம் 'காதல் ரஸம்' பற்றியது. குறிப்பாகத் தாங்கள் எனது "காதல்" சம் பந்தமான ஆராய்வைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். ஆகவே, படிக்க ஆரம்பிக்கு முன்பு என் னுடைய ஒரு வேண்டுகோளைத் தாங்கள் நிறை வேற்ற வேண்டு கிறேன்!" என்ருன் கவி.

"என்னவோ அது? சீக்கிரம் சொல்லும்!" என்ருன் அரசன்.

"வேந்தே, உமது மகள் ஹேம மாலினியையும் அவளது தோழி மோஹனவையும் இங்கே வர வழைக்கவேண்டுகிறேன். இந்தக் காவிய உற்பத்திக்கும் அவர்கள் காரணம்!" என்ருன் கவி ஹரீந் திரன்.

சபை திடுக்கிட்டது. ஆஸ்தான வித்வான்கள் எல்லோரும் "அரசே! இதென்ன அக்கிரமம்?

இவன் காதல் காவியத்துக்கு அந்தப்புரத்து ஸ்திரீகள் காரணமா? இந்தப் பைத்தியக் காரனை சபையை விட்டு வெளியேற்றுங்கள்!'' என்று அலறினார்கள்.

அரசன் குரல் கேட்டது:

''ஏ, மடமைமிகுக் கவியே! உன்னை நேற்றைக்கே தூக்கிலிட்டிருக்க வேண்டும். தப்பித்துப் போனவன் இன்றைக்கு பெருத்த அடாத செயலைச் செய்கிறாய்! யாரங்கே? இந்தக் கவியை இழுத்துக் கொண்டு போய் கழுவில் ஏற்றுங்கள்!'' என்றான் சற்றும் பொறுமையில்லாமல்.

சபை மறுபடியும் நடுங்கியது. உலகத்திலே காவிய சௌந்தரியமும், கவியின் சௌந்தரியமும் அழியப் போகின்றனவா? கவி ஹரீந்திரன் இராஜ சபையினின்றும் அப்புறப் படுத்தப்பட்டான். அவனது காவிய ஏடுகளும் அரசன் கைகளுக்குப் போய்ச் சேர்ந்தன.

அவசர அவசரமாக அரச சபையை விட்டுச் சென்ற அரசன் தன்னுடைய அறைக்குச் சென்று ஒவ்வொரு ஏடாகப் புரட்ட வாரம்பித்தான். 'அவனையறியாமலே அவன், மனசு பேசவாரம்பித்தது:

''என்ன பைத்தியக்காரன்! எவ்வளவு அழகான வருணனைகள்! எங்கே இந்த இந்திர ஜால மகேந்திர ஜாலங்களையெல்லாம் கற்றுக் கொண்டானோ? இவனுக்கு ஏன் இந்தக் கஷ்டம்?'' என்று எண்ணிக் கொண்டே வந்தவன் கவிதையின் கடைசிப் பகுதியைப் படித்த பிறகு ஸ்தம்பித்து விட்டான். ஆம், கடைசி இரு கவிதைகளில் கீழ்க்காணும் பொருளிருந்தது:

''பிறப்பிலே நான் யார் மகன் என்பது எனக்குத் தெரியாது. இளமையிலே காதலில் சிக்கடையாமல் வளர்ந்த இன்ப நாட்கள் எனக்கு நினைவில்லை. ஆஹா! நேற்று அருமையான பூங்காவனத்திலே ஹேமமாலினியும் மோஹனாவும் பேசிக் கொண்டிருந்த போது, மோஹனாவின் மோஹன ஒலியின் தினையளவாவது என்னால் ஞாபகப் படுத்திக் கொள்ள முடிந்ததா? கிடையவே கிடையாது! என் கவிதைச் செல்வி காதல் மதுவை உண்ண வேணும் என ஆசைப் படுகிறாள்; மோஹனாவும் ஹரீந்திரனின் இதயத்தை உண்ணவேணும் என ஆசைப்படுகிறாள். இந்த ஆசை தான், ஹே ராஜனே, என்னுடைய 'காதல்' —மோஹனாவின் 'காதல்' கூடத்தான்!

''அரசே! ஹேமா – உமது மகள் தான், – செல்வ போகத்திலேயும் பதவி போகத்திலேயும் இருப்பவள். அவளுடைய அடிமைச்சியான மோஹனாவுக்கு இதயம் இருந்தது; பதவிக்கோ உயர்வு தாழ்வுக்கோ ஒன்றிலும் கலப்படாததாகிய 'காதலை' – தனது உள்ளத்தை எனக்குக் கொடுத்து விட்டாள். அரசே, உமது மகளுக்குத் தெரியும், நேற்று சந்திரிகையினடியில் தோழியை ராஜகுமாரி ஆஸ்வாசப் படுத்தினாள். 'காதல்' அப்படிக்கு மிக உயர்ந்ததாகும். உயர்ந்த காதலுணர்ச்சியை எனக்கு உற்பவித்த உமது மகளையும் இந்த அரச சபையிலே கூப்பிட்ட கவிஞன் ஹரீந்திரன் கௌரவிக்கிறான்!''

அரசனுக்கு அதற்கு மேல் படிக்க முடியவில்லை. அவனுடைய மனமும் உடலும் ஒருங்கே பதறின.

"யார் அங்கே?" என்ருன்.

ஒரு பணிப் பெண் வந்து நின்ருள்.

"கவி ஹரீந்திரனைக் கழுவினின்று விடுவிக்கச் சொல்லு!" என்று ஒன்றும் புரியாமல் உளறிக் கொட்டினுன் அரசன்.

"வெறும் உடலையா விடுவிக்கச் சொல்லுகிறீர்கள் அரசே" என்ருள் பணிப் பெண் வேறு பக்கம் திரும்பிக்கொண்டு; அவள் கண்களில் கண்ணீர் பொங்கியது.

"என்ன?" என்று கேட்ட அரசன் மயங்கி ஆசனத்தில் வீழ்ந்து விட்டான்.

ஆம். சௌந்தரியமும் காவியமும் கழுவிலேற்றப்பட்ட கவி ஹரீந்திரனின் உடலத்தினின்றும் இரத்தம் பிரவாகமாக ஓடிக் கொண்டிருந்தன. அவன் உடலடியில் ஒரு பேதை அலறிக்கொண்டிருந்தாள். அவள் மோஹனை என்று சொல்ல வேறு வேண்டுமா?

★

இந்த சம்பவம் நடந்து பல வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் அமிர்த புரத்தில் ஒரு திருவிழா நடந்தது. மகத தேசத்திலிருந்து வந்த ஒரு கால் நடைப் பிரயாணி அமிர்த புரவாசி ஒருவனைப் பார்த்து, "இங்கு என்ன உற்சவம்?" என்று கேட்டான்.

"இன்று கவியின் திருநாள்" என்று பதில் கிடைத்தது.

"என்னப்பா, நீ வேடிக்கையா சொல்லுகிருய்? எந்தக் கவியினுடைய திருநாள் இங்கு இவ்வளவு விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது?" என்று கேட்டான் மகத தேசவாசி ஆச்சரியத்தோடு.

"கவிஞர் ஹரீந்திரர்!"

"ஹரீந்திரரா? ஆஹா! எங்கள் தேசத்திலே அவருடைய பாடல்களைச் சின்னஞ் சிறு குழந்தைகள் கூட இன்பமுடன் இசைக்குமே! அந்த மஹானைப் பார்க்க முடியுமா?" என்று ஆவலாகக் கேட்டான் மகத தேசவாசி.

"அவருடைய மனைவியாரைத் தான் பார்க்க முடியும்!" என்ருன் அமிர்த புரவாசி.

"என்ன, ஹரீந்திரர் விவாகம் செய்து கொண்டாரா?"

"ஆம், அதிலும் இறந்த பிறகு அவர் விவாகம் செய்து கொண்டாரப்பா!" என்று சொன்ன போது அந்த அமிர்த புரவாசியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

அந்தச் சமயம் நாற்சந்தி முனையிலே நிறுவப்பட்டிருந்த கவி ஹரீந்திரனுடைய சிலைக்குத் திலகமிட்டு மாலை போட்டுக் கொண்டிருந்தாள் மோஹனை — ஆம், பூலோகத்திலே ஹரீந்திரன் விட்டுச் சென்றிருந்த அழியாத அவனுடைய இதயச் செல்விக்கு ஒரு தோழியாகிய மோஹனை!

★

ஆசிரியர்:
சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

சதீஷ் ஒன்றும் தடை செய்ய வில்லை. அவன் பேசாமலிருந்தான். அவனுடைய உடம்பு குணமான பிறகு தான் விவாகம். சாவித்திரியும் மௌனமாக இருந்தாள்.

புறப்படும் தினத்தில் உபேந்திரன் சிறிது கவலையுடன், "சதீஷ் உனது உடம்பு பூர்ண குணமடைய வில்லைப்போல் தெரிகிறது. நேற்றிலிருந்து ரொம்ப விசனமாகக் காணப்படுகிருய்" என்ருன்.

"இல்லையே, நன்ருகத்தானிருக்கிறேன்."

அதற்கப்புறம் சாவித்திரி அறைக்குள் வந்தாள். கண்கள் சிவந்து வீங்கிப் போயிருந்தன. அவள் அருகில் வந்து சதீஷிடம், "சொன்னதை மறக்க மாட்டீர்களே?" என்ருள்.

"மறக்கமாட்டேன்."

"கஞ்சா, சாராயம் இவைகளைத் தொடக்கூடாது."

"சரி"

"என்னைக் கேட்காமல் மந்திர தந்திரத்தினிடமும் போகக் கூடாது."

"இல்லை"

"உடம்பு பூர்ண குணமடையும் வரையிலும் இரண்டு நாளைக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும்."

"சரி, எழுதுகிறேன்"

"சரி, நான் போகிறேன்" என்று சாவித்திரி கூறிவிட்டு அவனை வணங்கிவிட்டுச் சென்ருள்.

படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்த சதீஷ் படுத்துக் கொண்டான். வழி அனுப்புவதற்காக கீழே கூட இறங்கிச் செல்ல முயற்சிக்கவில்லை.

வெளியில் இரண்டு டோலி தயாராக இருந்தன. உபேந்திரன், டாக்டரிடம் ஏதோ மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தான்.

சாவித்திரி ஒரு போர்வையைப் போர்த்திக்கொண்டு மெதுவாக வந்து கொண்டிருந்தாள். அப்போது பிஹாரி ஓடிவந்து, "பாபு ஏதோ அவசர காரியமாகக் கூப்பிடுகிருர்கள்" என்ருன்.

சாவித்திரி திரும்பிப் போனுள். உபேந்திரன் பேசிக் கொண்டிருந்தாலும் இதைக் கவனியாமல் போகவில்லை. கடைசி நேரத்தில் ஏதாவது சதீஷ் தடைசெய்துவிடுவானே என்று சாவித்திரி பயந்து கொண்டுதானிருந்தாள். சதீஷ் மறுபக்கம் முகத்தைத் திருப்பி படுத்துக்கொண்டிருந்தான். கட்டிலருகில் சென்று சாவித்திரி சிரித்துக்கொண்டு, "என்ன விஷயம்? எங்களை இந்த ரயிலுக்குப் போக விடமாட்டாயா?" என்ருள்.

சதீஷ் உடனே அவள் போர்வையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, "உட்காரு, நான் உன்னைப் போக விடமாட்டேன். இது என் கிராமம்; என் வீடு. என் விருப்பத்திற்கு மாருகப் பத்து உபேந்திரனுலும் அழைத்துப் போக முடியாது" என்ருன்.

சாவித்திரி திடுக்கிட்டாள். சதீஷின் பார்வை இயற்கைக்கு மாருக இருந்தது.

பிடிவாதத்தால் இவனிடம் காரியம் கைகூடாது என்பதைத் தெரிந்து கொண்டாள். அவள் கட்டிலின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு அன்புடன், "ச்சீ! பேசுவதைப் பாரு! அவர் ஒன்றும் கட்டாயப்படுத்தி அழைத்துக் கொண்டு போகவில்லை. அவருக்கு மனைவி இல்லை, சகோதரன் இல்லை, நீயும் இல்லை, இம்மாதிரி பலவீனமான சமயத்தில் அவரைக் கவனித்துக்கொள்ள யாருமில்லை. இதனுல்தான் அவர் என்னை உன்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போகிருர். இதைத்தான் பலாத்காரம் என்கிருயா?" என்ருள்.

சதீஷ் கோபத்துடன், "இது பொய், தந்திரம், அவர் தனது பந்து ஜோதிஷ் பாபுவுக்காக உன்னை அப்புறப் படுத்தப் பார்க்கிருர். இரண்டு நாளாக நன்கு யோசித்துப் பார்த்தேன். யார் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளுகிருனே அவனுக்கே மேலும் மேலும் தீங்கு இழைப்பது. என்ன காரணமானுலும் சரி, நான் உன்னைப் போக விடமாட்டேன். இதைப்பற்றி தர்க்கம் செய்து மூளையைக் குழப்பித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. நீ வரமுடியாது என்று பிஹாரியிடம் கீழே சொல்லி அனுப்பிவிடு......" என்ருன்.

சாவித்திரி உடனே அவன் வாயை மூடிக்கொண்டு, "உனக்கென்ன பைத்தியமா? இது நன்ருயில்லை. நீ என்னை வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிருய்?" என்ருள்.

"நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்வேன்"

"அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்."

"உன் சம்மதத்தைப் பற்றிக் கவலை இல்லை."

சாவித்திரி பயத்துடன் சிரித்துக்கொண்டு, "என்னைப் பலவந்தமாகக் கலியாணம் செய்து கொள்வாயா?" என்று கூறிவிட்டு அவன் நெற்றியோரம் விழுந்து கிடந்த ரோமத்தை அன்புடன் ஒதுக்கி விட்டுக்கொண்டு, "ச்சீ! இப்படியெல்லாம் மனதில் கூட நினைக்காதே. நான் விதவை

குடும்பத்தை விட்டு வெளியேறிய வள். சமூகத்தால் ஒதுக்கப்பட்ட வள். என்னைக் கல்யாணம் செய்து கொள்வது எத்தகைய துர்ப்பாக் கியம் என்பது உனக்குத் தெரியாது. சோக நெருப்பில் வெந்த ஒரு தியாகி எனக்கு அடைக்கலம் கொடுக்க அழைத்துப் போகிறார். அவருடைய இந்த மங்களகரமான காரியம் இன்று உனக்குப் புரிய வில்லை. அதனால் வீண் அவதூறு சொல்லி உன்னைச் சிறுமைப் படுத்திக்கொள்ளாதே'' என்றாள்.

கண்ணீர் இன்று அவனைச் சாந்தப் படுத்தவில்லை. அவன் அதிக கோபத்துடன், ''எல்லாம் பொய்! இப்படியே உன்னிடமிருந்து என்னைப் பிரித்து வைத்து என்னைப் படுகுழியில் ஆழ்த்தி விட்டாய். நீ உலகத்தில் யாருக்கும் தாழ்ந்தவளல்ல என்று உபேந்திர அண்ணாவே சொல்லியிருக்கிறார். இது உண்மை'' என்றான்.

''அல்ல அது சரியல்ல. அண்ணா இப்பொழுது சமூகத்தில் இல்லை. அதனால் அவருடைய உண்மையான பேச்சுக்கூட பிறருடைய மனோபாவப்படி உண்மையற்றதாகி விடுகிறது. உண்மையானாலும்சரி, பொய் யானாலும் சரி. நான் சமூகத்தை விரும்பவில்லை. உன்னை விரும்புகிறேன் என்று நீ சொல்வாய். ஆனால் என்னால் இப்படிக் கூற முடியாது. சமூகமும் என்னை விரும்பாது, என்னை ஏற்றுக் கொள்ளாது, இது எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் சமூகத்தை விரும்புகிறேன், அதை ஏற்றுக் கொள்கிறேன். கடமைக்கு முன், காதல் பெரிதல்ல என்பது எனக்குத் தெரியும். சமூகம் ஏற்றுக்கொள்ளாத பெண்ணை எந்த ஆணுக்கும் ஏற்றுக் கொள்வதற்கு உரிமை கிடையாது. பாரு, இதில் இனிப் பிரவேசிக்காதே''

சதீஷ் அவளுடைய இரு கரங்களையும் பிடித்து அழுத்திக் கொண்டு, ''இவைகளை எல்லாம் கேட்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் என்னிடம் சக்தி கிடையாது. நீ என்னைக் காதலிக்கிறாயா, இல்லையா என்பதை என் மேல் ஆணையிட்டுச் சொல்லு'' என்று கூறிவிட்டு பதிலுக்காக அவள் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது துக்கம் தோய்ந்த முகத்தைக் காணவும் சாவித்திரி கண்ணீர் வடித்தாள். ''காதலிக்காதிருந்தால் உன்னிடம் எனக்கு இவ்வளவு உரிமை ஏது? எதற்காக எனக்கு இத்தனை சுகமும், துக்கமும்? இதனால் உனக்கு எவ்வளவோ துக்கத்தைக் கொடுத்து விட்டேன். ஆனால் என் தேகத்தை மட்டும் உன்னிடம் ஒப்படைக்க முடியாது'' என்று கூறிக் கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டு, ''நான் இன்று உன்னிடம் ஒன்றையும் ஒளிக்கப்போவதில்லை. இந்த உடல் இதுவரையிலும் குற்ற மற்றது. ஆனாலும் இதை உன்னிடம் ஒப்படைக்க மனம் துணியவில்லை. இந்தஉடல் அநேகரை மனம் மயங்கச் செய்திருக்கிறது. அதை என்னால் மறந்துவிட முடியாது. இந்த உடல் யாருக்குச் சேவை செய்தாலும் சரி, ஆனால் உனது பூஜைக்கு ஏற்றதல்ல, உன்னிடம் இவ்விதம் ஆழ்ந்த காதல் கொண்டிராவிட்டால் உன்னை விட்டு நான் போக வேண்டியே இராது' என்று கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்தாள்

சதீஷ் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, ''நான் உனது உடலை விரும்பவில்லை. உனது

மனதைத்தான் விரும்புகிறேன். அதனல்தான் உன் மனம் யாரையும் விரும்பியது கிடையாது. அது என்னைச்சேர்ந்தது'' என்ருன்.

''அது யாரையும் விரும்பியது கிடையாதுதான். அது உன்னுடையதுதான். அதன்மேல் உனக்குப் பூரண அதிகாரம் எப்போதும் உண்டு'' என்று கூறிவிட்டு மார்பின்மீது கையை வைத்துக் கொண்டு, ''நான் உயிருள்ள வரையிலும் உனது அடிமையாகவே இருப்பேன்'' என்ருள்.

சதீஷ் உடனே அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''உன்னுடைய இந்த வார்த்தைகளே எனக்குப் போதும். இதைவிட அதிகமாக நான் ஒன்றும் விரும்பவில்லை'' என்ருன்.

அவன் பேசிய தோரணையைக் கண்டு சாவித்திரி துக்கமடைந்தாள்.

அதே சமயம் பிஹாரி கதவுக்கு வெளியில் இருந்து கொண்டு, ''நேரமாகிறது என்று பாபு சொல்கிருர் அம்மா'' என்ருன்.

''இதோ வருகிறேன்'' என்று கூறிவிட்டு சாவித்திரி எழுந்தாள். சதீஷ் அவளைப் பலமாகப்பிடித்துக் கொண்டு, ''உன்னிடம் நான் அதிகமாக ஒன்றும் கேட்கவில்லை. எனக்கு ஒரு பிச்சை கொடுத்துவிட்டுப் போ'' என்ருன்.

''உனக்குக்கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது? சரி, என்ன வேண்டும் சொல்லு?''

''நான் வேறு ஒன்றும் கேட்கவில்லை. யாராவது கேட்டால் என்னை உன் கணவன் என்பதை ஒப்புக் கொள்கிருயா?''

சாவித்திரி இதைக்கேட்டுச் சிரித்துக் கொண்டு, ''எதற்காக இப்படிச் சொல்லச் சொல்கிருய்? சாக்ஷிகள் தேடிக் கொண்டு என்னைக் கட்டாயப்படுத்தி வீட்டுக்குள் அடைத்துவிடப் பார்க்கிருயா?'' என்ருள்.

''உனது இதயத்துள் வசிக்கிற அந்தர்யாமிதான் நம்மிருவருக்கும் சாக்ஷி. வேறு சாக்ஷி எனக்கு வேண்டியதில்லை. வெளியார் சாக்ஷியால் உன்னை வீட்டிற்குள் இழுத்துக் கொள்வேன் என்ற பயமா உனக்கு? இன்று என்பலத்தாலேயே உன்னை வீட்டிற்குள் வைத்துக் கொண்டால்த் தான் என்னைத் தடுப்பவர் யார்?''

சாவித்திரி பேசாமலிருந்தாள். மீண்டும் சதீஷ், ''உன் விருப்பத்திற்கு மாருக நடப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை. இதனல் எனது மரியாதை குறைகிறது'' என்ருன்.

சாவித்திரியின் முகம் துக்கத்தால் வாடிப்போயிருந்தது. அவனது கோபத்தைக் கண்டு பேசாமலிருந்து கொண்டாள். ''உபேந்திர அண்ணு ஒரு கல்சாமி. ரத்த மாம்சங்களுடைய தேவலோகத்துச் சாமியாயிருந்தால் நான் அவரோடு உன்னை அனுப்பி வைக்கமாட்டேன். சரி, இன்று போ. ஆனல் அதிகநாள் அங்கிருந்தால் எனக்கு கெடுதல்தான்'' என்ருன்.

அத்தியாயம் நாற்பத்தி மூன்று

சாயங்காலம் ஐந்தரை மணிக்கு விறகுக்கடை மூடிய பிறகு திவாகர், ஆராகானில் ஒரு வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தான். தூசி படிந்து அவன் ஆடைகள் அழுக்கடைந்திருந்தன. ஒரு

பழைய சொக்காயைப் போட்டுக் கொண்டிருந்தான். அது பல இடங்களில் கிழிந்து போயிருந்தது கால் செருப்புகளும் வார் அறுந்து இருந்தன. திவாகர் இப்பொழுது பழைய திவாகராக இல்லை. அவனைச் சுலபத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. நாள் முழுதும் சாப்பிட வில்லை. இந்நிலையில் அவன் காமினி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். கீழ்தளத்தில் நான்கு ரூபாய் வாடகையில் ஒரு அறையில் இருந்து வருகிறான். சிறிய கூடத்தில் ஒரு மூலையில் சமைத்துக் கொள்வது, இன்னொரு மூலையில் விறகுகள், இன்னும் மற்ற சாமான்களையும் வைத்துக் கொள்வது.

திவாகரின் காலடி ஓசையைக் கேட்டு பக்கத்து அறையிலிருந்த வீட்டுக்காரி வெளியில் வந்து, "வந்து விட்டீரா? பாபு, நீங்கள் என்ன இப்படிச் செய்கிறீர்கள்? சமைப்பது கிடையாது குளிப்பது கிடையாது. இரவு பகலாக சண்டை யிட்டுக்கொண்டும், பல்லைக் கடித்துக் கொண்டுமே இருக்கிறீர்கள்?" என்றாள்.

திவாகர் தலையைக் கீழே குனிந்து கொண்டான். அவன் மத்தியானம் சாப்பிடவந்தவன் கிரணமயிடம் சண்டை யிட்டுக்கொண்டு ஒன்றும் சாப்பிடாமல் போயிருந்தான். அவன் நிலையைக் கண்டும் வீட்டுக் காரியின் கோபம் தணியவில்லை. அவள் மறுபடியும், "இவ்வளவு கொடுமை செய்கிறாயே, அவள் நீ தொட்டுத்தாலி கட்டியவளா? வெளி வந்த பிறகு பழையபடியே இருக்கிறாள். நாலைந்து மாதம் அவளுடைய நகைகளை எல்லாம் விற்று சோறு போட்டாள் வீட்டு வாடகை கொடுத்தாள். இப்போது உனக்கு வேலையும் கிடைத்து விட்டது. உனக்கு அவளோடு இருக்க இஷ்ட மில்லாவிட்டால் தனியாகப் போய்விடு. எதற்காக அந்த அநாதையை இம்சிக்கிறாய்? இவ்வளவு அழகான பெண் உண்ண உடுக்க இன்றி ஒட்டி உலர்ந்து விட்டாள்''' என்றாள். பிறகு சிறிது பொறுத்து, "நீ இப்படி அடைத்து வைத்திருக்காவிட்டால் அவளுக்கென்ன குறைச்சல்? அந்தத் தெருமுனையில் இருக்கிற சேட் தினமும் எனக்கு ஆள் விடுகிறான். உடல் முழுதும் தங்கத்தால் மறைத்து விடுகிறேன் என்று சொல்கிறான். பெண்ணுக்கு என்ன கவலை பாபு? வாழைப் பழம் வேண்டாமென்கிற குரங்கு உண்டா? சரி, போ. இத்தனை நாளாக நான் சொல்லியதைக் கேள். இத்தனை நாளும் இருந்தது போதும். இனி உங்களுக்குள் ஒற்றுமை உண்டாகாது" என்றாள்.

திவாகர் அவள் பேசுவதை நிறுத்தி, "இரு இரு. எனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவளுடைய மனம் எப்படி யிருக்கிறது? இது தான் எனக்குத் தெரியவேண்டும். நீ தானே அவளுக்கு கையாள்!" என்றான்.

இதேசமயத்தில் கிரணமயி அறையை விட்டு வெளியில் வந்தாள். நிலை கெட்டாலே மனிதனது உடலும் உள்ளமும் எத்தகைய மாறுதலை அடைந்து விடுகிறது!

இவள்தான் அந்த சௌந்தர்யவதியான கிரணமயி என்று யார் தான் இன்று கூறுவார்கள்!

ஒரு ஆறு மாதத்திற்கு முன், ஒரு நாள், முன் பின் தெரியாத ஒரு அழகிய வாலிபனை அழகு, காதல் என்ற பொய் வலையில் சிக்க

வைத்து, சமூகம், மனிதத்தன்மை முதலியவைகளை காலால் நசுக்கி விட்டு இங்கு அழைத்து வந்தாள். ஆனால் இன்று அவளே அந்தப் பொய் வலையில் விழுந்து விட்டாள்.

இன்று அவன் உள்ளத்தில் உதிக்கும் ராக்ஷச உணர்ச்சிகளைச் சமாளிப்பதற்கு இரவு பகல் போரிட்டு வந்தாள்.

அவளது கருங் கூந்தல் காய்ந்து கலைந்து கிடக்கிறது. பழைய கிழிந்துபோன சேலையை உடுத்தியிருக்கிறாள். முகத்தில் லேசாக சுருக்கம் விழுந்திருக்கிறது. அங்கங்களின் பலவீனத்தைப் பார்த்தால் கண்ணீர் வந்துவிடும். மூதேவியைப்போல தூணருகில் நின்று கொண்டு இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அவளைப் பார்த்ததும் திவாகர் ஓநாயைப்போலக் கத்தினான்.

அடடா! ஈனத்தன்மை தனது எல்லையை அடைந்து விட்டது. திவாகர் இம்மாதிரி வாய்திறந்து பேசுவான் என்று நம்ப முடியாது. அவனேதான் கோபத்துடன், "ஏ மன்னி! இது உண்மை தானா? இனி மார்வாடி, முஸல்மான், பர்மாக்காரன், சென்னைக் காரன் இவர்களெல்லாம் வேண்டுமா? இதற்காகத்தான் இப்படிச் சண்டை போடுகிறாயா? இதனால் தான் என்னைக் கண்டால் பிடிப்பதில்லையா?" என்றான்.

கிரணமயிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் மௌனமாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் வீட்டுக்காரி அதற்குப்பதில் அளித்தாள். அவள் ஒரு அடி முன்வந்து கையை ஆட்டிக்கொண்டு, "ஏ வேண்டாம். நாங்கள் கட்டின மனைவி அல்லவே ஒருத்தனிடமே குடும்பம் செய்ய? நாங்கள் சுதந்திரர்கள், சுகம் கொடுக்கிறவனிடம், நகை நட்டு பணம் காசு கொடுப்பவனிடம் போவோம். இதில் வெட்கமென்ன!" என்றாள்.

திவாகர் உரக்க, "சும்மா இரு போக்கிரி, கழுதே! அவள் சொல்லட்டும். நீ என் நாய் மாதிரி சத்தம் போடுகிறாய்?" என்றான்.

வீட்டுக்காரி மிகுந்த கோபமடைந்தாள். அவனை அடிப்பதற்குத் தயாராகி "ஏண்டா, டே! என் வீட்டில் இருந்து கொண்டு என்னையே நாய் என்று சொல்கிறாய்? போடா வெளியே!" என்றாள்.

திவாகரும் கோபமடைந்தான். ஆறு மாதத்திற்கு முன் திவாகர் ஒரு தாசியுடன் மானங்கெட்டதனமாக விவாதம் செய்து கொண்டிருப்பான் என்று யாராலும் கற்பனை கூடச்செய்திருக்க முடியாது! இப்போதும் அவன் உபேந்திரனும் சுரபாலாவும் அருமையாக வளர்த்திய திவாகர் அல்ல. ஆகையால் அவனும் கண்கள் சிவக்க, "நான் ஏண்டி போறேன்? வாடகை கொடுப்பதில்லை?" என்றான்.

"அடே அப்பா! ரொம்ப வாடகை கொடுத்துட்டே! பெண் பிள்ளை சம்பாத்தியத்தில் இத்தனை ஜம்பமா! செத்துப்போவதற்கு ஒரு முளக்கயிறு கூடக் கிடைக்கவில்லையா? இங்கிருந்து போய்விடு இல்லாவிட்டால் துடப்பத்தால் அடித்து விரட்டுவேன்."

"சரி, போய் விடுகிறேன்" என்று கூறிக்கொண்டு ஓடிப் போய் கிரணமயினுடைய கழுத்தை நன்கு அழுத்தினான். நாள் முழுவதும் பசியால் களைப்படைந்

திருந்த கிரணமயினால் தாக்கு தலைச் சமாளிக்க முடியவில்லை. அவள் வாசற்படிமேல் சுருண்டு விழுந்தாள்.

உன்மத்தம் அடைந்த திவாகர் தடியால் அடித்துக்கொண்டு, "ஓடு! உன் மார்வாடியிடம் ஓடு!" என்று கூறினான்.

வீட்டுக்காரி பெருத்த கூச்சலிட்டாள். தொழிற் சாலையிலிருந்து வந்து கொண்டிருந்தவர்கள் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு, ஓடி வந்தார்கள். வீட்டுக்காரி பறந்து பறந்து புகார் கூறினாள். "ஐயோ! அப்பாவிப்பெண்ணை அடித்துக் கொன்று விட்டானே! கொன்று விட்டானே. இந்தப் பாவிப்பயலை உதைத்துத் துரத்துங்கள். இவன் என்வீட்டில் வேண்டாம்!" என்றாள்.

வீட்டுக்காரியின் புகாரைக் கேட்டு ஓடிவந்தார்கள். அனைவரும் வீட்டிற்குள் நுழைய தயாரானார்கள். இதற்குள் கிரணமயி எழுந்து நின்று கொண்டு கோபத்துடன், "எந்த வீட்டில்தான் சண்டை சச்சரவு இல்லாதிருக்கிறது? என்னை அடித்தால் உங்களுக்கென்ன? போங்கள் அப்புறம்" என்று கூறிவிட்டு அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

சனங்கள் தங்கள் வீரத்தைக் காண்பிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போகவே ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். வீட்டுக்காரி வாய்மேல் கையை வைத்துக்கொண்டு "இது என்ன கூத்து?" என்றாள்.

கிரணமயி தீக்குச்சியை எடுத்து விளக்கேற்றினாள். மரவீடு அகலமில்லாவிட்டாலும் நீளமாக இருந்தது. ஒரு ஓரத்தில் கயிற்றுக் கட்டிலில் திவாகரின் படுக்கையும் மற்றொரு ஓரத்தில் பலகைமீது கிரணமயி படுக்கையும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. காலடியில் சட்டிகள் ஒன்றின்மேல் ஒன்று வரிசையாக அடுக்கிவைக்கப் பட்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் கரண்டி, வாளி, முதலியவைகள் கிடந்தன. இவைகள்தான் இவர்களுடைய குடும்ப சாமான்கள்.

விளக்கேற்றி வைத்து விட்டு கிரணமயி கதவருகில் உட்கார்ந்து கொண்டாள். ஒருவரும் பேசிக் கொள்ளவில்லை. கட்டில்மேல் தலைகுனிந்தபடி திவாகர் உட்கார்ந்து கொண்டிருந்தான். இவ்விதம் வெகுநேரம் இருவரும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். கடைசியாக கிரணமயி எழுந்து எதிரில் வந்து, "தட்டில், சாதம் போட்டிருக்கிறேன், சாப்பிடுவா' என்றாள்.

திவாகர் தழதழத்த குரலில், "வேண்டாம்" என்றான்.

அவன் அழுதுகொண்டிருப்பது குரலிலிருந்து தெரிந்தது.

"ஏன் வேண்டாம்? காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமலிருக்கிறாய். இன்று சாப்பிடாவிட்டாலும் நாளைக்குச் சாப்பிட்டுத்தானே ஆகவேணும். சாப்பாட்டிடம் கோபத்தைக்காட்டி என்ன லாபம்? பசித்த வரையிலும் கொஞ்சம் சாப்பிடு" என்றாள்.

இதற்குப் பதில் அவன் மூச்சுக்கூட விட முடியவில்லை. அவன் துக்கத்தால் புளுங்கிக் கொண்டிருந்தான். அவன் உண்மையிலேயே மனப்பூர்வமாக கிரணமயியை நேசிக்க ஆரம்பித்திருந்தான். வந்ததிலிருந்து வெகுநாளைக்கப்புறம் உள்ளுக்குள்ளே ஏற்படும் விரக்திகளையும் பூசல்களையும் திவா

கர் பொறுத்துக் கொண்டிருந்தான். இதற்குமுன் எத்தனையோ தடவைகளில் பூசல்கள் நிகழ்ந்திருந்தாலும் திவாகர் இன்று போல அவ்வளவு உணர்ச்சி அடைந்ததில்லை. என்ன காரணத்திற்காக அவளை அடித்தான் என்பது அவனுக்கே புரியவில்லை. அவன் பைத்தியம் பிடித்தவன் போல கட்டில்மேல் வந்து உட்கார்ந்துகொண்டான். அப்போது கிரணமயி முன்வந்து ஓடிவந்த சனங்களை விரட்டி விட்டு அறைக்குள், வந்து விளக்கேற்றினாள். அப்போதுதான் திவாகர் தான் செய்த காரியத்திற்காகப் பச்சாதாபப் பட்டான். கிரணமயி அவனைச் சாப்பிடும்படி வேண்டிக் கொள்ளவே அவன் கிரணமயின் காலடியில் வெட்டுண்ட மரம் போலச் சாய்ந்தான். திவாகர், கிரணமயினுடைய பாதங்களில் தலையைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழலானான். அவன் அழுதுகொண்டே, "நான் ஒரு மிருகம், என்னை மன்னித்து விடு, மன்னி" என்றான்.

கிரணமயி சிறிதுநேரம் பேசாமலிருந்துவிட்டு, "உன்மேல் குற்றம் இல்லை. மனிதனை இவைகளெல்லாம் மிருகமாக்கிவிடும். நானும் கூடத்தான் மிருகமாகி விட்டேன்" என்றாள்.

"இல்லை, இல்லை. எவரையும் நான் குற்றம் சாட்டவில்லை. என் குற்றத்திற்குப் பிராயச்சித்தம் என்ன மன்னி? என் உயிரைக் கொடுத்தாகிலும் இதற்குப் பிராயச்சித்தம் செய்தாக வேண்டும்."

"நீ அப்படி என்ன பிரமாதமான குற்றத்தைச் செய்து விட்டாய்? கோபத்தால் மனிதனை மனிதன் கொன்று விடுவான் என்று கேள்விப் பட்டதில்லையா? நீ கேவலம் அடித்தாய்! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையா பாபு? எல்லாக் குற்றமும் நீ செய்தது தானா? இவைகளை எல்லாம் மறந்துவிடு. எல்லாக் குற்றமும் இன்றோடு முடிவடைந்து போகட்டும். இனி நமக்கு இம்மாதிரி ஏற்படாது. சரி, போய்ச்சாப்பிடு. என்னால் இனி நிற்கக்கூட முடியாது" என்றாள்.

திவாகர் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். அவள் இதற்கு மேல் பேச விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

நாள் முழுதும் பட்டினி கிடந்துவிட்டு வயிறு நிரம்பச் சாப்பிட்டான். கை கழுவ வெளியே வந்தான். அவன் மனோ வேதனையும் சற்று தணிந்திருந்தது. கை கழுவி விட்டு வீட்டிற்குள் வந்தவன் சிறிது ஆச்சரியம் அடைந்தான். கிரணமயி அவனுடைய படுக்கையைச் சுருட்டி கட்டிலுக்கடியில் வைத்திருந்தாள். "என் படுக்கையை ஏன் கீழே வைத்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"முதலில் சொல்லியிருந்தால் சாப்பிட்டிருக்கமாட்டாய் இன்றிரவு நாம் இனிக் கூடி இருக்க வேண்டாம். இரவு அதிக நேரமாகிவிடவில்லை. இன்று காளி கோவிலுக்குப் போய் படுத்துக் கொள். நாளைக்கு உனக்குத் தகுந்த இடத்தைத் தேடிக்கொள். இந்தஊரில் இருக்கப் பிரியமில்லாவிட்டால், நாளைக்கு ஸ்டீமர் புறப்படும். நான் ரூபாய் கொடுக்கிறேன். நீ வீட்டுக்குத் திரும்பிப் போய்விடு. உன் இஷ்டப்படி செய்துகொள். நான் உன்னிடம் இனி துளிக்கூட சம்பந்தம் வைத்துக் கொள்ள மாட்டேன்."

திவாகர் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான். கிரணமயி னுடைய இந்த வார்த்தைகள் இருவருக்கும் மத்தியில் பிளக்கமுடியாத ஒரு சுவர்போல அமைந்துவிட்டதை உணர்ந்தான்.

அவள் பேசி முடிந்தவுடன், தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவன் போல, ''அப்புறம் நீ?'' என்றான்.

''என்னைப்பற்றி நீ கேட்டு என்ன செய்யப்போகிறாய்? மறுபடியும் இந்தஊரிலேயேஇருந்தால் இரண்டொரு நாளில் தெரிந்து கொள்கிறாய்''

''ஆனால் வீட்டுக்காரி கூறியது உண்மைதானா? அந்த சேட்......''

கிரணமயி சாந்தமாக, ஆனால் மிக்க கடூரமான குரலில், ''இருக்கலாம். என்ன வானால்தான் என்ன? உன் உதவியால் கெட்ட வழியில் இறங்கியதால் கடைசி வரையிலும் உன்னிடமே அடைக்கலமாக இருக்க வேண்டுமா? இதற்கு அர்த்தமே இல்லை. எனக்கு உடம்பு சரியில்லை தூங்கப்போகிறேன். நீ இனி நேரம் செய்யாதே, போய்விடு. நாளைக் காலையில் உனது சாமான்களை எல்லாம் உன்னிடமே அனுப்பி விடுகிறேன்'' என்றாள்.

''இவ்வளவு அவசரமாகவா? இன்று இரவுகூட என்னை இங்கு தங்கவிடமாட்டாயா?''

''முடியாது.''

''அப்படியானால் என்னைக் கெடுப்பதற்காகத்தான் இந்த வழியில் இழுத்து வந்தாயா? எப்போதுமே காதலித்ததில்லையா?''

''இல்லை, உன்னையல்ல இன்னொரு மனிதனைக் கெடுப்பதற்காகத்தான் உன்னைக் கெடுத்தேன். ஆனால் நானென? உன்னை விட்டுத் தள்ளு! முதலிலிருந்து கடைசி வரையிலும் சகல குற்றமும் என்னைச் சேர்ந்ததுதான். இந்தக் குற்றங்களுக்காக இன்று உன் காலைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்கிறேன்.''

கற்சிலைபோல உட்கார்ந்து கொண்டிருந்த அவளுடைய முகத்தைப் பார்த்துத் திவாகர், ''நான் அடைந்த நாசத்தை உன்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாது. அதனால்தான் இவ்வளவு சுலபமாக மன்னிப்புக் கேட்கிறாய் ஆனாலும் இந்த நாசத்தை விடக் கூட எனது காதல் பெரிது. இதனால்தான் இன்னும் உயிரோடிருக்கிறேன். இல்லாதிருந்தால் கப்பலிலேயே என் நெஞ்சு பிளந்திருக்கும். ஆனால், ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. இனி நீ அடையப் போகிறவனிடம் உனக்குக் காதல் கிடையாது. பார்த்துக்கூட இருக்க மாட்டாய். அப்படியிருக்க என்னைவிட்டு அவனிடம் ஏன் போக விரும்புகிறாய்? நான் உனக்கு ஒரு தீங்கும் இழைக்கவில்லையே! உண்மையாகவே நீ அந்நியனிடம் போகப் போகிறாயா?'' என்றான்.

'ஆம், போகப் போகிறேன்' என்று கூறிவிட்டு தரையை நோக்கிக் கொண்டிருந்தாள். பிறகு, ''உன்னிடம் நான் ஒன்றும் ஒளிக்கப் போவதில்லை. நான் கடவுளையோ, ஆத்மாவையோ, மறு பிறப்பையோ, நகரத்தையோ, சுவர்க்கத்தையோ நம்புவதில்லை. இவைகளெல்லாம் சுத்தப் பொய் என்பது எனது கொள்கை. இந்த உலகத்தையும், இந்த உடலையும் தான் நான் நம்புகிறேன். இந்த வாழ்க்கையில் ஒரே ஒரு தரம்தான்

சுரபாலாவிடம் தோல்வி அடைந்தேன். ஆனால், அவைகள் எல்லாம் போகட்டும். ஆம், நான் இந்த உலகத்தையும், இந்த உடலையும் தான் நம்புகிறேன். இந்த வாழ்க்கையில், எரிந்து சாம்பலாகப் போகும் இந்த உடல் வேறு ஒன்றையும் விரும்பவில்லை; காதல் ஒன்றைத்தான் விரும்பியது! இதனுடைய விருப்பம் பூர்த்தி அடையவில்லை. இனிமேல் அடையப் போவதும் இல்லை. ஆனால் நான் எனது அகங்காரத்தை அடக்க முடியவில்லை. இதனால் தான் ஒருநாள் டாக்டர் அனங்கனையும் எனது வலையில் சிக்க வைக்க விரும்பினேன். இதுவும் விதியின் கூத்துத்தான்'' என்று பெருமூச்சு விட்டாள்.

சிறிதுநேரம் பேசாமலிருந்து விட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டவள் போல, ''இதற்கப்புறம் ஒருநாள் நான் உண்மையாகவே காதல் கொண்டேன். எனது உடல் இத்தனை நாளும் இவனுக்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததா என்று நினைத்துக் கொண்டேன்'' என்றாள்.

திவாகர் ஆச்சரியத்துடன், ''யாருக்காக?'' என்றான்.

கிரணமயி புன்முறுவலுடன், ''எனது இந்தக் காதலுக்கு இணை சுவர்க்கத்தில் கூடக் காண முடியாது. ஆனால் எனது இந்தக்கர்வம் நிலைக்கவில்லை. அன்று நான் பரலோகத்தைப்பற்றி விவாதித்து எந்தப்பெண்ணிடம் தோல்வி அடைந்தேனோ அதே பெண்ணிடம் மறுபடியும் தோல்வி அடைந்தேன். இந்த லோகத்துக் காதல் போட்டியிலும் அவளிடம் தோல்வி அடைந்து தலை குனிந்து திரும்பினேன். மோகத்திரை விலகியது. என்னைப்போன்ற ஆயிரம் ரமணிகளாலும் கூட அவனைத் தோற்கடிக்க முடியாதெனத் திரும்பினேன்'' என்றாள்.

திவாகரின் கண்ணை மறைத்துக் கொண்டிருந்த திரை சிறிது சிறிதாக விலகியது.

கிரணமயி கூறத் தொடங்கினாள்; ''அந்தப் பெண்ணிடமிருந்து ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனப் பெரிதும் ஆசைப் பட்டேன். கணவனைக் காதலிப்பதைக் கற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்த வழியும் துர்ப்பாக்கியத்தால் அடை பட்டது. நீ என்ன கேட்டாய்? உன்னை ஏன் காதலிக்கவில்லை என்று தானே? காதலிக்கவில்லை என்று யார் சொன்னது? நிச்சயம் காதலித்தேன்? ஆனால் நான் உன்னை விட வயதில் பெரியவள். ஆகையால் உபேந்திர அண்ணா என்னிடம் உன்னை ஒப்படைத்துப் போனதிலிருந்து சொந்தச் சகோதரனைப் போல பெற்ற பிள்ளையைப் போல காதலித்து வந்தேன். இதனால்தான் இந்த ஆறுமாதமாக ஒரே வீட்டில் இருந்தும் கூட இந்த உடலை சேதப்படுத்த உன்னை அனுமதிக்கவில்லை. உன் வாயிலிருந்து காதல் மொழிகளைக் கேட்டால் வெறுப்பால் என் தேகம் நடுங்குகிறது. இதனால் தான் உனது அடி கிடைத்தவுடன் எனக்கு விரக்தி ஏற்பட்டு விட்டது, போய் விடு திவாகர், நீ போய் விடு! எனக்குப் பாப புண்ணியம், சுவர்க்க நரகம் ஒன்றும் நேராது. ஆனால் இந்த உடல் மேல் நீ கொண்டிருக்கும் விருப்பம் உன்னை எழேழு ஜென்மங்களிலும் நரகக்குழியில் தள்ளி விடும். இது எனக்கு நன்கு தெரியும்'' என்று சொல்லச் சொல்ல அவள் கண்கள் ஜ்வலித்தன. திவாகர் கல்லடி பட்ட

நாய்போல் கதவோரத்தில் ஒதுங்கினன்.

கிரணமயி அவன் படுக்கையை எடுத்து அவன்முன் வீசி எறிந்தாள். "இனி உன்மேல் எனக்கு நம்பிக்கை கிடையாது. எனக்கு ஒரு தம்பியும் இருக்கிறன். அந்த சதீஷைப் பார்த்துக்கொண்டு சதா உன்னிடமிருந்து தப்பித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் நீ போய் விடு" என்றாள்.

திவாகர் ஒன்றும் பேசாமல் படுக்கையை எடுத்துக்கொண்டு இருளில் மறைந்து விட்டான்.

அத்தியாயம் நாற்பத்தி நான்கு

காலையில் கிரணமயி களைப்புடன் வீட்டுக்காரியங்கள் செய்து கொண்டிருந்தாள். காமினி வாசலில் வந்து நின்றுகொண்டு புன் சிரிப்புடன், "பயல் போய்விட்டான? நல்ல வேலைசெய்தாய்! நேற்று உதைக்கலாமென இருந்தேன்! அடே! அவன் பெண் பிள்ளையை வைத்திருக்க யோக்யதை உள்ளவன? ஆடு, தோட்டத்து வேலை செய்யுமானல் மாடு எதற்காக வளர்த்துகிறர்கள்?" என்றாள்.

"அவன் போய்விட்டான் என்று யார் சொன்னர்கள்?" என்றாள் கிரணமயி.

வீட்டுக்காரி சிரித்துக்கொண்டு "பாரு, என்னை ஏமாற்றப் பார்க்கிறயா? யார் சொன்னதா? நான் தான் வீட்டுக்காரி ஆச்சே, எனக்கு யார் வந்து சொல்ல வேண்டும்? என் காதாலேயே எல்லாவற்றையும் கேட்டேனே! இவ்வளவு உஷாராக நான் இல்லாதிருந்தால் இந்தவீட்டை இதற்குள்ளாக யாரோ அடித்துக்கொண்டு போயிருப்பார்களே!" என்றாள்.

கிரணமயி பேசாமல் வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினள். அவள் பேசாதிருக்கக் கண்டு மறுபடியும் வீட்டுக்காரி, "இந்தக் கஷ்டத்திலிருந்து வெளியேவா என்று நான் எப்போதிருந்து சொல்கிறேன்? முடியாது, நான் எங்கு போகட்டும்? அடே, எங்குபோவயோ எனக்கு என்ன தெரியும்? இவ்வளவு தூரம் யோசித்தால் உலகத்தில் ஒரு காரியமும் நடக்காது. உண்ண, உடுத்த, நகை நட்டு அணிய சந்தோஷமாக இரு. அதோடுகூட பிரியமாக இரு அதுமுடியாது. நகை நட்டுகளை பணத்திற்காகப் போடுவார்கள். பிரியமாயிருப்பதற்கு ஒரு வழிதானுண்டா?" என்றாள்.

கிரணமயி தலை நிமிர்ந்து பார்த்து விட்டு மறுபடியும், குனிந்து கொண்டாள். தனது உபதேசங்கள் வேலை செய்கின்றன என்று வீட்டுக்காரி நினைத்துக் கொண்டாள். ஆகையால் அவள் மறுபடியும், "இதென்னம்மா? அன்பு கொள்வதற்கு இதுதான் சமயமா? இப்போது நீ நல்ல வாலிபம், இந்தச் சமயத்தை நீ உதைத்துத் தள்ளுவாயா? இதற்கப்புறம் இரண்டு காசு சேர்ந்த பிறகு நிம்மதியாக உட்கார்ந்து கொள்ளலாம். வயது ஆனபிறகு நீ அன்பு கொள்வதை யார் தடுக்கப் போகிறர்கள்? கையில் காசு வந்துவிட்டால் பின் ஒருவன் தயவு எதற்கு? கையில் காசு இருந்தால் இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம்" என்றாள்.

கிரணமயி, "அவர் எல்லாவற்றையும் கேட்டாரோ இல்லையோ! அவர் ஒன்றும் பதில் சொல்ல வில்லை" என்றாள்.

வீட்டுக்காரிக்கு எதோ வேறு வேலையிருந்ததால் அவளால் மேலும் பேச முடியவில்லை. மத்தியானம் வருவதாகச் சொல்லிப் போய் விட்டாள்.

இந்த வீட்டில் வசிப்பவர்கள் அனைவரும் மில் வேலைக்காரர்கள். காலையில் வேலைக்குப் போனல் மத்தியானம் வேலைவிட்டு வந்து அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு வேலைக்கு ஓடிவிடுவார்கள் மறுபடியும் மாலையில்தான் வீட்டிற்கு வருவார்கள்.

இன்று அனைவரும் வேலைக்குப் போன பிறகு வீட்டுக்காரி இரண்டு மணி சுமாருக்கு கிரணமயி வீட்டுக் கதவருகில் வந்து நின்றுகொண்டு, "சாப்பிட்டு விட்டாயா? என்ன சமையல்?" என்றாள்.

கிரணமயி இன்று அடுப்பு பற்ற வைக்கவேயில்லை. இருந்தாலும் அவள் கேட்டதற்காக, "சாப்பிட்டு விட்டேன். வா, வந்து உட்கார்" என்றாள்.

வீட்டுக்காரி கதவருகில் உட்கார்ந்து கொண்டாள். கிரணமயினுடைய மனம் இப்போது நன்றாயில்லை என்பதை வீட்டிற்குள் அடி எடுத்து வைத்ததும் அவள் தெரிந்து கொண்டாள். ஆகையால் அனுதாபத்துடன், "இது சகஜம் தான். இரண்டு மூன்று நாளைக்கு மனம் இப்படித் தான் இருக்கும். நாம் வளர்த்தும் நாய், பூனை முதலியவை நம்மை விட்டுப் பிரிந்தாலே வருத்தமாக இருக்கும். அவனே மனிதன் பாரு. ஐந்தாறு மாதம் அவனேடு குடித்தனம் பண்ணியாயிற்று. அதனல் துக்கம் உண்டாவது சகஜம் தான். ஆனல், நாலைந்து நாளாகி விட்டால் மறுபடி அவன் பெயர் கூட ஞாபகத்திற்கு வராது. எத்தனை முறை இப்படி நடந்ததைப் பார்த்திருக்கிறேன்!" என்றாள்.

கிரணமயி சிரித்துக் கொண்டு, "ரொம்பச் சரியாகச் சொல்கிருய்" என்றாள்.

"சரியா? சரியில்லையா என்று நீயே சொல்லு? அவன் போனவன் போய் விட்டான். புதிய ஆள் வரட்டும். புது விதமாக ஆனந்தமாக இருக்கலாம். மனம் நிம்மதியாக இருக்கட்டும். நான் சொல்வது சரி தானே?"

கிரணமயி தலையை அசைத்து ஆமோதித்தாள். இருந்தாலும் அவளுடைய மனம் திகிலடைந்தது.

காமினி மெதுவாக, "நல்ல சமயத்தில் ஞாபகம் வந்தது! அந்த ஆசாமிக்குக் காலையிலேயே தகவல் கொடுத்து விட்டேன்.

அவன் உன்னிடம் வருவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிருன். எல்லோரும் வேலைக்குப் போன பிறகு மத்தியானம் வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிருன். ஒரு சமயம் இப்போது வந்தாலும்........."

"இங்கே எதற்காக வருகிருன்?" என்று பயத்துடன் கேட்டாள் கிரணமயி.

காமினிக்கு இதைக் கேட்டுச் சிரிப்பு வந்து விட்டது. ஆனல் அவள் கோபம் வந்தவள் போலப் பாசாங்கு செய்து கொண்டு, "அவன் இங்கு வராவிட்டால் நீ அங்கு போவாயா? உன் பேச்சைக் கேட்டு சிரித்துச் சிரித்து

வயிறு புண்ணுகி விடும் போலிருக்கிறது'' என்று சிரித்துக் கொண்டு கிரணமயி மேல் விழுந்தாள்.

கிரணமயி ஒன்றும் பேசவில்லை. சிறிது தள்ளி உட்கார்ந்து கொண்டாள். காமினி நெருங்கிய நட்புக் கொண்டாடிக் கொண்டு இப்போது தான் முதன் முதலாக 'நீ' என்று அழைக்கிருள்.

ஆனல் கிரணமயினுடைய காதில் அவள் 'நீ' என்று அழைப்பது அம்பு போலப் பாய்ந்தது. அவளுடைய தூக்கம் ஒரே சப்தத்தால் கலைந்தது. அவளுடைய மனதில் கௌரவம் மீண்டும் உதயமாயிற்று. இருந்தாலும் அவள் பேசாமல் இருந்தாள்.

காமினி இதைக் கவனிக்கவில்லை. அவள் தன் பாட்டுக்கு, ''ஆறு மாதத்திற்குள் உனக்கு நல்ல வழி ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் என் பெயர் காமினி அல்ல என்று நான் சொல்லவில்லை? நான் சொல்கிறபடி நீ நட. எனக்கு வேறு ஒன்றும் வேண்டியதில்லை.''

கிரணமயிக்கு அவளைத் தட்டிச் சொல்ல முடியவில்லை. அப்படிச் சொல்லவும் துணிவில்லை.

''ரொம்பப் பெரிய சேட். பணத்திற்குக் குறைச்சல் இல்லை. இந்தச் சமயத்தில் இரண்டு கையாலும் வாரிக் கொள்ள வேண்டும். அப்புறம் எத்தனையோ பேர் வருவார்கள். நீ எதற்கு அப்புறம் துக்கப்பட வேண்டும். உன் அழகு என்ன சாதாரணமானதா?''

அதே சமயத்தில் வெளியிலிருந்து யாரோ வீட்டுக்காரியைக் கூப்பிட்டார்கள்.

''இதோ வருகிறேன்'' என்று கூறிக் கொண்டு காமினி போகத் தொடங்கினாள். அதைக் கண்டு கிரணமயி அவளுடைய முந்தானையைப் பலமாகப் பிடித்துக் கொண்டு, ''முடியாது. இங்கு யாரும் வர வேண்டாம். நீ இங்கேயே இரு'' என்றுள்.

காமினி ஆச்சர்யத்துடன், ''என்? இங்கு வேறு யாரிருக்கிறார்கள்?'' என்றுள்.

''யாராவது இருந்தாலும் சரி, நீ இங்கிருந்து போக வேண்டாம்.'

வெளியிலிருந்து அழைத்தவர் காலடி ஓசை படிப்படியாக அருகில் கேட்டது.

காமினி கவலையுடன், ''நீ ஒருத்தரைக் கலியாணம் செய்து கொண்ட குலவதி அல்லவே! பாபுக்கள் இங்கு வருவார்கள் போவார்கள். இதில் பயமென்ன? நீ ஒரு தாசி தானே?'' என்றுள்.

''நான் யார்? தாசியா?'', என்று கூச்சலிட்டாள் கிரணமயி.

அவள் மண்டை இரண்டாகப் பிளந்து விடும் போலிருந்தது.

அவளுடைய சிவந்த கண்களையும், கோபக் குரலையும் கண்ட காமினி, ''இல்லாமல் வேறு என்னவாம்? உன்னைப் பார்க்க எனக்கு எரிச்சலாக இருக்கிறது. நாங்கள் இருக்கும் கோலத்தில் தான் நீயும் இருக்கிறாய். அந்தப் பாவி மனிதன் வந்தால் வரட்டுமே மரியாதையாக வீட்டிற்குள் உட்கார வை'' என்றுள்.

இந்தப் பரோபகார மனம் படைத்த வீட்டுக்காரி பணம் வாங்கியிருந்தாள். இன்னும் வாங்க ஆசைப் பட்டாள். அவன் கதவருகில் வந்து நின்று கொண்டு

"என்ன வீட்டுக்காரி சௌக்கிய மா?" என்ருன்.

வீட்டுக்காரி நாணிக் கோணிக் கொண்டு, "உங்கள் தயவு இருக் கும் போது சௌக்கியத்திற்கு என்ன குறைச்சல்! வாருங்கள், வீட்டிற்குள் உட்காருங்கள். நான் வெற்றிலை பாக்குக் கொண்டு வருகிறேன்?" என்று கூறினுள். பிறகு சிரித்துக் கொண்டு, "இந்த வீடு வாசல் அனைத்தும் உங்க ளுடையது தான் பாபுஜி! இதை நன்ருகச் செப்பனிடவேண்டும். அதை முதலிலேயே சொல்லி விடு கிறேன்" என்ருள்.

"சரி, சரி! எல்லாம் செய்ய லாம்" என்று கூறிக் கொண்டு அந்த மனிதன் வீட்டிற்குள் சென்று சிறிதும் சங்கோசமின் றிக் கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டான்.

கிரணமயி இது வரையிலும் சக லத்தையும் பொறுத்துக் கொண்டி ருந்தாள். ஆனல் மேலும் அவ ளால் பொறுக்க முடியவில்லை. அவளுடைய ரூபலாவண்யங்கள் எல்லாம் அந்த மனிதன் வீட்டிற் குள் அடி எடுத்து வைத்ததுமே மூர்ச்சித்து விட்டன. புயலால் மோதுண்ட மரம் போல் அவள் அடியோடு சாய்ந்தாள்.

அந்த மனிதன் இதைக் கண்டு திடுக்கிட்டான். வீட்டுக் காரி யின் கூச்சலால் வீட்டிலிருந்த பெண்களின் அரைத் தூக்கமும் கலைந்தது. அனைவரும் ஓடி வந் தார்கள். எல்லாரும் கவலையுடன் அந்த அபாக்யவதிக்கு உபசாரம் செய்தார்கள்.

காமினி கட்டில் மேல் உட்கார் ந்து கொண்டு, "இந்த தொழிலில் எனக்கு நரை கண்டு விட்டது. இருந்தாலும் இந்த அதிசயத்தை இது வரையிலும் நான் கண்ட தில்லை. வந்திருக்கிற மனிதனைக் கண்டதும் பல்லைக் கடிக்கும் உபா யத்தைப் பழகியதில்லை" என்ருள்.

இதே சமயத்தில் வெளியி லிருந்து வேறு யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. வெளியில் யாரோ ஒரு புதிய பாபு, கிரண மயி, திவாகர் பெயரைச் சொல் லிக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். வேலைக்காரன் வந்து இதைச் சொன்னுன்.

வேலைக்காரனிடம் அந்த மனித ரைப் பற்றி காமினி கேட்டுக் கொண்டிருந்தாள். அதற்குள் அந்த மனிதரே கையில் ஒரு பை யுடன் உள்ளே வந்து, "மன்னி!" என்று கூப்பிட்டார்.

அவளுடைய இடது கையில் அணிந்திருந்த மோதிரத்தின் வை ரம் சூரிய வெளிச்சம் பட்டு மின் னியது. காமினி எதிரில் போய் நின்று கொண்டு, "யாரைத் தேடு கிறீர்கள்?" என்ருள்.

"திவாகர் இங்கு இருக்கிருனு?"

"இல்லை."

"எனது மன்னி, கிரணமயி எந்த வீட்டில் இருக்கிருர்கள்?"

காமினியுடன் நாலைந்து பெண் களும் கூர்ந்து கவனித்துக் கொண் டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி, "அவர் மூர்ச்சை அடைந்து கிடக் கிருர்" என்ருள்.

"மூர்ச்சையா? எங்கே பார்க்க லாம்?" என்று கூறிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்.

கிரணமயி சுயநினைவின்றித் தரையில் கிடந்தாள். உடல் முழு தும் வியர்த்துப் போயிருந்தது. கண்கள் மூடி இருந்தன. முகம் வெளுத்துப் போயிருந்தது. கூந்

தல் சிதறிக் கிடந்தது. சேலையும் நழுவிப் போயிருந்தது. வந்தவன் சதீஷ் தான். அவன் பார்வை சேட்ஜி மேல் விழுந்தது. அவன் அருகில் வந்து கிரணமயியைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந் தான். சதீஷ் ஆச்சரியத்துடன், "ஓ! நீயார்?" என்ருன்.

இதற்குப் பதில் காமினி கூறி ளுள். "இவர் எங்கள் சேட்ஜி. இவர் இங்கு........."

ஆனுல் சதீஷ் அவள் கூறி முடிக்கு முன்னே, "வெளியே போ!" என்ருன்.

சேட்ஜி பணக்காரன், அதோடு புது மோகம் வேறு. இத்தனை பெண்களுக்கு மத்தியில் அவமா னம் அடைய முடியாது. ஆகை யால் துணிவுடன், "ஏன்?" என் ருன்.

சதீஷ் விவாதத்திற்கு ஒன்றும் தயாராக இல்லை. சதீஷ் பொறு மையை இழந்து தரையைக்காலால் உதைத்துக் கொண்டு, "வெளியில் போடா, கழுதே?" என்ருன்.

அந்த வீடே அவன் சப்தத்தைக் கேட்டு நடுங்கியது. சேட்ஜி ஒன் றும் பேசாமல் வெளியே போய் விட்டான்.

சதீஷ், கிரணமயினுடைய கலைந் திருந்த ஆடையை ஒழுங்கு படுத்தி விட்டு ஒரு விசிறியை எடுத்து வீசி ளுன். கூடியிருந்த பெண்கள் தங் களுக்குள் பேசிக் கொள்வதி லிருந்து சதீஷ் எவ்வளவோ விஷ யங்கள் தெரிந்து கொண்டான்.

காமினி அடிக்கடி, "இந்த வய தில் நான் இம்மாதிரி விசித்திர மான பெண்ணைப் பார்த்ததில்லை. தாசியைத் தாசி என்று சொன்ன வுடன் மயக்க மடைந்து விழுந்து விட்டாளே!" என்று கூறிக் கொண்டாள்.

ஒரு இருபது நிமிஷத்திற்குள் கிரணமயி மயக்கம் தெளிந்து எழுந்து விட்டாள். உடனே அவள் ஆடையைச் சீர் படுத்திக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். ஒவ்வொருவராகப் பார்த்து விட்டு, "சின்ன பாபு" என்று கூவினுள்.

சதீஷ் அவளை வணங்கி விட்டு, "ஆம் மன்னி, நான் தான். இதென்ன விஷயம்? உடை, உடல் எல்லாமே அலங்கோல மாயிருக் கின்றனவே! சதீஷின் மன்னி என்று யார் சொல்வார்கள்? பைத் தியம் பிடித்த அனுதையைப் போலல்லவா இருக்கிருய்! சுத்த விளையாட்டுத் தனம்! நாளைய கப் பலுக்கே ஊர் போகலாம்" என்று கூறினுன். பிறகு அந்தப் பெண்களைப் பார்த்து, "இனி நீங் கள் வீட்டுக்குப் போகலாம்" என்ருன்.

கிரணமயி கற்சிலை போல தலை குனிந்தபடியே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் மன திலுள்ளது கடவுளுக்குத் தான் தெரியும்.

(தொடரும்)

★

நீரந்தர விடுமுறை

கோமதி சுவாமிநாதன்

அவனுக்கு சுமார் பதிமூன்று அல்லது பதினன்கு வயதுதானிருக்கும். வயதிற்குத் தகுந்த உடல் அமைப்பு. லக்ஷணமான முகம். அவன் குறுகுறுத்த விழிகள் யாரையும் அவன்பால் அன்பையும் பிரியத்தையும் உண்டாக்கும்படி அமைந்திருந்தன. வரிசை வரிசையாக முத்துப்போல் அமைந்திருந்த அவன் பற்கள் அவன் எப்போதும் புன்சிரிப்புடனேயே இருப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது. அவன் குரலிலும் ஓர் அனுயாசமான இனிமை நிலவியது.

இவ்வளவு லக்ஷணங்களுடன் கூடிய சிறுவன், ஓர் லக்ஷப்பிரபுவின் புத்திரனல்ல. செல்வச் சீமானின் திருக்குமாரனுமல்ல. பெருமாள் நாயுடுவின் மளிகைக் கடையில் சாமான் எடுத்துக் கொடுக்கும் பாக்யம்தான் அவனுக்கு கிட்டியிருந்தது. அரையில் அநேக நாட்களாக தண்ணீரையே பார்த்திராமல் அழுக்குப் படிந்த ஓர் வேஷ்டி. அதுவும் முழங்கால்களை மூடத்தான் போதுமானதாக இருந்தது. அவன் தலையை வாரி விட்டிருக்கவில்லை. கையால்தான் ஒதுக்கி விட்டிருந்தான். சுருண்டு சுருண்டு இருந்த அவன் தலை மயிர் அவன் முகத்திற்கு தனியான ஓர் சோபையை அளித்தது.

நான் அந்த ஊருக்கு மாற்றுதலாகிப் போனதும், என்னுடன் வேலை பார்க்கும் நண்பர், மளிகைக் கடை முதலாளி பெருமாள் நாயுடுவிற்கு என்னை அறிமுகப் படுத்தி வைத்தார். பள்ளிக்கூடம் விடுமுறையான சனிக்கிழமையன்று ஒரு நீளமான சாமான் ஜாபிதாவுடன் கடைக்குப்போய் சேர்ந்தேன். அப்போதுதான் அவனை முதன் முதலாக நான் பார்த்தேன்.

"டேய்! கணேசா! வாத்தியார் சாமிக்கு மளமளவென்று சாமானைக் கட்டிக் கொடு" என்று அவனைப் பார்த்து கர்ஜித்து விட்டு "சாமி அப்படி உட்காருங்க" என்று எனக்கு உபசாரம் செய்தார் நாயுடுகாரு. அவன் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவனைப் பார்த்த உடனேயே எழுந்த ஆவலை நாயுடுகாருவே அகஸ்மாத்தாகப் பூர்த்தி செய்து விட்டார். அவருக்கு என் நன்றியறிதலை மானசீகமாகச் செலுத்தினேன்.

எனக்கு கணேசன்பால் விவரிக்க முடியாத ஓர் அன்பு ஏற்பட்டு விட்டது. நான் அவனுடன் வலிய சிநேகிதம் செய்து கொண்டேன். "தம்பி! அவசரமில்லை சாவகாசமாக சாமானைக் கட்டிக் கொடு" என்றேன் அவனைப் பார்த்து. அவன் அப்போது மனம் குழைந்து கனிந்த அன்புடன் என்னைப் பார்த்த பார்வை

இப்போதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அவன் பார்வையுடன் ஓர் குறும்புச் சிரிப்பும் கலந்திருந்தது. நாயுடுவின் அதிகாரத்தை என் பாசம் கலந்த வார்த்தைகள் சிறிது தளர்த்திவிட்டதைப் பற்றி அவன் ஆனந்தப் பட்டானே என்னவோ!

சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டு கிளம்ப ஆரம்பித்தேன். "நாயுடுகாரு, நான் வருகிறேன். வேலைக்காரப் பையன் கெட்டிக்காரன். என்னை சீக்கிரம் அனுப்பிவிட்டான்" என்றேன் கணேசனைப் பார்த்துக் கொண்டே. "சுத்தசோம்பேரிங்க. அவனுக்குக் கொடுக்கிற சம்பளம் ஐந்து ரூபாயும் வெட்டிக்காசு" என்று அங்கலாய்த்துக் கொண்டார் நாயுடு. "நீங்க சொல்லுங்கசாமி காலையிலே ஏழு மணியிலேயிருந்து ராத்திரி பத்து மணி வரை கடையிலேயே இருக்கேனுங்க. எனக்கு இவரு கொடுக்கிற சம்பளம் ஜாஸ்தியா?" என்று கேட்டான் கணேசன் வெகு துணிச்சலுடன். திரிபுரத்தை எரித்த பரமசிவன் நெற்றிக் கண்ணை விழிப்பதைப் போல விழித்தார் நாயுடு. "தெருவிலே போகிறவர்களிடமெல்லாம் மத்யஸ்தம் வைக்கிருயா? மடப்பயலே!" என்பது போலிருந்தது அவர் பார்வை. கணேசன் கடைக்கு உள் பக்கம் போய் பருப்பு மூட்டை அரணுக்குப் பின்னல் ஒளிந்து கொண்டான். நான் சாமான்களை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வீடு திரும்பினேன்.

எனக்கு கணேசன் வயதில் ஓர் தம்பி இருந்தான். வகுப்பில் மிகுந்த கெட்டிக்காரன். ஆனல் சர்வ சுதந்திரப் பிரியன். மாலை நாலுமணி அடித்ததும் அவனை விளையாட்டு மைதானத்தில்தான் பார்க்கலாம். வீட்டில் அடைபட்டு கட்டுக் காவலுக்கு அடங்கி இருக்க அவன் மனம் ஒவ்வாது. தினம் ஒவ்வொரு விதமான உடுப்புகளும் தின் பண்டங்களும் விளையாட்டு சாமான்களும் வேண்டுமென்று பிடிவாதம் செய்வான். அவன் புத்திசாலியாக இருந்ததால் எங்கள் வீட்டில் அவனுக்கு அதிக சலுகையுண்டு.

சாமான்களை எடுத்துக்கொண்டு வீடு திரும்பியதும் என் சிந்தனை புதுப் பாதையில் சென்றது. கணேசனையும் என் தம்பியையும் என் மனம் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தது. ஒரே வயதுள்ள சிறுவர் இருவர்களில் ஒருவன் காலை ஏழு மணி முதல் இரவு பத்து மணி வரை கடையில் அடைபட்டு முதலாளியின் கோபதாபங்களுக்கு ஆளாகி சர்வ அடிமையாக உடல் நலிய உழைப்பானேன்? மற்ருருவன் சர்வசுதந்திரத்துடன் வான வீதியில் திரியும் பக்ஷி ஜாலங்களைப் போல் இன்பமுறுவானேன்? அதெல்லாம் அவரவர்கள் விதிப்பயன் என்று என் மனமே பதிலளித்துக் கொண்டது இதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. என் தம்பியிடம் இல்லாத முக வசீகரமும், இதமொழியும் கணேசனிடம் இருந்தன. ஆனல் பாவம்! அதெல்லாம் இருந்து அவனுக்கென்ன பிரயோஜனம்! நாள் பூராவும் மிளகாய் வத்தலையும், உளுத்தம் பருப்பையும் எடுத்து எடுத்துக் கொடுத்துத்தான் அவன் வாழ்க்கையைக் கழிக்க வேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருக்கிறதா? பள்ளிக்கூட மாணவர்கள் பந்தய மைதானத்திற்கு விளையாடப் போகும்போது கணேசனுக்கு மனம் எவ்வாறு இருக்கும்? தூண்டில் புழுபோல்

தானே துடிக்கும்! தன் போன்றவர்களுக்கு கிடைக்கும் இன்பம் தனக்கு மாத்திரம் கிடைக்காதா என்று ஏங்க மாட்டானா?

என் மனது சிந்தனையில் சிக்கித் தவித்தது. அவனை வீட்டோடு அழைத்து வந்து மற்றொரு சகோதரனாக வைத்துக் கொள்ள எனக்கு சக்தி இல்லை. ஆகையால் காசு பணம் செலவில்லாமல் என் அன்பையாவது அவன் பால் சொரிந்து அவனுக்கு உற்சாக மூட்டலாம் என்று தீர்மானித்தேன். நான் கணேசன் ஒருவனைத்தான் அவன் ரகத்தில் பார்த்திருக்கிறேன். அவன் மாதிரி இன்னும் எவ்வளவு சிறுவர்கள் கிட்டங்கி மூட்டைகளுக்குள் புழுங்கி மனம் வெதும்புகிறார்களோ! அவர்களுக்கும் சர்க்கார் காரியாலயங்கள் மாதிரி குறிப்பிட்ட வேலை நேரமும், மாலை விளையாட்டுகளுக்கு வசதியும் அளித்தால் எத்தனை உள்ளங்கள் உவகையடையும்! இதையெல்லாம் கற்பனை செய்து பார்த்துக் கொண்டேன். கற்பனைக்கும் நிஜத்திற்கும்தான் வெகு தூரமாயிற்றே!

இரண்டு நாட்கள் கழித்து என் தம்பிக்காக வாங்கிய வேஷ்டிகளில் இரண்டை எடுத்துக் கொண்டு பெருமாள் நாயுடு கடைக்குப் போயிருந்தேன். நாயுடு கடையில் இல்லை. கணேசன் மாத்திரம் இருந்தான். "கணேசா இந்த வேஷ்டிகளை உடுத்திக்கொள் இனிமே கடைக்கு வரபோது நல்லா தலையை வாரிவிட்டு வா" என்றேன். உணர்ச்சி வசப்பட்ட கணேசனின் கண்கள் ஆனந்தத்தால் ஜ்வலித்தன. வேஷ்டியைக் கையில் வாங்கிக் கொண்டான். "சாமி! தலை கிலை வார எங்கே நேரமிருக்குதுங்க. பலபலன்னு வெடியரபோது கடைக்கு வந்தா பாதி ராத்திரிக்குத்தானே வீட்டுக்குப் போரேனுங்க" என்றான். அவன் குரலில் ஏக்கம் பிரதி பலித்தது. "உனக்கு இரண்டு மூன்று நாள் விடுமுறை வாங்கித் தருகிறேன். என்கூட வீட்டில் வந்திருக்கிறாயா?" என்று கேட்டேன். அப்போது அவன் என்னைப் பார்த்த பார்வை என் மனதில் அப்படியே பதிந்து விட்டது. அவன் முகத்தில்தான் என்ன பூரிப்பு! என்ன குஷி! அவன் ஆனந்தத்தால் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். "என் தம்பி இருக்கிறான், அவனுடன் நீயும் சேர்ந்து விளையாடலாம். சந்தோஷமாக இருக்கலாம் என்ன சொல்லுகிறாய்?" என்றேன் மறுபடியும். தயக்கத்துடன் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. "நாயுடுகாரு நல்லா லீவு கொடுத்தாரே. எங்க பாட்டி செத்துப்போன போதுகூட லீவு கொடுக்க மாட்டேன்னுட்டாரே. நான் இங்கே மூணு வருஷமா வேலை பாக்கிறேன். ஒரு நாள் லீவு வாங்கினதில்லே" என்றான் கணேசன். "அட பாவமே! எப்படியாவது கணேசனுக்கு இரண்டு மூன்று நாட்கள் விடுமுறை வாங்கித்தர வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டே வீடு திரும்பினேன்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து வீட்டில் ஏதோ பண்டிகை வந்தது. மனைவி பையை எடுத்துக் கொடுத்தாள். சர்க்கரை வாங்குவதற்காக கடைக்குப் போனேன். கணேசன் நான் கொடுத்த தூய வெள்ளையான வேஷ்டியைக் கட்டிக் கொண்டு தலையை வாரி, நெற்றியில் குங்குமப் பொட்டு இட்டி

ருந்தான். யாருக்கோ கடலை மாவு நிறுத்துக் கொண்டிருந்த வன், என்னைப்பார்த்ததும், அப் படியே திராசைக் கீழே வைத்து என்று உபசார வார்த்தை சொல் லும் நாயுடு இன்று வாயைத் திறக்கவில்லை. முகம் கடு கடு வென்றிருந்தது. நானுகை ஒரு பேப்

விட்டு "சாமி உங்களுக்கு என்ன வேண்டும்" என்று கேட்டுக் கொண்டே என்னிடம் வந்தான். வழக்கமாக என்னை 'வாருங்க' பரை விரித்துக் கொண்டு ஒரு பக் கமாக உட்கார்ந்தேன். "நாயுடு காரு என்ன ஒரு மாதிரியாக இருக்காப் போலே இருக்கே"

என்றேன் நானுகவே வலியப் போய். நாயுடுகாரு தொண்டையைக் கனைத்துக் கொண்டார். “நீங்க செய்யரது அவ்வளவு உசிதமா எனக்குப் படவில்லே” என்ருர். அவர் குரலில் ஆத்திரம் த்வனித்தது. என் பதிலுக்காக அவர் காத்திருக்கவில்லே. “வேலேக்காரப் பையன்களுக்கு, இன்றைக்கு வந்து நாளேக்குப் போர வாடிக்கைக் காரர்கள் இந்த மாதிரி செல்லம் கொடுத்தால் அப்புறம் அவனுக எல்லாம் முதலாளிக்கு என்ன மதிப்பு வைப்பாங்க.

“ஒழுங்கா வேலே செய்யரவங்க மனதை எல்லாம், இந்த மாதிரி கெடுத்தால், நாங்கள் எல்லாம் தலேயில் கையை வைத்துக் கொண்டுதான் போக வேண்டும்” என்று பொரிந்து கொட்டினர். மறுவினடியில் என் மனதில் மின்னல் வேகத்தில் மற்ருெரு சிந்தனே தோன்றியது. கடைப் பையன்களுக்கு சலுகை காட்டுவதுபோல் லஞ்சம் கொடுத்து சாமான் அளவுகளே ஜாஸ்தியாக முதலாளிக்குத் தெரியாமல் வாங்குவதற்காக நான் ஏற்பாடு செய்திருப்பது போல் அவர் நினேத்துக் கொண்டிருக்கிருர் என்று தோன்றியது. என் மனம் அவமானத்தால் குன்றியது. கணேசன் முகத்தைப் பார்த்தேன். அவன் முகத்தில் அரும்பியிருந்த ஏளனப் புன்னகை ‘நாயுடுவுக்கு என்ன வேலேங்க’ என்று சொல்வது போலிருந்தது. அன்றுதான் அவனுக்கு சிபாரிசு செய்து சம்பளத்துடன் மூன்று நாட்கள் விடுமுறை வாங்கித்தர வேண்டுமென்று நினேத்துக் கடைக்குப் போனேன். நாயுடுவின் நிர்தாக்ஷண்யமான வார்த்தைகள் என் தீர்மானத்திற்கு தடை உத்திரவு போட்டு விட்டன. பேசாமல் வீட்டிற்குத் திரும்பினேன்.

அன்றெல்லாம் எனக்கு ஆனந்தமான கனவுகள். கணேசன் என் வீட்டிற்கு வந்திருப்பது போலவும், அவனும் என் தம்பியும், பிள்ளேயார் பந்து ஆடுவது போலும், பம்பரம் சுற்றுவது போலும் கனவுகள். அந்த மாதிரி இன்பக் கனவுகள் இதற்கு முன் நான் கண்டதில்லே. அந்தக் கனவை நனவாக்கும் நாளே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகுதான் கடைக்குப் போக சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது கடை வெறிச்சென்றிருந்தது. கணேசனேக் காணும். நாயுடுதான் உட்கார்ந்திருந்தார். ‘சாமி வாங்க’ என்ருர். வழக்கம்போல் உட்கார்ந்து கொண்டேன். “உங்க பந்தயக் குதிரை இரண்டு மூணு நாளேக்கு லீவு போட்டுட்டு வீட்டிலே படுத்திருச்சுங்க. காச்சல் என்று நொண்டிச் சாக்கு சொல்லி அனுப்பிச்சிருக்கான் பயல். மூணு நாள் சம்பளத்தில் மண்ணேப் போட்டால் சரியாய்ப் போய்விடும்” என்ருர் வெகு அலக்ஷியமாக. பந்தயக் குதிரைகள் மீது ரேஸ் அபிமானிகள் வைத்திருக்கும் அன்பை நான் கணேசன் மீது வைத்திருப்பதாக நாயுடுவின் எண்ணம். இந்த சமாசாரத்தைக் கேட்டு எனக்கு உள்ளூர சந்தோஷம்தான். எப்படியாவது இந்தக் கடையென்னும் சிறையிலிருந்து இரண்டு நாள் விடுதலேயடைந்து தட்டாம் பூச்சி மாதிரி யதேச்சையாக வெளியில் சுற்றுகிருனல்லவா கணேசன். காய்ச்சல் என்று பொய்தான் சொல்லியிருக்க வேண்டும். நான் சிபாரிசு செய்து லீவு வாங்கித் தருகிறேன் என்று சொன்னதின்பேரில் அவணுகவே உற்சாக மேலிட்டு இந்த மாதிரி

செய்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

மூன்று நாட்கள் கழிவதை எண்ணிக் கொண்டிருந்தேன். எப்படி அவன் அந்த மூன்று நாட்களைக் கழித்தான் என்று தெரிந்து கொள்ள என் மனம் ஆவலுடன் துடித்தது. சாமான் வாங்க தேவையில்லாத போனாலும் கடைக்குப் போனேன். இன்றும் கடை வெறிச் சென்றிருந்தது. நாயுடு பேசும் வரை நான் காத்திருக்க வில்லை. "நாயுடுகாரு! கணேசன் வந்தானா?" என்றேன் என் உள்ளத்தில் சிறிதுகூட நிம்மதியில்லை. கலவரம் நிலவியிருந்தது. நாயுடு வழக்கம்போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னார். "அந்தப் பயலுக்கு நிஜமாகவே உடம்புக்கு குணமில்லையாம். காய்ச்சல் ஜாஸ்தியாயிருக்குன்னு மூணு மைல் நடந்து வந்து அவன் ஆத்தா மருந்து வாங்கிக் கிட்டுப்போனா. அந்தப் பயல் கடையிலிருந்து கண்டதை எடுத்து திருட்டுத் தனமாய்த் தின்னிருப்பான்" என்றார் "நாயுடுகாரு அவன் வீடு எங்கே இருக்கு தெரியுமா?" என்றேன் பதட்டத்துடன். "வாய்க்கால் கரை வழியாய்ப் போனால் மூணு மைல்தான். நீங்க போயி வைத்தியம் பண்ணப் போரிகளா?" என்றார் நாயுடு ஏளனச் சிரிப்புடன். நான் அவருக்குப் பதில் சொல்லவில்லை. என் வீட்டிற்குப் போய் சைக்கிளை எடுத்துக் கொண்டு அவன் வீட்டிற்கு ஓட வேண்டும். தகுந்த வைத்திய சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வீட்டிற்குப் போனேன்.

வீட்டுவாசலில் டவாலி சகிதமாய் பள்ளிக்கூடப் பியூன் நின்று கொண்டிருந்தான். "சாமி ஜில்லா கல்வி ஆபீசர் இப்போ பத்துமணி ரயிலிலே வரப் போராங்களாம். ரயில் ஸ்டேஷனுக்கு அவரை வரவேற்கப் போகணுமாம். உங்களை ஹெட் மாஸ்டர் கையோட கூட்டியாரச் சொன்னாரு" என்றான். என் உணர்ச்சி வெள்ளம் தடை பட்டது. இப்பொழுது கணேசனைப் பார்க்கப்போக முடியாது வயிற்றிற்குப்படி அளக்கும் மனித தெய்வங்கள் குறுக்கே நிற்கின்றன என்று நினைத்துக்கொண்டு கோட்டை மாட்டிக்கொண்டு பள்ளிக்கூடம் சென்றேன்.

ஜில்லா கல்வி ஆபீசர் மூன்று தினங்கள் முகாம் போட்டிருந்தார். மூன்று தினங்களும் முசாபரி பங்களாவில் ஒரு வினாடிகூட அவரை விட்டுப் பிரியாமல், அவருக்கு சிசுருஷையை செய்யும் பாக்யம் என் தலையில்தான் விதித்திருந்தது.

அன்று காலை ரயிலுக்கு ஆபீசரை அனுப்பிவிட்டு நேராக கடைக்குப் போனேன். "சாமி" என்றார் நாயுடு. அவர் குரலில் வழக்கமான ஏளனமும் பரிகாசமும் இல்லை. "பையன் நம்மை கைவிட்டுவிட்டுப் போயிட்டான் சாமி. நேற்றியே காரியம் ஆயிப் போச்சாம்" என்றார். இரண்டு சொட்டுக் கண்ணீர் அவர் கண்களிலிருந்து உதிர்ந்தன.

என் வாழ்க்கை வண்டியிலே சற்றுதூரம் அவனும் வந்தான். பிறகு ஓரிடத்தில் இறங்கிக் கொண்டான். அவ்வளவுதான். இதற்குக் காரணம், நானா? நாயுடுவா? அல்லது எங்களைப் படைத்த விதியா? அதற்கு விடை கண்டுபிடிப்பது சிரம சாத்தியம். அதுதான் இயற்கையின் ரகசியம் போலும்!

நிருபர்கள் பல ரகம்

ரா. நா.

சமீபத்தில் சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் பத்திரிகை நிருபர்கள் நிலை பற்றி ஒரு ருசிகரமான விவாதம் நடந்தது. தினசரி பத்திரிகைகளுக்கு வெளியூர் நிருபர்களா யிருப்பவர்களுக்கு போதிய பிரதிப் பிரயோசனம் கிடைப்பதில்லை என்றும், சில நிருபர்கள் அனுப்பும் விஷயங்களை பத்திரிகாசிரியர்கள் விஷய தானமாக எடுத்துக் கொண்டு விடுகிறார்கள் என்றும், பெரும்பாலானவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபாய் இரண்டிலிருந்து ஐந்திற்கு மேல் கிடைப்பதில்லை என்றும் தெரிந்தது. இந்த நிலைமையை சீர்திருத்த வேண்டிய அவசியத்தைப் பற்றி நடந்த விவாதத்தில் நிருபர்களில் எத்தனை ரகம் இருக்கிறது என்பது தெரிய வந்தது.

மாதம் இரண்டிலிருந்து ஐந்து ரூபாய் சம்பாதித்துக் கொண்டு இந்த நிருபர்கள் எப்படிக் காலக்ஷேபம் செய்கின்றனர் என்பது வியப்பாகவே இருக்கும். சிலர் இன்ஷியூரன்ஸ் ஏஜண்டாயிருந்து கொண்டு நிருபர்களாகவுமிருக்கின்றனர்; இன்னும் சிலர் கிராம முன்சீபாயிருந்து கொண்டு நிருபர்களாயிருக்கின்றனர்; மற்றும் சிலர் தரகு வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றனர். ஏதாவது தொழில் செய்து கொண்டு நிருபர் வேலையை உபசாதனமாகக் கொண்டிருப்பதனால் தான் நிருபர்கள் சன்மானப் பிரச்னை முக்கியமாகக் கருதப் படவில்லை என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப் பட்டது. பத்திரிகைத் தொழிலில் பூரா கவனம் செலுத்தாதவர்களால் அந்தத் தொழிலுக்கு சிறப்பு ஏற்படாது என்றும், சர்வகலா சாலையில் வேறு பகுதியில் இடங் கிடைக்கா விட்டால் "பிலாஸபி" பகுதியில் சேருவது போல் வேறு துறையில் சோடையாகப் போனவர்கள் பத்திரிகை நிருபராகி விடுகின்றனர் என்று ஒரு ஆசிரியர் கூறினார்.

இதற்கு ஒரு நிருபர் பதில் கூறியது ருசிகரமாயிருந்தது. வியாபாரத் துறையில் நல்ல அந்தஸ்திலிருப்பவர் பத்திரிகை நிருபராயிருந்தால் அவரால் பத்திரிகையின் அந்தஸ்து உயருகிறது என்று கூறினார்.

ஒரு ஊரில் ஒருவர் ஒரு பிரபல தினசரியின் நிருபராக பல வருஷங்கள் தொண்டு புரிந்தார். இதனால் அவருக்குக் கிடைத்த சன்மானம் ஒரு இலவசப் பத்திரிகைதான். ஆனால் அவர் திருப்தி யடையவுமில்லை, ஏனெனில் அந்த பத்திரிகையின் நிருபர் என்கிற காரணத்தினாலே அந்த ஊர் மக்கள் அவரை மிக உயர்ந்த முறையில் மரியாதையாக நடத்தியதும் அதனால் அவர் மிக செல்வாக்காக காலம் கழித்ததுமே அவருக்கு திருப்தி யளித்தது. ஆனால் இம்மாதிரி நடந்தது முப்பது அல்லது நாற்பது வருஷத்திற்கு முன்.

ஒரு பத்திரிகைக்கு சொந்த நிருபர்கள் இருக்கிறார்கள். விசேஷ நிருபர்களிருக்கிறார்கள். நிருபர் தொழில் நடத்தாமல் எப்பொழுதாவது ஒரு சமயம் ஒரு செய்தியனுப்பி அதற்காக சன்மானம் பெறுபவர்களிருக்கிறார்கள்.

நமது தமிழ் பத்திரிகை நிருபர்கள் ஆரம்ப ஆசிரியர்கள் போல் அலட்சியமாக நடத்தப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு செல்வாக்கும் ஏற்படுவதில்லை, அவர்களைப் பிறர் மதிப்பதுமில்லை.

மேல் நாடுகளில் யார் செய்தி அனுப்பி பிரசுரிக்கப் பட்டாலும் அதற்கு ஐந்து ரூபாய்க்கு சமமான சன்மானம் அளிக்கப்படுகிறது. பத்திரிகையில் பிரசுரமாகும் ஒரு சிறு துணுக்கும் மேல் நாட்டில் பணம் கொடுத்து வாங்கப்படுகிறது. ஒரு ஊரிலுள்ள குறையைப் பற்றி ஒரு நிருபர் எழுதினால் அதற்கும் பணம் கொடுக்கிறார்கள். இந்த நிலை நம் நாட்டிலும் ஏற்பட வேண்டும்.

இம்மாதிரி அமர்த்தப்பட்ட நிருபர் ஒரு செய்தி அனுப்பி, அகஸ்மாத்தாக ஒருவர் அதே செய்தியை அனுப்பினால் பிந்தியவருடைய செய்தியைப் பிரசுரித்து விட்டு சாசுவத நிருபர் எழுதியதைப் பிரசுரிக்காமல் அவருக்கு நாமத்தைச் சாற்றி விடும் வழக்கம் இருக்கிறது. நம் நாட்டிலுள்ள பிரபல ஆங்கில பத்திரிகைகளும், பிற தேசப் பத்திரிகைகளும் தங்கள் சொந்த நிருபர்களுக்குத் தான் பிரதான்யம் கொடுக்கின்றனர்.

ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு நாட்டு நடப்பைத் தெரிவிப்பவர்கள் நிருபர்கள்தான். நிருபர்கள் அளிக்கும் தகவல்களைக் கொண்டுதான் ஆசிரியர் தன் அபிப்பிராயத்தை நிர்ணயித்துக் கொள்கிறார். செய்திப் பத்திரிகைகளின் உயிர் அவைகளின் நிருபர்கள். ஆசிரியருடைய காதும் கண்ணும் பத்திரிகை நிருபர்கள் தான் என்று பத்திரிகை சம்மேளனத் தலைவர் கூறினார். காதையும், கண்ணையும் பாழடையச் செய்து செவ்வனே வாழ முடியுமா? நமது நிருபர்கள் ஆசிரியரின் அனுதாபத்திற்குரியவர்கள். அவர்களை அலட்சியம் செய்யலாகாது.

கமலாவும் மேரியும்

சி.ஆர். ராமசுவாமி

காகங்கள் கரைவதையும் குயில்கள் கூவுவதையும் கேட்டு கமலா கண் விழித்து கட்டிலில் கண்களைத் தேய்த்து எழுந்து உட்கார்ந்தாள். கதிரோனின் தங்கக் கிரணங்கள் மலைகளையும் மரங்களையும் பச்சை இலைகள் மேலும் புல் மேலும், நீர் மேலும், நிலத்தின் மேலும், சுத்தமான இடங்களிலும், அசுத்தமான இடங்களிலும் விருப்பு வெறுப்பு நீங்கின யோகியின் திருஷ்டி போல் பக்ஷபாதமின்றி விழுந்திருப்பதைப் பார்த்தாள்.

அவள் பள்ளிக்கூடப் படிப்பு, கல்யாணம், கணவனுடன் ஓர் வார காலம் விளையாடினது, அவர் பம்பாயிலிருந்து வேலை சம்பாதித்து, குடியிருக்க வீடு பார்த்ததாக எழுதினது, பிறகு சுரம் கண்டு துணைக்கு தன்னை அனுப்ப எழுதினதும், தன்னை தகப்பனார் அனுப்பாததால் வேறு வகையின்றி ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்து கொண்டு விட்டதாக எழுதினது எல்லாம் அவள் மனக்கண் முன் சினிமாப் படம் போல் தோன்றிற்று.

பாட்டு வாத்தியார் வந்திருக்கிறார் என்றதும் அவசரமாய் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு காப்பி சாப்பிட்டுவிட்டு பாட்டு வாத்தியாரின் முன் உட்கார்ந்தாள்.

கமலாவின் தகப்பனார் சபாபதி முதலியார் சேலத்தில் ஒரு மிட்டாதார். அவருக்கு மலையில் காப்பி தேயிலை தோட்டங்களிலிருந்தும் மேலும் ஓர் ஸ்டூடியோவுக்கு சொந்தக்காரராகவும், ஓர் பிலிம் கம்பெனிக்கு டைரக்டராகவுமிருந்தார். அவருடைய மனைவி இறந்து ஐந்தாறு வருஷங்களாகி விட்டன. செல்லமாய் வளர்த்த கமலா தன்னிடத்திலேயே இருக்க விரும்பி தூர பந்துவும், தாய் தகப்பனை யிழந்தவனுமான சுப்பிரமணியத்திற்கு மணம் செய்து வைத்தார். அவருடைய பண உதவியால் பி. ஏ. படித்திருந்தான். அவன் தன்னைப்பீசிலேயே வேலை செய்ய வேண்டுமென்று விரும்பினர். ஏதாவது ஒரு பொருளை கண்களுக்குப் பக்கத்தில் வைத்துப் பார்த்தால் உறுத்தும். அவன் மாமனாரின் நடத்தையிலும் மனைவியின் நடத்தையிலும் இல்லாத அலட்சியத்தைக் கற்பித்துக்கொண்டு வீண் மனவருத்தமுற்ருன். பம்பாயில் ஒரு ஜெனரல் ஸ்டோரில் தன் சினேகிதன் ஒருவனின் மூலம் ஒரு 'சேல்ஸ்மன்' உத்தியோகத்தை சம்பாதித்துக்கொண்டான். அங்கே சென்று கோட்டையில் ஒரு 'டென்மெண்ட்' ரூமை பிடித்து மனைவியை அனுப்பச் சொல்லி கடிதம் எழுதினன். பிறகு அவனுக்கு ஜுரம் கண்டு மேற்சொன்ன சம்பவங்கள் நடந்தன.

ஆஸ்பத்திரியில் சேர்ந்தவுடன் அவனுக்கு ஜுரம் அதிகமாய் விட்டது. அவனைப் பார்க்க நியமிக்கப்பட்டிருந்த நர்ஸின் சிரித்த முகத்தையும், பிழையின்றி அவள் கடமையைச் செய்யும் விதத்தையும், மனச் சோர்வுற்றபோது வேடிக்கையாகப் பேசி உற்சாகமூட்டுவதையும் கண்டு, "எனக்கும் இவளுக்கும் என்ன பற்று இருக்கிறது? கட்டின மனைவிகூட நான் நோயுற்ற சமாசாரத்தைக் கேட்டு சிறிதும் கவலைப் பட்டதாகக் காணவில்லையே. ஹிந்துக்கள் சீதையையும், தமயந்தியையும் தங்கள் இலட்சிய ஸ்திரீகளாக எண்ணுவதாகப் பெருமையடித்துக் கொள்ளுகிறார்களே. வாழ்க்கையில் அவர்களுக்கு ஆடம்பர ஆடைகளைப்பற்றியும், அணிகளைப் பற்றியும் ஆவலைத் தவிர வேறு உயர்ந்த எண்ணங்கள் அவர்கள் மனதில் உதித்ததுண்டா?" என்று அடிக்கடி தன்னையே கேட்டுக் கொண்டான். அவள் இவனுக்கு சிஸ்ருஷை செய்தபொழுது நடந்த சம்பாஷணையின் மூலம் அவளுக்கு இன்னும் கலியாணமாகவில்லை என்று தெரிந்து கொண்டான். அவனுக்கு ஒரு மாதத்தில் உடம்பு பூராவும் குணமாகிவிட்டது. ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட நட்பு ஆஸ்பத்திரியை விட்ட பின்பும் தொடர்பு பெற்றிருந்தது.

அவள் தம்பியுடன் வசித்திருந்த வீட்டிற்கு இவன் போய்வர ஆரம்பித்தான். அவளும் இவனுடைய நட்பைப் பிரதிபலித்தாள். சாதி பேதந்தான் தடையாக இருந்தது. சுப்பிரமணியன் ஓர் நாள் தான் கிருஸ்தவ மதத்தைத் தழுவ விரும்புவதாகவும், அப்படிச் செய்தால் அவள் தன்னைக் கணவனாகக் கொள்ள தயாராய் இருப்பாளா என்று கேட்கவும் துணிந்தான். அதற்கு மேரி, "எனக்கு உபதேசம் செய்ய யார் இருக்கிறார்கள்? என் உள்ளத்தில் எது நல்லதென்று தோன்றுகிறதோ அதையே கடவுளாக்ஞையாக எண்ணி நடக்க தயாராக இருக்கிறேன்" என்று சொன்னாள். சுப்பிரமணியன் கிருஸ்தவனாய் விட்டான். இருவருக்குமிடையே மோதிர மாற்றமும் நடந்து விட்டது. ஆறு மாதத்திற்குள் கலியாணம் செய்து கொள்ள நிச்சயித்தார்கள்.

கமலா தன் மனம் பூராவையும் சங்கீதப்பயிற்சியில் செலுத்தி தன் துக்கத்தை மறக்க முயன்றாள். என்னதான் முயன்றும் அவளால் சுப்பிரமணியனை மறக்க முடியவில்லை. தன் இதயத்தில் அன்பை செலுத்திய வேடனேதான் அதை எடுத்து அவள் இதயத்திலேற்பட்ட புண்ணை ஆற்ற வல்லவனென்பதை உணர்ந்தாள்.

ஆறு மாதங்கள் சென்றன. அவள் தகப்பனாரின் வற்புறுத்தலின் பேரில் கச்சேரிகளிலும் ரேடியோவிலும் பாட ஆரம்பித்தாள். ஓர் நாள் அவள் பாலிய ஸ்நேகிதி மேரியிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

அன்புள்ள கமலம்,

ஓர் சந்தோஷ சமாசாரம். எனக்கு ஒரு மாதத்தில் கல்யாணம் நடக்கப் போகிறது. என்னை மணக்கப் போகிறவர் ஓர் ஹிந்துவாயிருந்தவர். என்னை மணக்கும் பொருட்டு அவர் ஹிந்து மதத்தை விட்டு கிருஸ்தவ மதத்தை தழுவிக் கொண்டார். அவர் அழகாயிருப்பார். அவருடைய பரிசயம் முதல் முதலில் அவர் ஆஸ்பத்திரி

யில் டைபாயிட் சுரத்தில் படுத்தி ருக்கையில் நான் நர்ஸாயிருந்த பொழுது ஏற்பட்டது. பிறகு அது வளர்ந்தது. இத்துடன் அவ ருடைய புகைப்படம் அனுப்பி யிருக்கிறேன். அவருக்கு இங்கே ஜெனரல் ஸ்டோரில் நூற்றைம் பது ரூபாய் சம்பளம். அவரு டைய இனிமையான சுபாவத்தை போட்டோ எடுத்துக் காண்பிக்க முடியாது. நீ என் கல்யாணம் செய்து கொண்ட பின் கடிதம் எழுதுவதை நிறுத்தி விட்டாய்? கணவனின் சேவையில் பழைய சிநேகிதியை அறவே மறந்து விட்டாயா?

இப்படிக்கு,
மேரி.

இந்தக் கடிதத்தைப் படிக்கை யில் கமலாவின் இதயம் வெடித் துப் போய்விடும் போல் துடித் தது. அவள் கண்களிலிருந்து நீர் பெருகி அவள் கடிதத்தின் மேல் விழுந்தது. ஒரு மணி நேரம் சிந் தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு மேரிக்குக் கடிதமெழுதினாள். அதற்குள் அவள் தம்பி ஓடிவந்து, “இது யார் போட்டோ? அத்திம் பேர் போடோ போலிருக்கிறதே. பேபரில் நீ நாளைக்கு ரேடியோ வில் பாடப் போவது வந்திருக் கிறது” என்று கத்தினான். கமலா, “ஆமாம். நீ இதைத் தபாலில் போடு” என்று தான் எழுதின கடிதத்தை அவனிடம் கொடுத்து, போட்டோவை எடுத்து மறைத்து வைத்தாள். இல்லாவிட்டால் போட்டோ வைப் பற்றி எல்லாருக்கும் சொல்லி சிவசங்கரன் வீண் கேள் விகளைக் கிளப்பி விடுவான்.

மேரி சுப்பிரமணியன் ஸ்டோரி லிருந்து தனக்காக “ஸெலெக்ட்” செய்து வாங்கித் தந்த ‘வெடிங் கவுனை’ எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அடுத்த வாரம் அதை உடுத்தி அவள் சுப்பிரமணியத்துடன் கோவிலுக் குப் போய் இன்பத்திலும் துன் பத்திலும் பிரியாத வாழ்க்கைத் துணைவியாக இருப்பதாக சபதம் செய்து கொள்ளப் போவாள். இதைப் பற்றி அவள் ஆழ்ந்து யோசனை செய்து கொண்டிருக் கையில் தபால்காரன் அவள் கை யில் ஓர் கடிதத்தை தந்து சென் றான். விலாசத்தை யெழுதின கையெழுத்தைப் பார்த்தவுடன் அவள் கடிதம் தன் பள்ளி சிநே கிதி கமலாவிடமிருந்து வந்திருக் கிறதென்று ஊகித்து கடிதத்தைத் திறந்து படித்தாள்.

எனது அன்புமிக்க மேரிக்கு,

உன் கல்யாணத்தைப்பற்றி படித்து முதலில் சந்தோஷமடைந் தேன். பிறகு நீ அனுப்பின போட்டோவைப் பார்த்து அந்த சந்தோஷம் பறந்து போய் விட் டது. அது என் கணவனுடைய போட்டோ. என் மனதில் உனக்கு இந்த விஷயத்தை வெளிப் படுத்துவதா, வேண்டாமா வென்று பெரிய போராட்டம் நடந்தது. ரகசியத்தைஒளித்தால்... குந்திதேவி கிளப்பின தீங்குகளை பாரதத்தில் நான் படித்திருக்கி றேன். உண்மையைச் சொல்லி விடுவதே நம் மூவருக்கும் நல்ல தென்று முடிவிற்கு வந்து இந்த கடிதத்தை எழுதத் துணிந்தேன். அவர் கல்யாணமானதும் பம் பாய்க்கு சென்று தனக்கு சுரம் வந்து விட்டதாகவும், துணைக்கு என்னை அங்கே அனுப்ப வேண்டு மென்றும் என் தகப்பனாருக்கு எழுதினார். என் தகப்பனார் இரு வரும் புது ஊரில் அலைவதைவிட அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை

செய்து கொள்வது நல்லதென்று எழுதினர். அது முதல் அவர் நமக்கு கடிதம் எழுதுவதையே நிறுத்தி விட்டார். அவரை நான் முதலில் காதல் கொண்டு பிறகு மணம் செய்து கொள்ளாவிட்டாலும், மணம் செய்த பின்பு அவர் மேல் அளவு கடந்த காதல் கொண்டு விட்டேன். நீ அவரை உண்மையாய்க் காதலிக்கிருயா? இப்பொழுதும் அவர் தன் காரணமற்ற கோபத்தை மறந்து என்னை யேற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை. உன் பாலிய சிநேகிதியின் அன்பு காட்டி நீ என்ன செய்வாய் என்று நான் எதிர்பார்ப்பதை சொல்லவும் வேண்டுமா?

இப்படிக்கு,
கமலா.

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் மேரியின் முகத்தில் ஓர் ஏளன பாவம் தோன்றிற்று. "ஆண்களை நம்பினல் இப்படித் தான் மோசம் போவோம்" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டாள். அன்று சாயந்திரம் சௌபாதி கடற்கரையில் சந்திப்பதாக அவள் சுப்பிரமணியத்திடம் ஏற்பாடு செய்திருந்தாள். இன்று அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று நிச்சயம் செய்து கொண்டாள். மாலை ஆறு மணிக்கு அவள் அங்கே சென்று சுப்பிரமணியம் தனக்காக வழக்கமான இடத்தில் காத்திருப்பதைப் பார்த்து புன்னகைபுரிந்து அவனருகில் சென்று அமர்ந்தாள். ரேடியோ பாட ஆரம்பித்தது. அது ஏதோ சென்னை ரேடியோ நிலயத்து பாட்டைத் திருப்பி பாடிற்று. சுப்பிரமணியன் தன்னைக் கவனியாமல் பாட்டை ஆவலுடன் கேட்டின்பத்தில் லயித்துப் போனதின் காரணத்தை அவள் பாடகியின் குரலைக் கேட்டவுடன் ஊகித்தாள். அது கமலாவின் குரல்!

சுப்பிரமணியத்தைப் பார்த்து "பாடுகிறவள் உமக்குத் தெரியுமா? என்னைக்கூட கவனியாமல் பாட்டைக் கேட்டுக்கொண்டிருக்கிறீரே! உமக்கு சங்கீதத்தில் அவ்வளவு மோகமுண்டு என்று எனக்கு இதுவரையில் தெரியவில்லையே" என்ருள்.

சுப்பிரமணியம் "குரல் தெரிந்த குரலாயிருந்தது. யார் என்று கவனிக்கலானேன். கவுன் பிடித்திருக்கிறதா?" என்று மழுப்பினன்.

மேரி, "உங்களுக்கு ஏற்கனவே கல்யாணமாயிருக்கிற சமாசாரத்தை ஏன் என்னிடம் மறைத்து வைத்தீர்? அதுதான உண்மைக் காதலின் லக்ஷணம்? அல்லது ராஜா, நவாப்புகள் மாதிரி ஜனுனு அந்தப்புரம் வைத்துக் கொள்ளும் உத்தேசமா?" என்று கேட்டாள்.

சுப்பிரமணியம் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். "எனக்கு கல்யாணம் ஆனது வாஸ்தவந் தான். ஆனல் அவள் எனக்கு ஆபத்து நேர்ந்த சமயத்தில் உதவவில்லை. அவளை மறந்துவிட தீர்மானித்து விட்டேன்" என்ருன்.

அதற்கு மேரி, "நீர் அவ்வளவு முன் கோபக்காரரென்று எனக்குத் தெரியாது. மேலும் கமலா என்னுடன் கூடப் படித்தவள். அவள் மிகவும் நல்ல பெண். உமக்காக உயிரை விடுகிருள். அவள் வாழ்க்கையைக் கெடுக்க நான் விரும்ப மாட்டேன். மேலும் நான் கிருஸ்துவள். நான் மற்ற கிருஸ்துவர்கள் போல புருஷர்களோடு தாராள

1972/43

மாய்பேசி கைகுலுக்கி "டான்ஸ்" செய்யப்போனல் உங்களுக்கு கோபம் வருமே! உடனே அவளுக்கும் அவள் தகப்பனருக்கும் கடிதமெழுதி மன்னிப்பு கேளுங்கள்"

சுப்பிரமணியன் அவள்சொன்ன படியே செய்தான். அவன் ஆரிய சமாஜத்தில் சேர்ந்து கமலாவுடன் வசந்தத்தின் களிப்புடன் கூடிய இல்லற வாழ்க்கையை ஆரம்பித்தான்.

மேரி தன் குழந்தைகளையும் கணவனையும் அழைத்துக்கொண்டு கமலாவின் வீட்டிற்கு வருவாள். மேரியின் கணவன் அவள் தம்பி வேலை செய்து வந்த பத்திரிகையில் உதவி ஆசிரியர். ஜோசபிற்கும் சுப்பிரமணியத்திற்கும் ஒரே சமயத்தாரிடையே கூட காணக் கூடாத ஆழ்ந்த நட்பு ஏற்பட்டது.

ஹிந்து-கிருஸ்து மதாசாரங்களின் விவாக விதிகளைப்பற்றி சர்ச்சை நடந்தால் ஜோசப், "ராமர் தெய்வத்தின் அவதாரம். சீதை ஜனகமகரிஷி புத்திரி. லக்ஷ்மியின் அம்சம். ராமரின் தியாகமும், சீதையின் பதிவிரதா தர்மமும் ஆச்சரியத்தை விளைவிப்பதல்ல. ஆனல் சாதாரண ஹிந்து ஸ்திரீகளும், புருஷர்களும் அவர்களைப் போல் நடக்க முயல்வதும், அந்த முயற்சியில் ஓரளவு சித்தி பெறுவதும்தான் போற்றத் தக்கது. கிருஸ்து மதத்திலும் அதே லட்சியங்கள்தான் மேலாகக் கருதப்படுகின்றன. ஆனல் உயர்ந்த லட்சியங்களைப் பின்பற்றும் முயற்சியில் தவறினவர்கள் மேலும் கெட்டழிந்து போகாமலிருக்க நமது மதாசாரத்தில் வழிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றை மட்டும் எடுத்து நமது மதத்தைப் பழிப்பது பிசகு" என்பார்.

இசை இன்பம்

காலம் படைத்தாய், கடப்பதிலாத் திக்கமைத்தாய்
ஞாலம் பலவினிலு நாடோறுந் தாம்பிறந்து
தோன்றி மறையுந் தொடர்பாப் பலவனந்தம் :
சாலமிகப் பெரிய சாதனைகா ணிஃதெல்லாம்!
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார் யார்?
ஆனாலு நின்றன் அதிசயங்கள் யாவினுமே,
கானமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!
நாட்டு நெடுவானங் கடலெல்லாம் விந்தையெனில்,
பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்க ளொத்துப் புதுமை தரல் விந்தை எனில்
நாதங்கள் சேரு நயத்தினுக்கு நேராமோ?
ஆசை தருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே,
ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?

— பாரதியார்

அந்த நாட்கள்

பி.மாரிசெட்டி பி.ஏ.ஆனர்ஸ்

அன்பன்

வளர் பிறை ஒத்த நிறை குணம் பெற்ற நீ பால் வடியும் முகமும் அமுதனைய சொற்களும் பெற்றுள்ளாய். அன்று கிள்ளை மொழிகளிலே பேசி மகிழ்வித்தாய்.

நீ அசைவதில் நடப்பதில், உட்காருவதில், உண்பதில், உறங்குவதில் ஒரு தனி இன்பம் கண்டேன். உள்ளம் களி வெறி கொண்டது.

பாவை போன்ற சாயலில் தங்கமென மிளிரும் அழகு பெற்று விளங்கும் நீ அன்று மௌனம் சாதித்தாய்.

தினந்தோறும் உணவு பரிமாறுகையிலே நீ உபசரிக்கும் தன்மையை என்று நான் மறக்க முடியும்? 'போதும்' என்று சொல்லுகையிலும் 'இதோ கொஞ்சம்' எனக் கொஞ்சி அமுதிட்டு என்னை மகிழ்வித்தாய்!

மாலை நேரத்திலே சோர்வுடன் வீடு திரும்பும் வேளையில் மதிபோன்ற முகத்தினைக் கண்டவுடன் மனம் கொள்ளும் மகிழ்வை அளவிட யாருளர்?

வளையல்கள் கொஞ்ச, சதங்கைகள் சப்திக்க என்னை வரவேற்க வரும் உன் தாபம் என்னை மௌனியாக்குகிறது.

எனது குரலைக் கேட்டதும் நீ துள்ளி எழுந்து ஓடி வந்து கதவைத் திறப்பதை இன்றும் என் மனம் அகக் கண்ணால் பார்த்து மகிழ்வடைகிறது. கன்றை நினைத்து ஓடிவரும் பசுவிற்கு என்னை ஒப்பிட முடியும் என்றாலும், உன் அன்பிற்கு உவமை இல்லை.

இளந் தென்றல், மணக்கும் முல்லை, தளிர்க்கொடிகள் பாடும் பறவைகள் இவைகளிலே உன்னைக் கண்டேன்.

அந்த நாட்கள் என்று வரும்?

காதலி

வசந்த காலத்திலே எனது மணம் நிறைவேறியது. எதிர்கால வாழ்க்கையைப் பற்றி பல கோட்டைகள் கட்டியிருந்தேன். ஆனல் அவை எப்பொழுது நிறை வேறும்?

கிளி கொஞ்சுகிறது; குயில் பாடுகிறது. ஆனல் என் மனத்திலே அமைதி இல்லை. வழி நெடுக நடந்து போய்ச் சேர வேண்டிய இடத்தை விட்டு வேறு ஒரு காட்டிற்கு வந்து விட்டால் எப்படி மனம் கவலுறுமோ அங்ஙனம் என் உள்ளம் உள்ளது.

அழகாக வானத்திலே அன்று வானவில் போட்டிருந்தது. "............இங்கே வா சீக்கிரம் வாயேன்" என்று கொஞ்சுதலுடன் கூறினர். நான் மானென வந்தேன். வான வில்லைச் சுட்டிக் காட்டினர். நானும் பார்த்தேன். ஒன்றும் அதிசயம் காணவில்லை. ஆனல் அவரோ, "வர்ண பேதங்கள் உன் வளையல்களைக் கண்டு தான் அங்கு இடம் பெற்றிருக்க வேண்டும்" என்றார். என் மனம் வெட்கமடைந்தது.

தெளிவற்ற உள்ளம் படைத்த எனக்கு அடிக்கடி உள்ளத்தைத் தொடும் கவிகள் எழுதித் தருவார். ஆகா! அதன் பொருள்கள் எனக்கு விளங்காவிடினும், அவர் அதைப் படித்துக் காட்டும் போது என்னை மறந்து அவர் மடியில் சாய்ந்திருப்பேன்.

தோட்டத்திலே காய் கறிச் செடிகள் வளர்ந்திருந்தாலும், நமக்கு புஷ்பங்கள் குலுங்கும் மலர்ச் செடிகளின் மேலுள்ள பிரியம் அவற்றின் மேல் இல்லையல்லவா? தாய் தந்தையரும் மாமன் மாமியரும் என் மேல் அன்புடன் தான் உள்ளனர். ஆனல் என் ஞாபகம் 'அவர்' மீது தான் தாவுகிறது.

காலைக் கதிரவன், மாலை நேரம், பூரணச் சந்திரன் சிரிக்கும் முல்லைகள் இவைகளிலே அவரைக் கண்டேன்.

அந்த நாட்கள் என்று வரும்?

★

மறுநாள் பத்திரிகைகளில், பெரிய எழுத்தில் 'இரண்டு படங்கள்' என்ற தலைப்பிட்டு, பாதிரிமாரின் இந்தியத் தாய் ஒரு புறம், இந்திய மணியின் ஆவேச மொழிகள் மறு பத்தியிலும் வந்தன... அத்துடன் சித்திர மாளிகையில் விளக்கணைந்து ஐந்து நிமிஷம் இருள் மேவியதில் அடிதடி நடந்து பலருக்குக் காயம், பலர் பொருளைப் பறி கொடுத்தனர்... என்றெல்லாம் புகார் வந்தது... அந்தக் கதை அப்படியிருக்கட்டும்.

மணி வீட்டுக்கு வந்ததுமே ஜெங்கின்ஸிடம் 'ஐயா இப்படிப் படத்தைத் தயாரிப்பது யார்?' என்று வினவினான்... ஜெங்கின்ஸ் ஹாலிவுட் படத்தொழிலை வர்ணித்தார்... 'நண்பரே நாளையே ஹாலிவுட் செல்வோம். லெஸ் எஞ்செல்சுக்கு வாங்கும் சீட்டு' என்றான்... இனி நாம் ஹாலிவுட் செல்வோம்.

அத்தியாயம் முப்பது

ஹாலிவுட்டில் மணி

ஹாலிவுட் மோகனபுரி. உலகப் படத்தொழிலின் தலைநகர். 1914-ம் ஆண்டுதான் இந்நகர் தலை தூக்கத் தொடங்கியது. இப்போது சுமார் 26 மைல் விஸ்தீரணத்தில் லண்டன்போல் விளங்குகிறது. லெஸ் எஞ்ஜெல்ஸிலிருந்து மோட்டார் ஏறினால் நேராக ஹாலிவுட் சேரலாம். அதன் மலைக்காட்சியும், மலர்க்காட்சியும் இதாலிய — ஸ்பானிய சிற்பக் கட்டிடங்களும், வெண் மாளிகைகளும், மின்சார அணி விளக்குகளும், சுறுசுறுப்பான தொழில்களும், அரங்குகளும் வானொலி நிலையமும், படமாளிகைகளும் நமது கண்ணைக் கவரும். ஹாலிவுட் பௌளவில் காலைக் காட்சியும்

அங்கு ஆயிரக் கணக்கான பேர்கள் கூடி பிரார்த்தனை நடத்தும் புனித காட்சியும் உள்ளத்தை அள்ளும். இங்கே காணும் வீடுகள் பலவடிவு பல அழகுடன், நாகரிகமாக நிலவும். ஹாலிவுட்டில் நாற்பது பெரிய தொழில்கள் உண்டு. எனினும் பிலிம் தொழிலே அதை உலகம் அறியச் செய்தது. படத் தொழிலுக்கேற்ற இயற்கை — செயற்கை வனப்புகள் அங்கே அமைந்திருக்கின்றன. ஊரைப் பார்ப்பதே படக்காட்சி போலத்தானிருக்கும்.

ஹாலிவுட்டில் பல படமாளிகைகள் உண்டு; அவற்றுள் வாகர் சகோதரர், யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ், பாரமௌண்டு, ஆர். கே. ஓ., ஹால் ரோஷ், பாதே, மெட்ரோ கோஸ்ட்வின், முதலியவை மிகப் பெரியன. ஸன்ஸெட் புல்வார்டில் பாவர் டிரோ (ஏழைவரிசை) என்றுண்டு. அதில் பல சிறு சிறு ஸ்டுடியோக்கள் உண்டு. அவை உலகிற்குத் தெரியாமலே அடக்கமாகப் படத் தொழில் நடத்துகின்றன. அந்த வரிசையில் இடம்பச் செருக்கில்லாமல் ஒழுக்கமுடன் எளிய வாழ்வு வாழும் கலைவாணர் சிலர் இருந்தனர். ஹாலிவுட் பெரிய நட்சத்திரங்கள் இலட்சக் கணக்கில் வாங்கி இலட்சக்கணக்கில் செலவிட்டு வாழ்வை அனுபவிக்கும் போகிகள், இவர்களுக்கிடையே வந்தது போதுமென்று திருப்தியாயிருக்கும் ஏழைத் தொழிலாளர் இந்த வரிசையில் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகளில் இந்தியர் சிலரும் வேலை கற்கிறார்கள். வாகர் ஸ்டுடியோவுக்குச் சற்று தள்ளி ஒரு வெண் வீடு காண்கிறது.........அதுதான் ஸிம்பில் ஜாக் வீடு. ஜாக் படக் கலையில் மிகத் தேர்ந்தவன். என்றாலும் நட்சத்திரங்களை மயக்கும் மோகனசாலம் அவனுக்குத் தெரியாது. அவன் தெய்வ பக்தன் கீதைப் பித்தன். அவன் முன்னோர் கண்கார்டில் எமர்ஸன் தோரோ விட்மான் முதலியோரிடம் வேதாந்தம் கேட்டவர்கள். அவனே விவேகானந்தர் பிரசங்கத்தைக் கேட்டு, அத்வைதக் காதல் கொண்டவன். அவன் பரமஹம்சர் உபதேசங்களையும் விவேகாநந்தர் பிரசங்கங்களையும் அள்ளிப்பருகி ஆத்மதாகங் கொண்டவன். அவனுக்கு இந்தியர் என்றால் மிகவும் பிரியம். உள்ளன்புடன் அவர்களை வரவேற்று உபசரித்து ஆவன செய்வான். அவன் உலகச் செருக்கையும், காலச்சூழலையும் நன்றாகப் பார்த்தவன். வாழ்வில் ஏராளமான கஷ்டநஷ்டப் பட்டவன். அவன் உறவினர் கைப்பொருளை எல்லாம் மெல்லச் சுரண்டிக் கொண்டு அவனைத் திவாலாக்கினர். மனைவி மக்களை இழந்த அவனுக்கு இந்த முதிய வயதில் தெய்வ பக்திதான் ஆறுதல். தேடி வந்த படவேலையை மகிழ்வுடன் செய்வான் வலுவில் யாரையும் யாசியான்.

இந்த சிம்பிள் ஜாக் லூயி நண்பன். மணி கோஷ்டி நேரே இவன் வீட்டிற்கே வந்து, லூயி இவர் இந்திய நண்பர் என்றதுமே வாருங்கள் வாருங்கள், கண்மணிகளா என்று அருமையாக உள்ளே அழைத்துச் சென்று இருக்கை தந்து, உணவு தந்து உபசரித்து வந்த செய்தி என்ன என்று கேட்டான் ஜாக்.

மணி : பெரியவரே, இந்தக் காலம் படத்தொழில் நாகரிகத்தை ஆக்கவும் அழிக்கவும் பயனுகிறது. நல்லதும் தீயதும் அத

ளுல் பரவுகின்றன. நான் ஒரு கலைப்பித்தன். லூயி மற்ற தெல்லாம் சொல்லியிருக்கிருர். எனக்குப் படத்தொழில் கற்க விருப்பம். தாங்களே என் குரு. தொழிலைக் கற்று எனது நாட்டு நாகரிகத்தையும் ஆத்ம வீரர்களையும் உலகிற்கு விளக்கவே நான் படப் புலவனுகப் போகிறேன். நான் அமைக்கும் கலைக்கோயிலில் படத்தொழில் முதன்மை வகிக்கும். என் முன்னுரை போதும். தங்கள் இன்னுரை தருக.

ஜாக்: அப்பா மணி, என் மகனே, எனக்குத் தெரிந்த வித்தையை அள்ளிக்கொண்டு போ இந்தியாவுக்கு. ரஷ்யாவில் புடோவ்கியுடனும் இங்கே கிரிபித்திடமும் இருந்து நான் ஸினிமாவும் பேசும் படமும் கற்றேன். நானே இந்த ஹாலிவுட்டில் முதன் முதல் படத்தொழிலுக்கு அடிப் போட்டேன். வாகர் சகோதரரும் என்னிடம் கற்றுத்தான் இப்போது அதோ பெரிய ஸ்டுடியோ அமைத்துக் கோடீசரானுர். ஸெயிண்ட் மோனிகா கடற்கரையிலும் பௌளவிலும் இன்று படம் பிடிக்கும் டிரக்டர்கள் பலர் என்னிடம் கற்றவர்களே. நான் இந்தத் தொழிலில் ஏராளமாகச் சம்பாதித்தேன், தாராளமாகத் தந்தேன். ஆனல் உலகின்பத்தை நான் காண முடியவில்லை. உலகம் என்னை ஏமாற்றியது. மனைவி மக்கள் வீடு சொத்து சுகம் என்று நான் அகம்பாவித்த காலம் உண்டு. நாளைக் கவலையில்லாமல் ஆயிரக் கணக்காகச் செலவிட்ட காலமும் உண்டு. ஆனல் என்னை இறைவன் பலவாறு சோதித்து விட்டானப்பா. மனைவி மக்களை ஒரே பிளேக்கில் பறித்துச்சென்ருன் அவன். அந்தத் துயரம் தாங்காமல் சிகாகோ சென்றேன். அங்கே சுவாமி விவேகானந்தர் பிரசங்கம் கேட்டேன். என் மனம் கீதை வழியே சென்றது. கடோபநிஷத்தைப் படித்து ஆறுதல் பெற்றது. இந்திய மகனே, உன் முகக்களை என்னை வசீகரிக்கிறது. எனக்கு நீ பணம் தரவேண்டாம். இந்திய ஞானந்தா.

மணி: தந்தையே ஆண்டவன் எனக்களித்த சுத்த சன்மார்க்க ஞானத்தைத் தங்களுக்கு மகிழ்வுடன் தருகிறேன். இந்தியாவில் சித்தாந்தம் என்ற மற்ருெரு சமயம் உண்டு. தமிழில் அதற்கு ஏராளமான இலக்கியங்கள் உண்டு. அற்புதமான யோகிகளும் ஞானிகளும் அதை வளர்த்தார்கள். அவர்கள் சரிதையெல்லாம் படம் பிடித்து உலகிற்குக் காட்டத்தான் தங்களை அண்டினேன்.

ஜாக்: அப்படியா; சந்தோஷம். ஒருவாரம் நீ என்னுடன் ஹாலிவுட்டைச் சுற்றிப் பெரிய ஸ்டுடியோக்களைப் பார்க்க வேண்டும். பௌளவிலும் கடற்கரையிலும் தெருக்களிலும் படம் பிடிக்கும் முறையைப் பார்க்க வேண்டும். அடுத்த வாரம் முதல் முறையாக உனக்குப் பாடம் சொல்லுவேன். ஒருமாதம் கழித்து நீ பட நாடகம் தயாரி. நாமெல்லாம் அதை நடித்துப் படமெடுக்கலாம். சரிதானே லூயி.

லூயி: நீ சொன்னுல் சரி. நண்பா உன்னை இவ்வளவு காலத்திற்குப் பிறகு பார்த்ததே இன்பம்.

மணின் பாட்டு உன் செவிக்கு அமிர்தமாயிருக்கும்.

ஸிம்பிள் ஜாக் "அப்பா பாடு; ஆனல் ஆங்கிலத்தில் பொருளைச் சொல்லு" என்று உள்ளடங்கி பக்தியுடன் அமர்ந்தான். பொன்னம்பலம் ஆங்கிலத்தில் விளக்க, மணி, வாணி அனைவரும் அமிர்த வர்ஷமாக

[காம்போதி, ஆதி, பல்லவி]

பரமாத்மனை பாவனு திதனை
பரிசுத்த மாகப் பரிசி — மனமே பர

அனுபல்லவி

சிரமான சாந்த த்யான யோகத்தாலே,
ஜீவநாநாதனுடன் போக சுகமெய்
தாய்—பர

சரணம்

எனதி யானென்றே இருமாந் திடாமல்,
எல்லாம் இறைவன் இச்சையென்று
நினை.

அனைத்திலும் உன்னை அனைத்தும் உன்
னுள்ளே
அன்புகொண்டு காணும் இன்பம் ஓங்
கவே—பர

யாழும் குழலும் முழவும் பிடிலும் மணிக் குரலும் சேர்ந்து பாடப்பாட எல்லாரும் பரவசமானர்கள். ஜாக் பாட்டின் பொருளைக் கேட்டு இதுதானே நான் தேடும் ஞானம் என்று துள்ளிக் குதித்தான். மனவுறவு பலமானது.

ஜாக்கிடம் படக்காரருக் கெல்லாம் பயபக்தி யுண்டு. மணியை அவன் எல்லாருக்கும் அறிமுகப் படுத்தினன். பௌளவில் ஒருநாள் அவன் பக்தி கானமும் உபன்யாசமும் நடந்தன. மணியின் பாட்டுக்குக் கிராக்கி ஏற்பட்டது. கொலம்பியா கிராமபோன் கம்பெனி இசைத் தட்டெடுத்தது. படக் காட்சியில் மணி பாட்டும், கமலம் நடனமும், வாணி வீணையும் முதன்மையாக உடன் பெற்றன. மணி ஹாலிவுட்டின் ஆனந்தப் பறவையாய் விட்டான். ஆனல் அபாயமும் தொடர்ந்தது. காம வலைகள் பல மணியைக் குறி வைத்தன. மணி தியான பலத்தாலும், குருவருளாலும், இதிலெல்லாம் மயங்காதேயப்பா எல்லாம் வெளிமயக்கு என்று அடிக்கடி எச்சரிக்கை செய்த ஜாக்கின் நட்பாலும் பெண் வலையிற் சிக்காமல் வைராக்கியமாயிருந்து காரியத்திற் கருத்தூன்றினன்.

மணி முன்பே எடிஸனின் மென்லோ பார்க்கில் படத் தயாரிப்பைப் பார்த்திருந்தான். எடிஸனே முதல் சலனப் படம் தயாரித்தவன். போட்டோ எடுத்தல், பலவகைப் படங்களுக்கு பிலிம் ஸ்கிரிப்ட், 'படக்கதை தயாரித்தல்,' கல்விப் படக்கதைகள், சரித்திரப் படக்கதைகள், படத்தை டிரக்ட் செய்தல், ஷாட்டெடுத்தல், நடித்தல், வேடங்கட்டல், காட்சி ஜோடிப்பு, அதற்வேற்ற சிற்பக்கலை, காமிரா ஒலிபதிவு யந்திர நுட்பம், அவற்றைப் பிரித்து பழுது பார்த்தல், நட்சத்திரத் தேர்ச்சி, நடிப்புக்கலை, சினிமா சங்கீதக்கலை, பின்னணிக் கீதம் தயாரிப்பு, எடுத்த படத்தை வெட்டி ஒட்டி எடிட் செய்து ஓடும் படச்சுருள் தயாரித்தல், பிலிம் செய்யும் வகை, பிரதி யெடுக்கும் வகை, புரொஜக்டரின் நுட்பம், பட ரசாயனம், பட விநியோகம், விமர்சனம், பட நிலையம் அமைப்பு முதலிய எல்லா நுட்பங்களையும் மணி இரவும் பகலும் பெருமுயற்சிகொண்டு விரைவில் கற்றுத் தேர்ந்தான்.

தொழிலைக் கற்கும் போதே நண்பருடன் கூடி நாடகங்களையும் எழுதி மணி நடிக்கவும் தொடங்கினன்.

ஓராண்டு நல்ல பயிற்சி பெற்ற துமே, 'எனது தாய்நாடு' என்ற அழகான படத்தைத் தயாரித்தான் மணி. அதற்காக ஹாலிவுட்டிலிருந்த தமிழர் சிலரையும் சேர்த்துக்கொண்டான். சென்னை, திருச்சி, மதுரை முதலிய இடங்களிலிருந்து நண்பரைக் கொண்டு தமிழ் நாட்டுக் காட்சிகளையும், பிரபல இந்தியர்களையும் படம் பிடித்து வரவழைத்தான். ஜாக் மிக்க மகிழ்ச்சியுடன் நாடகத்தை ஆங்கில மொழிபெயர்ப்பிற் கேட்டுக்கேட்டு இது இப்படியிருக்க வேண்டும் அது அப்படி என்று ஆட்டி வைத்து அருகேயிருந்து படம் பிடிக்கத் துணை செய்தான். அதை ஒளி ஒலிப் பதிவு செய்து, படமாகத் தயாராக்கியதும் போட்டுப் பார்த்தான். படம் முழு வெற்றி பெற்றது என்று ஸிம்பிள் ஜாக்கும், வார்னரும் மிஸ் லூமியேர் என்னும் நடிகையும் சொன்ன பிறகு மணிக்கு ஊக்கம் பிறந்தது. அடுத்த படம் அரிச்சந்திரன் சரித்திரம், அடுத்தது கோவலன், பிறகு இராமாயணம், பாரதம், ஸ்காந்தம், தாயுமானவர், வள்ளலார் எல்லாம், உணர்ச்சி வெள்ளம், அபாரம். தமிழுடன் ஆங்கில மாக... இப்படியே பத்துப் படங்களைத் தயாரித்துக் கொண்டான் மணி. எல்லாப் படங்களிலும் வாணி, கமலா இருவரும் அற்புதமாக நடித்தனர். மணி ஆச்சரியப்படும்படி நடித்தான். பாட்டும் நடனமும் பரிபூரணம். மூன்றுண்டுகளில் பத்துப் படங்கள் தயாராய்விட்டன. 'ஸிம்பிள் ஜாக் எனக்கொரு சபதம் இருக்கிறது.

வாரும் ஸான்பிரான்ஸிஸ்கோ' என்றழைத்தான் மணி. இனிப் படத்தை ஓட்டும் வேலை ஜாக்குடையதே. எல்லாரும் சிவநாமத்துடன் பஜனை பாடி திக்விஜயத்திற்குக் கிளம்பினர். இந்தப் படங்களில் ஒரு விசேஷம் பேச்சு குறைவு பாட்டதிகம், நடிப்பும். இடையிடையே கதை தெரியும்படி இணைக்கப் பட்டிருந்ததால் அமெரிக்கர் அவசியம் ரசிப்பார்கள்.

ஹாலிவுட் நண்பருக்கு நன்றி கூறி மணி ஸான்பிரான்ஸிஸ்கோ சென்றான். அங்கே அதே இடத்தில் தங்கி அதே நகர மாளிகையில் படமோட்டத் துணிந்து ஏற்பாடுகள் செய்தான். மணியின் வெற்றியைக் காண்போம்.

அத்தியாயம் முப்பத்தொன்று

இந்தியப் பெண்மை

புதிய நாகரிகம்! உலகிற்கே வழி காட்டும் இந்திய நாகரிகம்! ஒப்புயர்வற்ற தமிழ்க் கலை விளக்கம். எல்லாரும் அவசியம் பார்க்க வேண்டும். உண்மையான காட்சிப்படம், என்று பத்திரிகை விளம்பரங்கள் பறக்கின்றன. தக்கார் விமர்சனங்கள் நடக்கின்றன. சுவர்களிலும் பொதுச் சாலைகளிலும் நமது நாகரிகப் படங்களை விளக்கி எனது தாய்நாடு 'மை மதர் லாண்ட்' விளம்பரங்கள் அழகாகப் புன்னகைத்து வசீகரிக்கின்றன.

ஸான்பிரான்ஸிஸ்கோ நகர மாளிகை பொன்னொளி பறக்கி

றது. முதற் காட்சிக்குப் பதினு யிரம் பேர் நிரம்பி விட்டனர். ட்ரங் ட்ரங் என்று மின்சார மணியடிக்கிறது. ஸ்ரீமதி ஜெங் கின்ஸ் சாந்த புன்னகையுடன் தோன்றுகிருள். பேசுகிருள்.

"நண்பர்காள், இன்று நீங்கள் காணப்போகும் காட்சிகள் நமது நாட்டுக்குப் புதுமை. ஆனுல் இவை உண்மையின் உத்தமக் காட்சிகள். நம்மவர் நேற்று வரையில் இந்தியர் என்ருல் கூலி கள், நாகரிகமற்றவர்கள் என்றி ருந்தோம். சில காலத்திற்கு முன்கூட இங்கே இந்தியரை இழிவு செய்து பிரசாரப் படங் கள் காட்டினுர்கள். இன்று நமது கண் திறந்தது. நானும் என் கணவரும் சில அமெரிக்க நண்பரும் மணி, வாணி முதலிய இந்திய மணிகளுடன் பல ஆண்டு கள் பழகி வருகிருேம். அதனுல் எங்கள் வாழ்க்கையே புனிதமாயி ருக்கிறது. இந்தியாவில் தமிழர் என்ற ஒரு உன்னத நாகரிக வகுப்பினர் இருக்கிருர்கள். அவர்கள் பதினுயிரம் ஆண்டு களுக்கு மேலாகச் சிறந்த அருட் கலை பொலிய வாழ்கிருர்கள். அவர்கள் நடையுடை பாவனை பேச்சு செய்கை எல்லாம் பரம பரிசுத்தமாகவும் தெய்வச் சுவை பொருந்தியும் இருக்கின்றன. இப்போது நீங்கள் பார்க்கும் படம் மணியின் தலைமையில் கலைத் தொண்டு செய்யும் கலைக்கோயில் 'ஆர்ட் யூனியன்' ஹாலிவுட்டில் நமது ஸிம்பிள் ஜாக்கின் ஒப்பற்ற பார்வையில் தயாரானது. இதில் நாங்களெல்லாரும் நடித்திருக்கி ருேம்."

பட்டென்று ஒரு வெடி. ஒரு பெரிய ஜோதி. அதில் ஆர்ட் யூனியன் காட்சியளித்தல். மணி வாணி முதலியோர் பாடுதல், கமலம் நடனமாடுதல். பாட்டின் பொருளைப் பொன்னம்பலம் விளக்குகிருன். மனிதரை மனி தர் அடிமை செய்யற்க. இழிவு றுத்தற்க. ஒவ்வொரு மனிதனும் தெய்வ சைதன்ய வடிவம். உள் ளத்தில் அன்பும் உரையில் உண் மையும் நடையில் நேர்மையும், உடலில் பொதுநல உழைப்பும் கொண்டு உலகக் கோயிலில் ஜீவ வடிவான சிவனை வழிபடுவோம். இதுவே தமிழர் உலகிற்குத் தரும் சன்மார்க்கம், என்பது பாட்டின் கருத்து. பாட்டு முடிந்ததும் நட ராஜாவின் அழகான படம் திரை யில் வருகிறது. அதற்கு மங்கள ஹாரதி நடக்கிறது. இறைவனின் சிருஷ்டி நடனத்திற் கலை வடிவம் என்று நடராஜாவை மணி விளக் குகிருன்.

ஒரு படார் வெடி. எனது தாய்நாடு. 'மை மதர் லாண்ட்' அற்புதமான இயற்கை வளங்கள் நிரம்பிய நாடு. பின்னணியில் சங்கீதம் முழங்குகிறது. படக் காட்சிகள் இந்தியாவின் இயற்கை வனப்புகளைக் காட்டிச் செல்கின் றன. இமாலயம், கயிலை, பத்ரி ரிஷீகேசம், பஞ்சவடி, பிருந்தா வனம், காசி, ஹரித்வாரம், மூங் கொம்பு, பாணதீர்த்தம், குற்று லம், கன்யாகுமரி இவற்றில் தவ முனிவர் நிஷ்டை செய்து தெய்வ ஜோதியாக விளங்கும் காட்சிகள்.

அடுத்தது. நதிக் காட்சிகள்; கங்கை, காவேரி, கோதாவரி, கிருஷ்ணு, வைகை, தாமிரவருணி நதிக்கரைகளில் அழகான கோயில் களும், நீராடி மடியுடுத்து பக்த கோடிகள் தெய்வத்தை வணங் கும் உருக்கமான பாடல்களும்.

3. கோயில் நாடு: காசி, அயோத்தி, காஞ்சி, மதுரை,

திருச்சி, தஞ்சை, இராமேசுவரம், கோயில்கள், சிற்ப அற்புதங்கள். கோயில்களில் அன்பர் புனிதமாகத் தொழும் காட்சி. வேத கோஷம், தேவார முழக்கம். ஜோதி வடிவான சுத்தமூர்த்திக்கு தீபாராதனை.

4. சிற்பச் செல்வங்கள்: தாசு மகால், மோதிமகால், அபு, எல்லோரா, சித்தண வாசல் சித்திரங்கள், தஞ்சை அரண்மனை, திருமலை நாயக்கர் அரண்மனை, செஞ்சிக் கோட்டை, மதுரை, திருவண்ணாமலை, இராமேசுவரம், கிருஷ்ணன் குளம், திருநெல்வேலி, பெருந்துறை முதலிய பல கோயில் சிற்பங்கள். தமிழ் சிற்பிகளின் அற்புதம்.

5. இந்திய மகான்கள்: தேவ ரிஷிகள் காலையில் சூரிய நமஸ்காரமும் தியானமும் செய்து கம்பீரமான தொனியில் பாசுரம் பாடுதல். புத்தர் ஆட்டுக்குட்டியைத் தோளில் போட்டுச் செல்லல். மஹா வீரரின் கடுந்தவ விரதம்; அவரைச் சுற்றிப் பேய்களும் மோகினிகளும் தாண்டவமாடுதல். வீரர் அசையாத் தவத்தில் இருத்தல். பகைவர் அஞ்சி வணங்கி ஓடுதல்: தெய்வ ஒளி இறங்குதல். மஹாவீரரின் சமவசரணக் காட்சி. அதில் முனிவரும், புலவரும் மன்னரும், விலங்குகளுங்கூடக் காண்கின்றன. அலெக்சாந்தர் புருஷோத்தமனை மெச்சும் காட்சி. புருஷோத்தமன் தேசாபிமானம். சந்திரகுப்தன் மந்திரி சபைக் காட்சி; மகாஸ்தனிஸ் வணக்கமுடன் இந்தியாவின் புண்ணியப் பெருமையைப் பாடுதல்.

6. அசோகனின் அருளாட்சி: தூணில் அன்புக் கட்டளைகள். அசோகன் தங்கையும் மகனும் அரசங்கிளை தாங்கி புத்த பிக்குகள் சூழக் கப்பலேறி இலங்கை, யவனம் முதலிய நாடுகளுக்குப் பிரசாரம் செய்யப் புறப்படுதல். கப்பலில் தொழுகை. ஹர்ஷன் துலாபாரம் நடத்தி வித்வான்களுக்கு நல்ல தான தருமங்கள் செய்யும் காட்சி. சேரன் செங்குட்டுவன் தமிழர் படையை வடக்கே நடத்தி இமையமலைமேல் தமிழ்க்கொடி யேற்றுங் காட்சி. திருமாவளவர் படை நடத்தி அறப்போர் புரிந்து தீயபகைவரை வென்று வாகை சூடிய பிறகு தன்னை அடைக்கலம் புகுந்த பகைவரை மதித்து புகலளிக்கும் காட்சி; பாண்டியன் குதிரைப் படை நடத்தி தலையாலங்கானப் போரில் பதினேரு பகைவரை எதிர்த்து வென்று வாகை சூடும் காட்சி; மாங்குடி மருதனர் நக்கீரர் இருவரும் புகழ்பாடக் கேட்டு பெரிய தங்கத் தட்டில் பொன் குவித்தளிக்கும் காட்சி. 'இந்தக் காலத்தில் நோயில் வெகு மதி பிரமாதப்படுகிறது. தமிழர் தங்கள் கவியரசருக்கு எழுத்திற்கிலக்கம் கொடுத்தனர் என்று மணி விளக்கினன்.' பாண்டியன் கப்பல்கள் சாய வேட்டிகளும் முத்தும் பல பண்டங்களும் கொண்டு பாண்டு முழக்கிச் செல்லல். யவனசோனக வணிகன் தொண்டிக் கரையில் தமிழ் வணிகரிடம் செல்வங் குவித்து நமது கைத்தொழிற் சாமான்களையும் உணவுப் பொருள்களையும் வாங்கிச் செல்லல். தமிழ் வணிகர் பொற்குவையுடன் வருதல்.

7. பாண்டியன் அரண்மனை. அழகான சிற்பவேலைகள். வாசலில் ரோம நாட்டு வீரர் வாள் பிடித்துக் காவல் காத்து நிற்றல். அச்சமயம் ஆராய்ச்சி மணியடிக்கிறது. மணியடித்தது ஒரு பசு.

அதன் கன்றுக்கு ஏதோ நோய், நடக்க முடியவில்லை. மணிகேட்டுப் பாண்டியன் ஓடி வருதல். பசுவைத் தட்டிக் கொடுத்தல், பசு பாண்டியன் முன் தனது கன்றை அழைத்து வருதல். பாண்டியன் உடனே தன் வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்து கன்றைத் துள்ளி விளையாடச்செய்தல். பசுவை குங்குமமிட்டு, மாலைசூட்டி கன்று அதன் பாலைக் குடிக்கச் செய்து நல்ல புல்லுணவளித்து தட்டிக் கொடுத்தல், பசுவும் கன்றும் அரசனை வணங்கிச் செல்லல். பசுவிற்கும் நீதி யளிப்பது தமிழர் ஆட்சி. இந்தியர் அஹிம்ஸாவாதிகள்; தன்னுயிரைப் போல மன்னுயிரை மதிப்பது இந்தியன் உள்ளமே.

8. பாரியானவன் தேரோட்டிச் செல்லும் போது துவண்ட ஒரு முல்லைக் கொடியைக் காணல். பாரி தேரிலிருந்து இறங்கி வந்து முல்லையைப் பரிவுடன் எடுத்து நீரூற்றித் தன் தேரையே கொழு கொம்பாகத் தந்து நடந்து செல்லல். தமிழர் செடிகொடிகளிடங் கூட அன்பு கொண்டு எல்லாம் இறைமயமாக உணர்பவர்.

9. பாண்டியன் இரவில் மாறு வேடம் போட்டு நகர் சோதனை செய்தல். ஒரு தொழிலாளி வீட்டில் அன்று விற்பனையில்லாமல் பட்டினி யிருக்கிறார்கள். பாண்டியன் அதை அறிகிறான். கதவைத் தட்டுகிறான். விற்பனைப் பொருள்களை யெல்லாம் தானே வாங்கிக்கொண்டு உடனே சாப்பாடு போட்டுப் பணமும் தருகிறான். மதுரைக்கோயில் ஆயிரக் கால் மண்டபத்தில் ஒரு சிற்பி முருகன் சிலை வடிக்கிறான், மும்முரமாயிருக்கிறான். அப்போது சிற்றுள் இல்லை. சாயம் வேண்டியிருந்தது. மதுரை அரசனே மெல்ல வந்து சாயமேந்தி நின்றான். கொஞ்சநேரம் கழித்து சிற்பி திரும்பிப் பார்க்கிறான். அரச வணக்கம் என்று பணிகிறான். கலைஞ நீ கலையரசன்; நான் உனக்கு இச்சிறு ஊழியம் செய்ததில் பெருமை கொள்ளுகிறேன் என்று அரசன் அவனுக்கு ஒரு முத்து மாலையும் முருகன் சிலைக்கு ஒரு மாலையும் சூட்டினான்.

10. வள்ளுவர், கம்பர், நக்கீரர். புகழேந்தி, சேக்கிழார் கவிகள், வள்ளுவர் தறி நெய்துகொண்டே திருக்குறள் பாடம் சொல்லல்; நக்கீரர் சங்கறுத்துக் கொண்டே இறையனாரகப் பொருள் சொல்லல்; சாத்தனார் கலவாணிகம் செய்து கொண்டே மணிமேகலை பாடஞ் சொல்லல், இளங்கோ வடிகள் கண்ணகி சிலைமுன் சிலப்பதிகாரம் படித்தல், ஔவையார் சோழசேர பாண்டியருக்கு நீதி சொல்லல், ஆண்டாள் ஒரு சோலையில் கண்ணனை நினைத்திருத்தல்; திருவெம்பாவைப் பாடி தோழிமாரை அழைத்தல். மாணிக்க வாசகர் நடராஜரைப் பாடி ஒளியிற் கலத்தல், அப்பர் நமச்சிவாய பதிகத்தால் கல்லைத் தெப்பமாக்கி நீந்தல்; சம்பந்தர் திருநீற்றுப் பதிகத்தால் பாண்டியன் வெப்பு நோய் தீர்த்தல்; கம்பர் ஸ்ரீரங்கத்தில் இராமாயணம் அரங்கேற்றல், மூவேந்தரும் அவருக்குப் பட்டம் சூட்டல். இராமலிங்கசுவாமிகள் சத்தியஞான சபையில் அருட்சோதி பொலியப் பாடுதல்; மீனாட்சி சுந்திரம்பிள்ளைத் தமிழ் பாடி ஒரு குழந்தை தவழ்ந்தாடல்; வேதநாயகம் பிள்ளையின் சமரச கீதம்; நந்தனார் கீர்த்தனம்; நந்தன் சிதம்பரம் கோயில் தரிசனம்; திருநாராயணபுரத்தில் திருக்

குலத்தார் பெருமாள் சேவை. திருவாய்மொழி முழக்கம். நம்மாழ்வார் தியானம்; இவ்வாறு மகத்தான தெய்வக் கவிகள் வந்த நாடு எம்மது என்று இன்னும் துளஸி, கபீர், மீரா, நானக், முதலியோர் படமும் காட்டுகிருன் மணி.

11. நவ இந்தியாவில் நாடு அன்னியருக்கு அடிமையான போதிலும் அதன் ஞானமும் கலையும் வற்றவில்லை என்று முன்னுரை கூறிப் புது இந்திய வீரரை மணி படத்திற் காட்டுகிருன். ராஜா ராம் மோகன்ராய், த்யானந்தர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், தாகூர், திலகர், தாதாபாய், கோகலே, அரவிந்தர், லாலாஜி, ஜகதீசசந்திர போஸ், சுபாஷ் போஸ், மோதிலால்நேரு, ஜவஹர், இக்பால், அன்சாரி, அஜாத், பாஸ்கர சேதுபதி, டி. வி. கிருஷ்ணசாமி ஐயர், முத்துசாமி ஐயர், ஜி. சுப்பிரமணியர், கஸ்தூரி, வ. ரங்கசாமி, பாரதியார், வ. வே. சு. ஐயர், சிதம்பரம் பிள்ளை, ஸி. வி. ராமன், பி. ஆர். ராஜம், சரோஜனி, சித்தரஞ்ஜன தாஸர் முதலியோரைக் காட்டி அவர்களுடைய அருஞ் செயல்களையும் விளக்கினன்.

12. முடிவில் பாரத தேசம் உலக ஐக்கியசாலை. அத்யாத்ம நிதிச்சோலை என்று பாடி காட்சி முடிகிறது.

திரையில் இந்தியப் பெண்மை இந்தியப் பெண்மை (இண்டியன் உமன்ஹுட்) என்ற விளம்பரத்தை வாணி உயர்த்திப் பிடிப்பது போல் படத்தில் விளம்பரம் வருகிறது... ஜெங்கின்ஸ் எழுந்து பேசுகிருர்.

"சபையோர்களே, இப்போது இந்தியாவின் மெருமையை நாம் அறிந்தோம். இந்தியா காட்டுமிராண்டி நாடன்று. பண்பட்ட புராதன நாகரிக நாடு. அதில் மகான்களும் வீரர்களும் அரிய கவிகளும் இன்றும் இருக்கிருர்கள் இந்தியா அன்னியருக்கு அடிமையாகி வறுமையால் வருந்திய போதும் அதன் அறிவொலி மங்கவில்லை. இப்படம் பார்த்தபிறகு இந்தியாவின் உயர்வையும் தமிழ் சமுதாயத்தின் உயர்வையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாளை இந்தியப் பெண்மையை ஒரு அரிய கதையாகக் காட்டப்படும். எல்லாருக்கும் வந்தனம்."

கூட்டத்தில் வாழ்க இந்தியா, தெய்வ இந்தியா; வாழ்க தமிழ் நாடு, தெய்வத்தமிழ் வாழ்க என்ற ஆரவாரம் உண்டானது. ஸான் பிரான்ஸிஸ்கோ நகர மேயர் எழுந்து பேசினர்.

"நண்பர்காள், இந்தியாவைப் பற்றி நம்மிடையே எவ்வளவு குறும்புத்தனமான பொய்ப் பித்தலாட்டப் பிரசாரங்கள் நடக்கின்றன என்பதை நாம் இன்றே அறிந்தோம். இந்தியா புண்ணிய தேசம். வேத நாடு. அருட்பா முழங்கும் நாடு. இன்றுதான் இந்தியாவின் பெருமையை நாம் உணர்ந்தோம். இந்தியாவின் மிகப்புராதன மக்கள் தமிழர். அதன் புராதன பாஷை தமிழ். தமிழர் வீரக்கலைஞர். அவர்களுடைய பெருமையும் இன்றே அறிந்தோம். இங்கே நடக்கும் குறும்புப் பிரசாரங்களில் இந்தியப் பெண்மை அடிமை என்பதொன்று. நாளை நாம் பார்க்கும் படம் பெண்மையின் பெருமையை விளக்குமென்று நம்புகிறோம். கடல் கடந்து வந்து, நமக்கு உலகில் ஐந்திலொரு ஜனத்தொகை கொண்ட பெரிய கண்டமான

இந்தியாவின் பெருமையை நவீன சாதனங்களாலும் பாட்டாலும் சொல்லாலும் விளக்கிய தமிழ் மணிக்கு நன்றியுள்ள வந்தனம்.'' 'மணி வாழ்க' என்ற ஆரவாரக் கூட்டம் மகிழ்ச்சி யுணர்த்தியது.

''மிஸ்டர் ஜெங்கின்ஸ் என் வாழ்க்கையின் பெரிய கனவு இன்றே நிறைவேறியது.' என்று மன மகிழ்ச்சி யடைந்தான்.

அத்தியாயம் முப்பத்திரண்டு

எனது தாய் நாடு

மறுநாள் கூட்டம் அதிகம், நான்கு தடவை காட்சிகள் நடந்தன. ஏராளமான பெண்கள் வந்து நெருங்கினர். அனைவருக்கும் இந்தியப் பெண்மை என்ற நூலுடன் டிக்கெட் வழங்கினார் கலைக்கோயிலார். லூயி இந்தப் படத்தை மிக்க உற்சாகமாக ஓட்டினார். படக்காக்ஷிகளைக் காண்போம்.

இது கண்ணகி கதையின் தழுவலே. தற்காலத்திற் கேற்ற முறையில் மணி அதை மாற்றி யமைத்தான். கண்ணகி தோழிகளுடன் பந்தாடுகிறாள். நல்ல நிலா வீசுகிறது. தெருவில் ஒரு மதயானை கட்டுமீறிச் செல்கிறது. கண்ணகி தாயார் அவளைக் காணவந்தவள் யானையிடம் அகப்பட்டுக் கொள்கிறாள். அச்சமயம் வீரக் கோவிலன் வந்து அங்குசத்தால் யானையை அடக்கி தாயை விடுவிக்கிறான் யானை அவனைப் பணிகிறது. அதன் மேல் ஏறிஅவன் அரண்மனை சேர்கிறான். அங்கே சோழன் கப்பல் வணிகர் கொணர்ந்த முத்துக் குவியலை அளந்து கொண்டிருக்கிறான். மாநாய்கன் கோவலன் தந்தை அருகே நிற்கிறான். சேவகர் கோவலன் வீரத்தைச் சொல்லுகின்றனர். அரசன் கோவலனுக்கு வீரப் பதக்கம் தருகிறான். மாநாய்கன் கோவலனைத் தன் வீட்டிற்கழைத்துச் செல்கிறான்.

அங்கே கண்ணகி கோவலனைக் கண்டு காதல் கொள்கிறாள். காதலைத் தன் தாயிடம் குறிப்பாக உணர்த்துகிறாள். தந்தைக்குத் தாய் சொல்லுகிறாள். தந்தை கோவலன் பெற்றோரையும் அழைத்துப் பேசுகிறான். அவர்கள் அஷ்ட மங்கலங்களுடன் வந்து மணம் பேசுகிறார்கள். மணவினை சிறப்பாக நடக்கிறது. சோழனும் தம்பதிகளுக்குப் பரிசளிக்கிறான்.

கண்ணகி கோவலனுக்குக் கற்புக்கடமை செய்கிறாள். இந்தியப் பெண்மையின் தினசரி வாழ்க்கை இங்கே காட்டப்படுகிறது. காலை எழுந்து கணவனை வணங்கல், நீராடி மலர் கொய்து வந்து இருவரும் திருவாராதனம் செய்தல், யாழிசைத்தல், பிறகு பெண் உணவுத் தயாரித்தல், ஆண் மகன் அலுவலாகச் செல்லல், கப்பல் சரக்குகளைக் கொண்டு வருதல். பெண், நாயகன் வந்ததும் உபசரித்தல், இருவரும் உண்ணல், உண்டபிறகு நல்ல நூல்களை இருவரும் ஆராய்தல், மாலை விளக்கு வைத்ததும் கடவுள் வணக்கம் பாடி ஆலாதி எடுத்தல், இரவு உண்டபின் நன்னூலாராய்ச்சி பிறகு உறங்கல், அன்பு பேணல்.

இப்படி இருவரும் அன்புடன் வாழும்போது அரச சபையில்

மாதவி நடனம் நடக்கிறது. கோவலன் மாதவியைக் காதலிக்கிறான். மாதவியும் அவனைக் கணவன் போலக் கருதுகிறாள். கோவலன் மாதவியிடம்சென்று பத்தினியிடம் வருகிறான். பத்தினி உள்ளதை அறிகிறாள். "நீர் வேசையைத் தொடுமட்டும் என்னைத் தீண்டக்கூடாது." என்று விலகி நிற்கிறாள். கோவலன் வேசை மையலில் ஆழ்கிறான். கண்ணகி விரதம் பூண்டு ஒருசந்தியிருந்து நாயகன் திருந்தக் கடவுளை வேண்டித் தவம் புரிகிறாள். அந்தச்சமயம் தந்தை மாப்பிள்ளைமேல் வெகுண்டு கண்ணகிக்கு மறுமணம் செய்வதாகச் சொல்லுகிறான். கண்ணகி அதைத் தடுத்து "ஒருவன் கைப் பிடித்தபிறகு வேறொருவனைக் கனவிலும் கருதேன்" என்கிறாள். ஓர் அழகிய செல்வன் அவளை அணுகிக் காதல் வேண்டுகிறான். கண்ணகி அவனைத் தீயெழப் பார்த்து விரட்டுகிறாள். நாயகன் திருந்திவரவே கடவுளை எப்போதும் வேண்டுகிறாள்.

மாதவியும் கோவலனும் ஒரு நாள் உல்லாசமாக யாழிசைத்தல். மாதவி வேறுகாதலனை நினைத்துப் பாடுதல். கோவலன் அதைப் பார்த்ததும் "நீ தாசிதானே உன் விலையன்பு வேண்டாம்." என்று உதறித் தள்ளுகிறான்.

கோவலன் சொத்தெல்லாம் தாசியிடம் பறிகொடுத்து வீட்டிற்கு வருகிறான். பத்தினி அவனைப் பரிவுடன் புன்னகை பூத்து வரவேற்று வேதனையேன் ஒரு தொழில் செய்து பிழைப்போம் என்கிறாள். கோவலன் பத்தினி பெருமையைக் கொண்டாடுகிறான். இருவரும் மதுரைக்குப் புறப்படுகின்றனர். காடுமேடெல்லாம் பத்தினி நாயகனுடன் நடக்கிறாள். வழியில் ஒரு செல்வன் வலை வீசுகிறான். பத்தினி அவனைச் சபிக்கிறாள். இருவரும் மதுரையில் மாதிரி வீட்டில் தங்குதல். பத்தினி நாயகனுக்குச் சமைத்து பூசை செய்து விருந்திடல். கோவலன் முதலில்லையே எனல். பத்தினி உடனே சிலம்பைத் தருதல். அதை விற்கப் போனபோது வஞ்சக் கொல்லன் கோவலனைக் கள்ளனென அரசனிடம் கோளேற்றி கொலைக்களத்திற் சேர்க்கிறான்.

கணவனைக் காணாத பத்தினி செய்தியறிந்து கொலைக்களம் வந்து நாயகன் வெட்டுண்டதைக் கண்டு அநீதிமேல் சினந்து பாண்டியனிடம் வருதல். நியாயம் சொல்லல். பாண்டியன் நான் கள்ளன் என்று விழுந்திறக்கிறான். பாண்டிமாதேவி நாயகன் இறந்ததுமே துடிதுடித்திறக்கிறாள். பத்தினி கற்புத் தீயால் மதுரையை எரித்துச் சேரநாடு சேர்கிறாள். அங்கே தவம் செய்து தெய்வத் தன்மை பெற்று உடலை உதறிச் செல்கிறாள். அதைக் கண்ட குறவர் பத்தினித் தெய்வத்தை வழிபடுகிறார்கள். அப்போது சேரன் இளங்கோ சாத்தனார் அனைவரும் வருதல். நடந்ததறிந்து சேரன் பத்தினிக்கு ஆலயம் கட்டி வழிபடுகிறான்.

மாதவி கோவலன் சென்றபின் தன் மகள் மணிமேகலையுடன் துறவினியாகித் தர்மப் பிரசாரம் செய்கிறாள். பத்தினியை வணங்குகிறாள். தர்மப் பத்தினியை இந்தியர் தேவதையாக வணங்குகிறார்கள். ஆண் சிவம் பெண் சக்தியென்பதே எங்கள் கொள்கை என்று விளக்கி மணி பெண்ணின் பெருமையை நிலைநாட்டுகிறான். "தமிழர் காதல் மணம் புரிந்து சரிநிகராக வாழ்ந்தனர். பெண்

கற்பையே உயிரெனக் காத்தாள். அவளுடைய சக்தி ஆணைத் திருத்தியது. பெண்ணை மொட்டை போடுவதும் மூலையிலடைப்பதும் முகம்மதியர் காலத்தில் தற்காப்பிற்காக எழுந்தது. அதுவும் சிலரே அப்படி. பெரும்பாலான இந்தியர் மாதருக்கு மறுமணம் செய்கிறார்கள். கண்ணகி கணவன் இறந்த பிறகு முக்காடு போடவுமில்லை. மூலைகாவுமில்லை. சுதந்தரமாகத் தவம் புரிந்தாள். எங்கள் மாதர் கணவனைத் தெய்வமாக மதிப்பவர் பரபுருஷரை நினையாதவர். கற்பரசிகள்... இப்படிப்பட்ட பெண்மை, வேறு நாட்டில் உண்டா சொல்லுங்கள். எங்கள் பெண்மைக்குச் சாட்சி இதோ வாணி இருக்கிறாள் கமலம் இருக்கிறாள். இருவரும் சுதந்தரமாக கலைத்தொண்டே செய்கிறார்கள். ஆனால் அவர்கள் உயர்ந்த ஒழுக்கமுடையவர்கள்.'' என்று மணி பேசினான்.

வாணி சிறிதுநேரம் 'இந்தியப் பெண் அடிமையில்லை; அவள் வீட்டரசி' என்று பேசினாள். முடிவில் ஸ்ரீமதி ஜெங்கின்ஸ் பேசினாள். நண்பர்களே, பெண்மணிகாள், இன்று நாம் பார்த்த நாடகம் போல் என்றும் பார்த்ததில்லை. அல்ஸெஸ்டில் கிரிஸெல்டா போன்ற உத்தமிகளைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். இந்தியப் பெண்மணிகள் அத்தகையர் அவர்கள் காதல்மாருடனே வயது வந்துதான் கூடுவது வழக்கம். இருவரும் பூவும் மணமும் போல வாழ்வார்கள். தமிழ் இந்தியப் பெண்கள் பரம்பரையாக பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே காதல் மணமே புரிந்தனர். குழந்தை மணம் இல்லை. இருவரும் கற்புடன் வாழ்ந்தனர். கொண்ட கணவனை உயிரினும் பெரிதாக நினைக்கும் பெண்மை இந்தியப் பெண்மை. அதை இந்தியர் சக்தி யென்று வணங்குகிறார்கள். கற்பிற் சிறந்த இந்தியப் பெண்மையை நாம் போற்றுவோம். தற்காலம் இந்தியாவில் குழந்தைமணமே கிடையாது. பதினெட்டு வயதிலேதான் நன்றாகப் படித்துப் பெண்கள் மணம் புரிந்து கொள்கிறார்கள். இந்தியப் பெண்களைப்பற்றி நமது நாட்டினரில் சிலர் கொண்டுள்ள பொய்யெண்ணங்கள் இன்றுடன் ஒழிக-

'இந்தியா வாழ்க. இந்தியப் பெண்மை பொலிக' என்று சபை ஆரவாரஞ் செய்து கலைந்தது.

இவ்வாறே இந்தியர் உண்மையை அரிச்சந்திரன் கதையாலும், வீரத்தை திருமாளவன் கதையாலும், கலையைக்கம்பன் கதையாலும், படமாகக் காட்டினான் மணி.

அமெரிக்காவில் இப்படங்கள் மிகப் பிரசித்தி பெற்றன. ஊர் ஊராக மணியை வரவேற்றுப் படம் பார்த்தார்கள். இச்செய்தி இந்தியாவில் பரவியது. பத்திரிகைகளிலெல்லாம் அமெரிக்காவில் தமிழ்மணி என்ற தலையங்கம் வந்தது. தமிழ் மணிக்குக் கடிதங்கள் வந்து குவிந்தன. ஒருநாள் மணி ஓர் அதிசயமான கடிதத்தைக் கண்டு பூரித்தான்.

அதுவே டாக்டர் சிங்கத்தின் கடிதம்:

(தொடரும்)

★

வானவில்

"செந்தாமரை"

கானகத்து மயில் தோகை கண்ட கோலம் — தன்னை
வானத்தின் மேல் வளைத்தங் கோர்வில் லாக்கும்
ஞானத்தை நீ எங்கு கற்றுக் கொண்டாய் — இங்கு
நானத்தை அறியச் சொல் வான வில்லே!

வண்ணாத்திப் பூச்சியினைக் கண்டதுண்டோ? — நீலம்
உண்டகண்டன் அன்பினை நீ பெற்றதுண்டோ?
வண்ண நிற மலர்களுன்னைத் தொட்ட துண்டோ? — அந்த
விண்ணிலேழு வர்ணமுடன் விளங்கு தற்கே!

கடல் நெஞ்சைக் கிழித் தெழும்பும் பரிதி என்னும் — உன்றன்
காதலனின் கழுத்தேற கிடப்ப தற்கோ
வடித் தெடுத்த நிறங் கொழிக்கும் மாலை யாக — வானில்
வடிவெடுத்து விளங்குகின்றாய் வான வில்லே?

மழை தூவ முகிலேறும் தேவர் கோமான் — வரும்
மணிவழியில் வான் சிந்தும் வர்ணச் சாற்றில்
குழைத் தெடுத்த மலரம்பைக் கையி லேந்தி — காமன்
குதிக்கின்ற காலமிதோ வந்த தென்பாய்!

உனைக் கண்டு பெண்ணொருத்தி சாள ரத்தே — தன்
உள்ளத்தின் உவகையினைத் தேடு கின்றாள்
முனை ந் தோடிச் சென்றவனை விரைவில் கண்டு — உளம்
முதிர்ந்த தொரு காதலினை எடுத்து ரைப்பாய்!

வெள்ளொளியின் உள்ளிருக்கும் வர்ணச் சேர்க்கை — மிக்க
வனப்பூறும் இயற்கையன்னை கொண்டை மேலே
அள்ளி வைத்த மலர்க்கதம்ப மாக விரிந்தால் — அதை
அலங்கார மழைவில்லென் றழைப்ப தேனோ?

உள்ளத்தின் உணர்ச்சியெல்லாம் ஒன்று சேர்ந்து — வான
உச்சத்தை எட்டுகின்ற போதி லாங்கே
கொள்ளை எழில் கூட்டுமின்ப வீடு காணும் — என்ற
கொள்கையினைக் காட்டுதியோ வான வில்லே!

பச்சை நிறம்

"சுகி"

"பொய்யின் நிறமென்ன?"

நண்பர் கேள்விக்கு நான் என்ன பொய் சொல்லுகிறது என்று சிந்தித்தேன். கேட்டவரோ சைத்திரிகர். ஒருவேளை உருவமான படம் ஏதேனும் வரைய ஆவல் கொள்ளலாம்.

"காந்த சக்தியும், மின்வெட்டு வேகமும், கந்தக திராவகத்தின் நடையும் கொண்ட எழுத்தாளர் ஒருவர் 'கருப்புப் பொய்' என ஒரு இடத்தில் எழுதியிருந்ததைப் படித்தேன். உங்கள் எண்ணம் என்ன?"

பொய்க்கு உருவம் கொடுக்க எது சரியான வர்ணம்? ஆங்கிலேயர்களுக்கு (Black Lie) பொய் கறுப்பு என்று தோன்றுகிறது. சமய தத்துவம் கொண்ட தமிழன் கண்ணில் பொய் பச்சையாகப் படுகிறது. உலகத்தில் பச்சை நிறம் அதிகம்: உலகமே பொய்; ஆகவே பொய்யைச் சித்திரிக்கப் பச்சையே ஏற்றது என்பது தமிழ் மரவு.

இதைச் சொன்னேன். சைத்திரிக நண்பர் சிரித்தார்; பச்சையாகச் சொன்னால் ஒப்புக்கொள்ளவில்லை.

பொய்யின் நிறம் இருக்கட்டும்; பச்சையைப் பார்க்கலாம்.

பொதுவாக உலக மக்களுக்கே பச்சை நிறத்தில் ஒரே மோகம். காரணம் இயற்கையினுடைய சிருஷ்டியில் பச்சை நிறமே பெருவாரியாக இருக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வயல்கள், காடுகள், வாழைத் தோட்டங்கள் எதைப் பார்த்தாலும் பச்சையின் ஒரே போர்வையாகக் காட்சியளிக்கிறது. ஒன்றுமில்லாத வரண்ட பூமியிலும் இரண்டொரு பச்சைப் புல் தலை நீட்டும்.

தண்ணீரில்கூட, பச்சைத் தண்ணீருக்குத்தான் மௌஸ் அதிகம்; குளிர்ந்த தண்ணீரைச் சொல்லவில்லை. தண்ணீர் எவ்வளவுக்கெவ்வளவு கெட்டு, பச்சையாக மாறி பாசியால் அழுக்கப்படுகிறதோ, அப்போதுதான் அது பேர் போன தீர்த்தம் ஆகும். தண்ணீரைத் தீர்த்தமாக்கும் சக்தி இந்தப் பச்சை நிறத்திற்குத்தான் இருக்கிறது.

இயற்கை யன்னை இப்படி யெங்கும் பசுமையை வாரிப் பூசி இருப்பதின் ரகஸியம் என்ன? கண்ணுக்கும் மனத்திற்கும் இன்பந்தருவது பச்சை நிறம் ஒன்றே. முள்ளம் பன்றி போல் காய்க்கும் பலா மரமும் பச்சை; மத்தளக்கட்டை போல் காய்க்கும் முருங்க மரத்தின் இலையும், ரத்தச் சிகப்பாக இருக்கும் ஆப்பிள் மரத்தின் இலையும் பச்சை.

செந்தீக் கொழுந்துகள் போன்று பூக்கும் முருக்க மரமும், வெண்மையாகப் பூக்கும் மல்லிகைச் செடியும் பச்சை. செடிகொடிகள் எல்லாமுமே பச்சையாக இருந்தாலும் அவற்றுள் லக்ஷத்திற்கு அதிகமான வேற்றுமையைக் காணலாம். இருப்பினும் ‘இலைப் பச்சை’ யென்பதாக ஒரு நிறத்தைக் குறிக்கிறார்கள்.

இப்படியெல்லாம் செடிகொடிகள் பச்சையாக இல்லாமல் வேறு வர்ணம் கொண்டிருந்தால்? உலகத்தின் போக்கே மாறியிருக்கும். அத்தனை புல் பூண்டும் ஒரே ரத்தச் சிவப்பாக முளைத்து விட்டால் உலகம் எப்படிக் காட்சி தரும்?

சை! சிவப்பு கண்ணை உறுத்தும். பெண்ணின் உதட்டிற்குப் பதில் மூக்கு பவள நிறத்தில் இருந்தால் எப்படி அழகாக இருக்கும்? செடிகொடிகளின் இலைகள் ரத்த வர்ணமாயிருந்தால், மன சந்துஷ்டிக்குப்பதில் ஒரே கலவரமும் சண்டையும் விளைவிக்கும் மனப் போராட்டத்திற்கு பகைப்புலமாக சிவப்பு நிறம் விளங்கும் என்பது என் மனப் போக்கு. கடவுள் பச்சை நிறத்தை விலங்குகளுக்கும் மனிதனுக்கும் கொடுக்காமல், தாவரங்களுக்கும் பட்சி ஜாலத்தில் கிளிக்கு மட்டும் கொடுப்பானேன்?

பேசு மரகதமே — உனைத் தினம்
பேணி வளர்த்திடுவேன்.
ஆசை யமுத மொழி — அளிக்க நீ
அண்டையில் வந்திடாயோ

எனக்கூவி யழைப்பதின் ரகசியம் அதன் குரலில் இல்லை. அதனுடைய குரல் கீச்சுக் கீச்சும் கிக்கிகிக் கியூம் தாம். பறவையினத்தில் கிளிக்கு வந்த பெருமை அதன் நிறத்தின் காரணத்தால் மட்டுமே. பச்சை நிறத்திற்கு உயிர் வந்து சிறகடித்துப் பறக்கும் தன்மை கொடுத்தால் அது கிளியின் ரூபம்தான் எடுக்க முடியும்.

ஆனால், இதே பச்சை நிறத்தைக் கடவுள் இன்னொரு ஜந்துவிற்குக் கொடுத்துள்ளார். பாம்பு வகைகள் எல்லாமே அழகு வாய்ந்தவை; அவற்றின் அழகு கொடூரமான அழகு; ஆனால் பச்சைப் பாம்பு பசுமையான அழகு பெற்ற ஜந்து. வழவழவென கண்ணாடி போல் பளபளக்கும் அல்லிக் கொடியின் ஸ்பரிசம் கொண்டது பச்சைப் பாம்பு. தொட்டால் கைமணக்கும் என்று ஐதிகத்திற்குள்ளான நெளிந்தோடும் பச்சைப் பாம்பின் அழகு, கரை புரண்டோடும் காவிரியில் இல்லை யெனச் சொல்லலாம். எந்தக் கவியாவது பச்சைப் பாம்பிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்து கவிபாடவில்லை. கேவலம், பாம்பாட்டிச் சித்தர் கூட பராமுகம் செய்து விட்டாரே!

உயிர் நிறைந்த ஜீவனாக நெளிந்தோடியும், வானமிசை பறந்து திரிந்தும் வாழும் இவ்விரு பச்சை ஜீவன்களைத் தவிர நம் போன்ற மனிதர்களோ, காம்பீர்யம் நிறைந்த குதிரையோ, மருட்சி பெற்ற மானோ பச்சை நிறத்திற்குள் படைக்கப்படவில்லை. வெட்டுக்கிளி பச்சையாக இருக்கிறது; ஆனால் அது தீமையின் அவதாரம். பச்சை நிறம் நமக்கு இல்லாத காரணத்தாலோ என்னமோ, நமக்கெல்லாம் பச்சை பச்சையாகப் பேசுவதில் ஒரு மகிழ்ச்சி. இந்தப் பச்சை இதயம் இல்லாத மனிதன் இருக்க முடியாது. ஏதாவது ஒரு பருவத்தில் அவன் இதயம் பச்சைக்கு உள்ளாகிறது. இதே இதயத்தில் ‘இக்கரைக்கு

அக்கரை பச்சை' என்ற ஆசையும் முளைவிடுகிறது. இப்படி அக்கரைப் பச்சை இல்லாது போனல் மனிதனுடைய ஆவல்கள் பல துறைகளில் வளராமல் கருகிப் போய்விடும்.

நடைபெறுகிறது என்பது, பொருளாதார உலகிலும் உண்மையாயிற்று. பெரிய நோட்டுகள் நிறம் எதுவோ எனக்குத் தெரியாது. அவைகள் எல்லாம் பச்சைக்குத் தாளம் போட்டன.



சமீப காலத்தில் பச்சை நிறத்திற்கு உயிர் நாடி உண்டென அறிந்தோம். பொருளாதார உலகமே தலைகுப்புறக் கவிழ இருந்த காலத்தில் 'பச்சை நோட்டுகள்' உயிர் கொடுத்தன. பச்சை நிறத்தால்தான் உலகமே

இன்றையப் பொருளாதார உலகின் முடிசூடா மன்னன் பச்சை நோட்டு. அதுவே பசையுள்ள செலாவணி.

பணத்தைவிட உலகில் செல்வாக்கு நிறைந்த வஸ்து எது? வேறொன்றுமில்லை. பச்சைக்

கற்களில் மரகதப் பச்சை, பச்சை வைரம் என சில தலை நீட்டுகின்றன. இப்படியெல்லாம் பொருளாதாரத்திலும், வைரத்திலும் தலை தூக்கி நிற்கும் பச்சை நிறங்கள், இயற்கையிடம் நாம் கொண்டுள்ள அன்பைக் காட்டுகின்றன. ஆனால் பத்திராதிபர்கள் மட்டும் பச்சை நிறத் தாளில் அச்சடித்து நம்மைப் பரவசம் செய்ய முன் வர மாட்டார்கள். அப்படியே அச்சடித்தால் மனம், கண், அறிவு, கற்பனை யெல்லாம் பச்சைப்பந்தல் போல ஆனந்தமாகக் கொடி வீசிப் படருமே.

எனக்குச் சிறு பிள்ளை முதலே பச்சை நிறத்திடம் மோகம். இந்தியாவிலுள்ள கங்கை நதி முதல் தாம்மிரவர்ணி வரை இந்தப் பச்சைக் கலர் பென்சலால் வரைவேன். உலகப் படத்தில், என் பச்சைப் பென்சலைப் பாதிக்கு மேல் கரைத்து விடுவேன். அமெசான் நதிக்காக கால்வாசி பென்சலை அழுத்தமாக வரைவேன். பூகோள சரித்திரத்தில் ஏதேனும் சுவாரஸ்யம் உண்டென்றால் அது நதிக்கும் நதி தீரங்களுக்கும் பச்சை வர்ணம் கொடுத்திருப்பதே. பச்சை நிறம் இவ்வளவு விசாலம் அடைந்திருந்தும் அது ரசாயன வர்ணத்தில் தனியான வர்ணமல்லவாம். மஞ்சளும் நீலமும் ஐக்கியப் பட்டால், படுத்திக் கொண்டால் பச்சை வர்ணம் கிடைக்கும் என்கிறோம். ஆனால் இன்றைய ஓவிய உலகில் பச்சை வர்ணத்தை எதற்குக் கொடுத்தாலும் கொடுப்பார்கள். செடி, கொடி, மரம், மட்டை ஒன்றுக்கும் கொடுக்கிறதே இல்லை. ஒரு பத்திரிகையில், வயற் காட்டிற்கு ஒரே ஆரஞ்சு வர்ணம் தீட்டியிருந்தார்கள் என்றால், பச்சை மேல் எவ்வளவு கோபம் என்று பாருங்கள்; போதாக் குறைக்கு அதே பத்திரிகை மேலே ஆகாயத்திற்கு ஒரே பச்சையை வாரி விட்டிருந்தார்கள்!

ஆனால் கலைகளில்தான் இந்தப் புரட்சியை நாம் பார்க்கலாம். இயற்கை ஒருநாளும் ஆகாயத்திற்குப் பச்சை தீட்டாது. வான மண்டலம் நீலமாகவோ கருமை கலந்த சாம்பல் நிறமாகவோதான் மிளிரும். ஓவியத்திலும், சித்திரத்திலும், புல் பூண்டிற்கு பச்சை நிறத்தைக் கொடுக்காமல் போவதன் ரகஸியம் ஆண்டவனே அறிய வேண்டும்.

ஆமாம். அவன்தான் பார்க்குமிடமெல்லாம் பச்சையின் திருவிளையாடலை நர்த்தனமிட வைக்கிறான். கடவுளின் உருவமே பச்சை யென்பதை 'பச்சை நிறம் தோன்றுதடா நந்தலாலா' என்று பாடினான் கவி. 'பச்சைப் பசுந் துழாய் பின் சென்ற பசுங் கொண்டலே' எனவும் மற்றொரு கவிஞன் பாடினான்.

பசுமை நிறம் கொண்டவைகளில் தலை சிறந்தது புல். இதிலுள்ள சத்தும் திறனும் மற்றப் பொருள்களில் இல்லை யென விஞ்ஞானிகள் முடிவு. மனிதனுக்கே இந்தப் பசும் புல்லை உணவாக்க முயன்று விட்டார்கள். புல் ஜீவிகளின் தன்மை புலால் ஜீவிகளை விட மென்மை வாய்ந்தது, ஆகவே மனிதனுக்கும் மென்மை தர இந்த முயற்சி செய்கிறார்களோ என்னமோ! புல்லைத்தவிர பச்சை நிறங்கொண்ட கீரைகளில் இருக்கிற ஜீவ சத்துக்கள் புட்டி டானிக்குகளில் இல்லை யென்பது ஏக மனதான அபிப்பிராயம்.

ஆதியிலே மருத்துவர்கள் 'பச்சிலை' வைத்தியம் செய்தனர்.

பச்சை நிறங்கொண்ட இலைகள் எதிலும் மனிதன் வளர்ச்சிக்கோ, இல்லை ஆரோக்கியத்திற்கோ, அதையும் விட்டால் நோய் தீர்க்கும் தன்மையோ இருப்பதாக வாகட நூலில் பாடி வைத்தனர். தலைவலி முதல் முறை ஜுரம் வரை ஏதாவது சில பச்சிலைகளைக் கொண்டே வைத்தியம் செய்து விடுவார்கள். பாளம் பாளமாக உடைத்து சீழ் பிதுக்கி யெறியும் பச்சிலைகளும் உண்டு. பச்சிலை ஆராய்ச்சி செய்த சித்தர்கள், யோகிகள் மனித குலத்திற்கே உயிர் கொடுத்தவர்கள். கையாந்தாரை, கீழ்வாய்ச் செல்லி, முடக்கத்தான், அரக்கீரை போன்ற எல்லாப் பச்சிலைகளிலும் மூலிகைத் தன்மை இருப்பதை வாகட நூலில் படித்தால், சிறுகதையின் சுவாரஸ்யத்தைவிட அதிகமாக உணரலாம். பச்சிலைகளின் தன்மையை ஆண்டு அனுபவிக்கிறவர்கள் கிராமவாசிகள். அவர்களுக்கெல்லாம், மாத்திரைகள், 'ஊசிகள்,' ஆபிரேஷன்கள் என்றால் பயம். செமிண்டு நாகரிகத்தில் பசுமையைப் பாராத நமக்குத்தான் 'பாட்டில்' வைத்தியம் பிடிக்கும். நமது பிறப்பு வளர்ப்பு எல்லாம் ஆஸ்பத்திரியிலேதானே. ஆனால் கிராமவாசிகள் பசுமையிலே பிறந்து, பசுமையையே அனுபவிக்கிறவர்கள். இதனால் தான் பட்டணவாசிகள் உடம்பு காய்ந்து கருவாடாகி உலர்வதைப் பார்க்கிறோம். உள்ளம் கூட பசுமையற்றுப் போய் விடுகிறது.

வரவர நாகரிகத்தின் பற்றுதலால், மின்சார விளக்கு வரிசையாக இருக்க பிரமாண்டமான மரங்களையும், கரிக்காக மலைகளிலே மனம் போனபடி வானவளையத்தை முத்தமிடும் மரங்களையும் அழிக்க டெண்டர்களும் நோட்டீசுகளும் ஆலயம் பறக்கக் காண்கிறோம். இப்படி அழிக்கப் புறப்படுகிற ஆத்மாக்கள், பட்டணத்திலுள்ள குத்தகைக்காரர்கள்!

பச்சை நிறம் மனித வர்க்கத்தின் தூய்மையான நிறம்; அதுக்கு அழிவு நேர நேர தன் தலையிலே மண் விழுகிறது என்பது உடனடியாகத் தெரியாது. மின்னலுக்குப்பின் இடியோசை வருவது போல தாமதமாகும். பசுமையின் சிதைவு பாழ் வெளியின் ஆரம்பம். பச்சையான பேச்சில் இன்பம் அடைகிற இதயத்தோடு, பச்சைச் செடி கொடி, மரம் மட்டை வர்ணங்களில் மோகம் கொண்டால், கடவுள் படைப்பின் ரகஸியத்தை ஒருவாறு அறியலாம்.

பச்சைமா மலைபோல் மேனி என்றால் நாம் ஆனந்தப்படுவோம்; அனுபவிப்போம். கடவுள் வர்ணத்தைக் கடந்தவர். அதாவது நிறமும் ஜாதியும் இல்லாத ஒருவரை, பச்சைமாமலைபோல் மேனியென்றால், அதை என்னென்று சொல்ல?

சுத்தப் பச்சைப் பொய்!

★

புத்தக ஆராய்ச்சி

●

[ஸ்ரீ கண்டன்: ஆசிரியர்: கே. சுப்ரமணிய அய்யர்: இது (ஒரு நாடகம்) தருமபுர ஆதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளத்தின்படி வெளியிடப் பெற்றது.]

இந்த நாடகம் குழந்தைகளுக்கும் புரியும்படியாக அவ்வளவு எளிமையுடன் அமைந்திருக்கிறது. ஆனால் உட்பொருளோ, சொல்லுக்கும் செயலுக்கும் அப்பாற்பட்ட ஈசனின் மகத்துவத்தை தன்னகத்தே அடக்கி உள்ளது. சைவ உலகுக்கு பெரிதும் பயன் தரும்.

●

[பஞ்சவரண ஸ்தோத்திரங்கள்: வெளியீடு. தருமபுர ஆதீனம்]

கணேசர் வழிபாட்டைக் குறித்த நூல் இது. பிராகாரங்களில் உள்ள தெய்வங்களும், அவற்றின் வருணனையும், வழிபாட்டின் முறையும், பயனும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

●

[ஞானவுரை: வெளியீடு: தருமபுர ஆதீனம். விலை அணா 3: ஆசிரியர்: திரு ஔவை: சு. துரைசாமிப் பிள்ளை]

ஞான சம்பந்தர் வழங்கிய ஞானவுரை இது. ஆசிரியர் இயற்றிய சொற்பொழிவை அழகாகத் தொகுத்து நூலாகத் தந்திருக்கின்றார். சரளமான நடையில், மனதில் பதியும் வண்ணம் தெளிவாக விஷயங்கள் சொல்லப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் ஆசிரியர் இந்த விதம் கூறுகிறார்: "அறவோரும் செல்வரும் ஒருமித்த நோக்கத்துடன் தமிழிசை வாயிலாக ஞானசம்பந்தப் பெருந்தகை முதலாயினார் வற்புறுத்திய நன்னெறிகளைப் பரப்புவார்களாக."

●

[சினிமா [மாதம் ஒரு புத்தகம்] பதிப்பாசிரியர்: அ. கி. ஜயராமன். ஜோதி நிலையம். சென்னை விலை அணா 0—8—0.]

மாதம் ஒரு புத்தகமாக வரும் இந்தச் "சினிமா" வில் பல நட்சத்திரங்கள் ஒளி வீசுகின்றன. இலக்கிய வானின் சில நட்சத்திரங்கள் ஜொலிக்கின்றன. புகழ் பெற்ற பலரையும் "சினிமா"வில் சந்திக்கலாம். முதல் புத்தகமே "அபார—அற்புத" வரிசையில் சேர்ந்துவிட்டது. விதவிதமான சுவையுள்ள கட்டுரைகளும் கலந்த கதம்ப மணம் வீசுகிறது. ரசிகர்கள் பாராட்டுக்கு உரிய மாதம் ஒரு புத்தகம் இது:

ஆனந்த நிலயம்

கு. ப. சேது அம்மாள்

மஞ்சள் வெயில் படிந்த மாலைப் பொழுது!

சுத்தோதனர் தமது சுகாஸனத்திலிருந்து எழுந்து உப்பரிகை சென்றார். அரண்மனையின் சுற்றுப் புறங்களைப் பார்க்க விரும்பி நாற்புறமும் பார்வையைச் செலுத்திப் பார்க்கும் பொழுது சிறிது தூரத்தில் தெரிந்த ஒரு காட்சியை கண்டு அவருடைய நெஞ்சு ஜில் லிட்டது.

நின்ற நிலையில் அப்படியே கல்லாகச் சமைந்து விட்டார். எண்ணங்கள் சென்ற காலத்தைக் குடைந்து கொண்டே சென்று அவர் திருஷ்டியின் முன்பு இன்று யுவகாந்தனாக நிற்கும் சித்தார்த்தனுடைய சிசு பருவமும், குருநாதனுடைய தீர்க்க தரிசனமும் நினைவின் முன்பு பிரத்யட்சமாயின.

அகத்தின் முன்பு அன்று பிறந்த குழந்தையான சித்தார்த்தனும், காலதேவலரும் – புறதிருஷ்டியின் முன்பு சிறிது தூரத்திலுள்ள நந்தவனத்தில் ஒரு சம்பக மரத்தடியில் நின்று கையில் ஒரு வாடிய புஷ்பத்தை வைத்துக் கொண்டு துயரம் தேங்கிய பார்வையுடன் நிற்கும் யௌவனத்தினனை சித்தார்த்தனும் காட்சியளித்தனர்.

ஒரே சமயத்தில் இவ்விரு காட்சிகளையும் காண நேரிட்டதின் விளைவால் சுத்தோதனருக்கு நினைவு தப்பிப் போயிருந்தது!

பக்கத்தில் வந்து நின்ற மந்திரி சுமதியைக்கூட அவர் அறிந்து கொள்ளவில்லை.

மிகுந்த ஆவலுடன் மந்திரி அரசரை அணுகி, "தேவரீருக்கு மென்மேலும் ஜயமுண்டாகுக!" என்று இனிய வசனத்தில் முகமன் கூறி அரசரை உலக நினைவுக்குக் கொண்டு வந்தார்.

அப்புறம்தான் அரசருடைய பார்வை மந்திரியின்மீது திரும்பிற்று. மௌனமாகவே தமது மலர்ந்த முகத்தால் மந்திரிக்கு உபசாரம் தெரிவித்து அருகில் வருமாறு சமிக்ஞை செய்தார்.

அவர் அருகில் வந்ததும், மௌனமாக சித்தார்த்தனிருந்த பிரதேசத்தைச் சுட்டிக் காண்பித்தார்.

அப்பொழுதும், அந்த வாடிய சண்பக மலரை திருப்பித் திருப்பிப் பார்த்த படியே நின்றான் சித்தார்த்தன்.

இங்கிருந்த படியே அரசர், அமைச்சர் இருவருக்கும், அம்மலருக்கு நேர்ந்த மடிவைப் பற்றி ஆராயும் சிந்தனை ரேகை படிந்த

சித்தார்த்தனுடைய முகபாவம் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது!

மன்னரும், மந்திரியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்! இருவர் முகத்திலும் இருள் படர்ந்தது!

அடங்காத துயரத்துடன் நாகசர்ப்பம் சீறுவது போன்ற பெருமூச்சுடன் கால்கள் சோர பொத்தென்று கீழே உட்கார்ந்தார் சுத்தோதனர்.

அவருடைய தென்பெல்லாம் எங்கோ மறைந்து தீனத்துவம் எழுந்து தலைகாட்டிற்று!

"அரசே, மன அமைதியை இழக்க வேண்டாம்......"

"சுமதி, என் உயிர்க்கினிய துணைவரே, மன அமைதி மட்டுமன்று, யாவும் இழந்து விட்டேன் பாபியாகி விட்டேன், என் கண்மணியை, என் குலசேகரனை உயிரோடு......"

திடீரென்று பொறி கலங்கி உரக்க அலறினர் சுத்தோதனர். உயிரை இழக்கும்போதும் தைரியம் குன்றாத சுமதி அரசரைத் தழுவியணைத்துக் கொண்டு மென்குரலில் "தர்மபாலகரான நரபதி லோக ஞானம் பூர்ணமாகக் கற்ற தாங்களா இவ்வாறு மனம் உடைவது? ஆழி புரண்டாலும், ஆற்றல் சிதறலாமோ அரசர் பெருமான்களுக்கு! தைர்ய லக்ஷ்மி தமது தோள்களிலிருந்து இறங்கலாகாது. சாந்தி அடையுங்கள். இன்னும் வழி இருக்கிறது."

"வழியா! என்ன வழி? ஜீவன் முக்தரான காலதேவலருடைய வாக்கை வெல்லவல்ல வழிகூட இருக்கிறதா சுமதி? ஏன் என்னை ஏமாற்றுகிறீர்கள்?" என்று துக்கம் பொங்கி வர மந்திரியின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சோக உணர்ச்சியால் குரல் ஓங்க "சுமதி, இவ்விதம் பேசிப் பேசி படாத

பாடு பட்டு நீரும் நானும் கடைசியில் எதைக் காணப் போகிறோம்? தெரியாதா உமக்கு அந்த உண்மை; தெரியும், அறிவீர்! சுமதி, என்னைக் காட்டிலும் நன்றாக நீர் அறிவீர்! பொய் பேசி பொய்க் காட்சியைக் காண்பித்து, பொய் சந்தோஷத்தை எனக்கு

அளித்து...சுமதி, நீர் அனியாயம் செய்கிறீர்! என்னை அற்ப சந்தோஷியாக்க நீர் படும்பாடு வேறு ஒரு நரப் பிராணியும் படமாட்டானே! ஐயோ, வாயைத் திறந்து உம் மனதிலிருக்கும் உண்மையைச் சொல்லி, என் ஆவியைக் கிளப்புமே இச்சடலத்தை விட்டு? மாட்டீரா? செய்ய மாட்டீரா அப்படி......சுமதி நீரா என் ஆத்ம பந்து?" என்று உப்பரிகை கிடுகிடுக்கக் கத்தினர் சுத்தோதனர்.

குலை நடுங்கிற்று சுமதிக்கு, உடம்பெல்லாம் வியர்வை நனைந்து நாக்கும் பல்லும் ஒட்டிக் கொண்டன — அரசருக்கு என்ன ஆறுதலை அளிப்பது என்று தெரியாமல் மிரண்டு திகைத்தார் சுமதி.

அதே சமயம் தன் சேடி சகிதம் இளவரசி நந்தவனத்திற்குள் அடியெடுத்து வைப்பது தெரிந்தது.

அதற்குள் வாயிற் காப்போன் வந்து இளவரசர், மாலை வந்தனம் செய்ய உள்ளே வர உத்தரவு கேட்பதாக செய்தி அறிவித்தான்.

சுமதி சொல்லு முன்பே, பறக்கப் பறக்க முகத்தைத் துடைத்து மலர்ச்சியை வருவித்துக் கொண்டு பிரசன்னராகி தம் திருமகனை உள்ளே வரச்சொல்லி உத்திரவு கொடுத்தனுப்பினர்!

புத்ர வாத்ஸல்யம் என்பது என்ன என்று கண்கூடாகக் கண்டார் மந்திரி.

பால சூர்யனைப் போன்ற தேஜஸுடன், இரு கரங்களை கூப்பிக் கொண்டு, மின்னற் கொடி போன்ற உடலொளி கொண்ட யசோதரை பின் தொடர தம் மகன் வரும் காட்சியை பரமானந்தத்துடன் பார்த்தார் சக்கரவர்த்தி!

அருகில் வந்து வணங்கி நின்ற தம்பதிகளை ஆசீர்வதித்து பரமதாகத்தோடு புத்ரனை கைபற்றி அருகிலழைத்து மடிமீது உட்கார்த்திக் கொண்டு முகவாய் பற்றி கன்னத்தில் முத்தமிட்டார் மகிழ்ச்சியின் பெருக்கில் மெய் மறந்தவராக!

விவர மறிந்த பிறகு ஒரு நாளும் தான் அனுபவித்தறியாத இச்செயலினல் சித்தார்த்தனுக்கு வெட்க முண்டாயிற்று! செய்வதற்கு ஒன்றுமில்லாமல், தந்தையின் செயலைத் தடுக்கவும் மனமில்லாமல் லஜ்ஜை மேலீட்டால் குங்குமம் போல சிவந்து விட்ட முகத்தைக் கவிழ்த்துக் கொண்டான்!

ஆனந்த மேலீட்டால் தான் செய்த பிறகு அறிந்தார் சுத்தோதனர் — அதுவும் தம் புத்திரனுடைய முக பாவத்தைக் கண்ட பின்பு!

மடியை விட்டு எழுந்திருக்கச் செய்து பின்பு அருகிலிருந்த சுமதியின் முகத்தையும், நாட்டுப் பெண் யசோதரையின் முகத்தையும் கவனித்தார்.

சுமதியின் முகத்தில் அபூர்வ அமைதி குடி கொண்டிருந்தது! யசோதரையின் முகத்திலோ — வர்ணிக்க இயலாத ஒரு பரிஹாசக் குறிப்பு — அவள்! கணவனை வைத்த கண் மாருமல் சித்தார்த்தனை பார்த்த வண்ணம் நின்ருள்!

நிமிஷ நேரத்திற்கு முன்பு நிலை காணுத சோகம் கரை புரண்டு, அது மாய்ந்து, மறு க்ஷணத்தில் அதே இடத்தில் எல்லை கடந்த சந்தோஷம் நிலவியதைக் கண்டு வாழ்வின் இந்த ஜாலத்தையும், சுக துக்கங்களின் க்ஷண நேர அனுபவங்களையும் கண்டு பிரமித்தார் சுமதி!

அந்தத் தத்துவ விசாரத்தில் ஆழ்ந்திருந்த சுமதிக்கு சுற்றுணர்வே மறந்து விட்டது!

(2)

"என்ன சிந்திக்கிறீர்கள் துணைவ?" என்று அரசர் வினவிய பின்புதான் விழிப்படைந்தார் மந்திரி.

அவர் சாந்தத்துடன் பதில் சொல்லு முன்பே மறுபடியும் அதே கேள்வியைக் கேட்கும் அரசருக்குப் பதில் சொல்ல அவர் புறமாகத் திரும்பினர் சுமதி.

அரசருக்கு மனதில் சங்கை உதித்தது, அமைச்சர் பேச தாமதித்ததில்! பிறகு வினயமான தொனியில் பரிவோடுகூட "அரும் மதி படைத்த சுமதி, மிதமிஞ்சிய எனது சோகத்தில், தங்களை மனம் நோகச் செய்து விட்டேனே?" என்று கேட்டார் அரசர்.

அவர் பேசிய தொனியே மெய்மை நிறைந்துதான் இருந்தது!

அமைச்சருக்கு அரசர் மேலிருந்த கண்ய பாவம் இன்னும் சற்று வலுத்தது. மனப்பூர்வமான சிரத்தையும், பணிவும் கொண்டு கையெடுத்து அரசரை வணங்கி "தரணிபதி, என்ன இவ்வாறு கேட்கிறீர்கள் தங்கள் ஊழியனை என்னைப் பார்த்து? தங்களுடைய நிர்மலமான மனதும், பிரேமையும் அறியாதவனா நான்? பாரத வர்ஷத்தை ஒரு குடை கீழ் ஆளும் அரசருடைய அமைச்சனாகிய நான் இதைக் கூடவா அறியமாட்டேன்!"

இதைச் சொல்லும் பொழுது நன்றியின் பெருக்கால் அமைச்சருடைய கண்ணில் நீர் வந்து விட்டது!

ஆச்சரியம்! ஜலம் ததும்பிய கண்களுடன் தன்னை வணங்கும் அமைச்சருடைய கண்களை தம் உத்தரியத்தை எடுத்துத் துடைத்தார் அரசர், ஆசனத்திலிருந்து எழுந்து மந்திரியின் சமீபம் வந்து!

இருவருக்கும் உள்ளத்தில் சாந்தி பிறந்தது. இருவரும் மேலே செய்வதைப் பற்றி ஆலோசிக்க முற்பட்டார்கள்.

"எல்லாம் செய்து பார்த்தோம் சுமதி; இப்போது என்ன சொல்லுகிறீர்கள் மேலே?" என்று கேட்டார் அரசர்.

"அதைத்தான் நானும் சிந்திக்கிறேன். நமது நகரின் புறத்தே இருக்கும் ரோகிணி ஆற்றின் கரையிலிருக்கும் குன்றின் அடிவாரத்தில் இளவரசருக்கென்று மாளிகை ஒன்று நிர்மாணிக்க வேண்டும்......"

"நிர்மாணித்து?"

"அம்மாளிகையில் வனப்பும், வயதும் கொண்டதுமானவற்றை மட்டும் அமைக்க வேண்டும், அழகும், அதிசயமும், ஆனந்தமும் அங்கே கொழிக்க வேண்டும் குளுமையும், குதூகலமுமே எங்கும் காணும்படியாக சிருஷ்டித்து......"

"இவையெல்லாம் இப்போது சித்தார்த்தனுடைய மாளிகையில் இல்லையென்ற சொல்லுகிறீர்கள்?"

"போதாது! இது விசாலமான அரண்மனையின் அத்தனை ஊழியர்களுடைய ஊழியமும் போதவில்லை! மானிடரின் அயர்வும், மாய்வும், பிராணி வர்க்கங்களின் மடிவும், ஜீவராசிகளுக்குள்ள மூப்பும் இளவரசருடைய திருஷ்டியில் தாக்கத்தான் செய்யும்!"

"ஆம்! அதனால்தான் நேற்று இளவரசர், வாடிய மலரைக் காணவும், அதனூடேயே வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கும் துயர சித்திரமும் தாங்கள் பார்க்க நேரிட்டது."

"அமைச்சரே, ஆம்! அறிகிறேன். இனிமேல் சித்தார்த்தன் இங்கிருப்பது கூடாது! நீங்கள் சொல்துவது போல......தனியிடத்தில்......ஆம்! அதுதான் வழி!" என்றார் அவசர அவசரமாக!

"அதைத்தான் செய்ய இருக்கிறோம். பொறுக்கி எடுத்த மேன்மைகள், பெண்டிர்கள், அங்கு சேவைக்கு இருக்க வேண்டும். உத்யான வனத்து மனோகரத்தை மட்டும் காப்பாற்றி — கண்படச் செய்யும் காவலர்களைப் போட்டு உதிரும் வற்றிய சருகுகளையும், வாடிய மலர்களையும் கண்காணாதவாறு அப்புறப் படுத்தியாக வேண்டும். நீரும், நிழலும், குளிர்ச்சியும் கூடிய வனபூமி சூழ்ந்த இடத்தில் மனதை வசீகரிக்கும் அலங்கார மாளிகையை எழுப்பி, அதில் சித்தார்த்தன் வசிக்க வேண்டும்!

அப்போதுதான் முதுமை, மரணம், துயரம், இவையொன்றும் இளவரசருடைய கண்களுக்குத் தென்படா! இன்ப மாளிகையும், எழில் மிக்க மனைவியும், எங்கு பார்த்தாலும் இளமையின் வனப்புமாக ஒன்றுகூடி நாம் எதிர்பார்க்கும் சித்த விருத்தி சித்தார்த்தனுக்கு ஏற்படும்.

சம்சார சுகங்களின் அத்தனை மாண்புகளும் கூடிய இடத்தில் மாயை நிச்சயமாக மனதை வசப்படுத்தும் — படுத்தியே தீரும். அதை வெல்ல மானிடருக்குத் திறனில்லையென்பதே யுகம் யுகமாக ஞானிகள் கண்ணும் உண்மை!" என்றார் சுமதி.

சுத்தோதனருடைய மனதின் ஆனந்தத்தை மெய்ப்பித்துக் காட்டுவதுபோல சந்திரோதயமும் ஆகி விட்டது!

பளிச்சென்ற நிலவு புவனத்தை ஆனந்த நிலயமாகத் தோற்றுவித்தது!

ஜங்கார சுருதி

மாறன்

பாண்டியன் வீரசேனன் தன் ஆஸ்தான மண்டபத்தை விட்டு, வெகு சீக்கிரமாகவே புறப்பட்டு அந்தப் புறத்திற்குச் சென்றான். புதிதாக மணந்து கொண்ட தன் பட்டமகிஷி கலாவதியுடன் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டுமென்றுதான் அவன் அவ்வளவு விரைவாக அங்கு போனான்.

கலாவதி அப்பொழுது கையில் வீணையுடன் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளப் பூரிப்பை அவள் முகத்தில் தோன்றிய புன் முறுவல் தெரிவித்துக் கொண்டிருந்தது. ஏதோ ஒன்றைப் புதிதாகக் கண்டெடுத்தவள் போல அவள் உற்சாகத்தோடு திரும்பத் திரும்ப ஒரே பல்லவியைப் பாடுவதைக் கண்ட வீரசேனன் "பைத்தியம் பைத்தியம்" என்று முணுமுணுத்துக் கொண்டான். தான் அங்கு வந்திருப்பதை அவளுக்கு அறிவிப்பதற்காக, மெதுவாகக் காலைத் தரையில் தட்டினான். கலாவதி அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. அவளுடைய கண்கள் கை விரல்களிலும், விரல்கள் வீணைத்தந்திகளிலும், மனம் ஆனந்தலகிரியிலும் லயித்திருந்தன.

இன்று என் கலாவதிக்கு இவ்வளவு குதூகலம்? கேதார கௌளை ராகத்தில் வெகு நாளாக முயற்சித்தும் வராதிருந்த ஒரு அபூர்வமான பிடி இப்பொழுது சரளமாக வாசிக்க வந்து விட்டது. அதையே பத்து முறை வாசித்தாயிற்று. இன்னும் ஆவல் தீரவில்லை. பதினோராவது தடவையும் அதே பிடியை வீணையில் வாசித்துப் பார்த்தாள். இந்தச் சமயத்தில் தான் அரசன் வீரசேனன் தன் வரவை அவளுக்கு உணர்த்தினான். கலாவதி தன் குறிப்பை உணராமல் திரும்பவும் வீணை வாசிக்க ஆரம்பித்ததைக் கண்டு அரசனுக்குச் சிறிது கோபம் வந்தது. தடதடவென்று அவள் எதிரில் போய் நின்றான். அரசி வீணையுடன் எழுந்து நின்றாள். அவளை அமரச் சொல்லி விட்டுத் தானும் அவளருகில் உட்கார்ந்தான்.

தான் ஆரம்பித்த ராகத்தை முடிப்பதற்காகக் கலாவதி மறுபடியும் வீணையை மீட்டினாள். வீரசேனன் எமாற்றமடைந்தவன் போல அவளையே கெஞ்சுதலாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மனோ நிலையை அவள் கவனிக்கவேயில்லை. மதுவை உண்டு சொக்கி நிற்கும் ஒரு வண்டைப் போல கீத இன்பத்திலேயே அவள் மயங்கிக் கிடந்தாள். வெகுநேரம் ஆயிற்று. வீணையின் ஜங்கார ஸ்ருதி அந்த அறை முழுதும் நிறைந்து ஒலித்துக்கொண்டேயிருந்தது. ஆனால் அரசனுடைய கோபமும் வினாடிக்கு வினாடி விஷம் போல எறிக் கொண்டே

யிருந்தது. அவனால் பொறுக்க முடியவில்லை. "கலா, நான் உன்னோடு உல்லாசமாகப் பேசலாமென்று வந்தால், நீ வீணையோடு புலம்பிக் கொண்டிருக்கிறாயே! வா, உத்தியான வனத்திற்குச் செல்லலாம்." என்று கோபமும் கட்டளையும் கலந்த தோரணையில் சொன்னான்.

ராணி திகைத்தாள். ஆனால் தன் திகைப்பை வெளிக்குக் காட்டிக் கொள்ள வில்லை. வீணையை வைத்து விட்டு, புருஷன் இட்ட கட்டளைப்படி அவன் பின்னால் நடந்தாள்.

உத்தியான வனத்திற்குள் சென்றவுடன், அரசன் அவளை மகிழ்விப்பதற்காகத் தமாஷாக ஏதேதோ பேசினான். சிரித்தான். தான் செய்து முடித்த வீரச் செயல்களையெல்லாம் நாடகம் போலவே அவளுக்கு நடித்துக் காண்பித்தான். ஆனால் அரசி கலாவல்லியின் காதுகள் அவன் சொன்னவற்றில் ஒன்றையும் கிரகிக்கவேயில்லை. அரசன் கேட்பதற்கு மட்டிலும், "ஆமாம், இல்லை," என்ற பதில்களை உணர்ச்சியற்ற முறையில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

*　　*　　*

இன்னொரு நாள் மாலை, அரசனும் ஆஸ்தானக் கவிசேகரனும் உத்தியான வனத்திலிருந்து அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சுகந்தமான தென்றலில் மிதந்து வந்த வீணாகானத்தைக் கேட்டுத் திகைத்து நின்றான் கவிஞன். அத்தகைய வீணாகானம் அவனுக்கு எங்கேயோ கேட்டது போலிருந்தது. பத்து வருஷங்களுக்கு முந்திய அவனது வாழ்க்கை முழுவதும் அவன் நினைவுக்கு வந்து விட்டது. அரசனுடன் வந்ததை மறந்து நின்று கொண்டிருந்தான்.

கவி, சேகரன் வீணையின் சப்தத்தைக் கேட்டு இவ்வாறு திகைத்து நின்றது, வீரசேனனுக்குப் பிடிக்க வில்லை. ஆனால் தன் வெறுப்பை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் "சேகர், இந்த சங்கீதம் உங்களை இப்படிப் பிரமிக்கச் செய்கிறதே, அவ்வளவு உயர்ந்த கீதமா இது?" என்று கேட்டான். அரசன் சொன்னதைக்காதில் வாங்காமலே "அரசே மன்னிக்க வேண்டும். சற்று நில்லுங்கள் இது என் குருநாதரின் இனிமையான வாசிப்பைப் போலவே இருக்கிறது." என்றான் கவி. அவன் கலாவதியையோ அவளுடைய வீணை வாசிப்பையோ இதுவரை அறியவில்லை.

அரசன் போய்க் கொண்டே, "வீணை வாசிக்கிறது வேறு யாருமில்லை. என் தேவி கலாவதி தான். நாம் இருவருமே அங்கு செல்லலாம்" என்றான்.

"அரசே தாங்கள் மிகவும் பாக்யசாலி தான்." என்று சொல்லிக் கொண்டே கவிஞன் அரசனோடு சென்றான். கலாவதியின் எதிரே இருவரும் அமர்ந்தார்கள். கலாவதி நாலைந்து அபூர்வமான ராகங்களைப் பாடி முடித்தாள். கவிஞனின் முகம் என்றுமில்லாதபடி மலர்ந்திருந்தது. இழந்து போன செல்வத்தை மீண்டும் பெற்றவன் போல அவன் அரசன் எதிரில் ஆனந்தக்கூத்தாடினான். கலாவதியிடம் நேரடியாகவே ஏதோ கேட்டு விட வேண்டுமென்று வாயெடுத்தான். ஆனல் அரசனுடைய முகம் மாறுபட்டிருந்ததைக் கண்டதும், தன் உள்ள மகிழ்ச்சியை அடக்கிக்

கொண்டு எழுந்து போய் விட்டான்.

அன்று முதல் கவி சேகரன் அரசனின் ஆஸ்தான மண்டபத்திற்கு வருவது அபூர்வமாகி விட்டது. அரண்மனை அந்தப் புரத்திற்கருகிலுள்ள பலகணியின் வெளிப் பக்கம் நின்று கலாவதியின் வீணுகானத்தைப் பருகுவதையே அவன் தனது முக்கிய லக்ஷியமாகக் கொண்டு விட்டான். ராணி கலாவதியும் நாளா வட்டத்தில் இதைத் தெரிந்து கொண்டாள். தன்னுடைய அபூர்வமான வீணை வாசிப்பை அதாவது சங்கீத இன்பத்தை உண்மையாக ரசிக்கக் கூடியவர் ஒருவராவது அந்த அரண்மனையில் இருக்கிறுர் என்பதில் அவளுக்கு ஒரு மகிழ்ச்சி! பலகணியின் பக்கம் சேகரன் வந்து விட்டான் என்பதைக் குறிப்பாகத் தெரித்தவுடன் கலாவதி வீணை வாசிப்பில் தன் திறமை முழுவதையும் காட்டி உள்ள முருகச் செய்வாள்.

சேகரன் ஆஸ்தான மண்டபத்திற்கு வராமல் எங்கெங்கோ சுற்றித் திரிவது, அரசனுக்குப் பிடிக்கவில்லை. இதைப் பற்றி அரசன் அவனிடம் சொல்லியும் பார்த்தான். ஆனல் சேகரின் மனம் திரும்பும் வழியாக இல்லை. வீணை அதிகம் வாசிக்கக் கூடாது என்று அடிக்கடி கலாவதிக்கும் சில கட்டுப் பாடுகளை விதித்து வந்தான். கணவனுடைய கட்டளையை மீறக் கூடாதென்று கலாவதிக்கு அந்தச் சமயங்களில் தோன்றும். ஆனல் சேகரன் பலகணியின் பக்கம் வந்து நிற்கிறுன் என்பதை அறிந்து விட்டால், அவளுடைய சங்கீத கானமும் கலை ஆர்வமும் புருஷனுடைய 'கட்டுப் பாடுகளையெல்லாம் உடைத்தெறியும்படி செய்து விடும்.

ஒரு சமயம் கலாவதியும் சேகரனும் இது போன்று சங்கீத சாகரத்தில் திளைத்திருக்கையில் அரசன் கோபாவேசத்தோடு கலாவதியின் அறைக்குள் வந்தான். அதே சமயத்தில் சாளரத்திற்குப் பின் புறத்திலிருந்து 'ஆஹா!'' என்று ஒரு குரல் கேட்டது. அரசன் தடதட வென்று வெளியில் வந்து பார்த்தான். சேகரன் தன்னை மறந்து சாளரத்தின் வெளிப் புறத்தில் சுவரோடு ஒன்றிக் கொண்டிருந்தான்.

சேகரனை இவ்வாறு கண்டதும் அரசனுடைய கோபம் எல்லையை மீறிவிட்டது. கவிஞனைக் கரகர வென்று இழுத்துக் கொண்டு போய் அரண்மனைக்கு வெளியில் தள்ளி விட்டுத் திரும்பவும் கலாவதியிடம் வந்தான். மிகவும் ஆத்திரத்தோடு ''கலா, இந்த வினடி முதல் நீ வீணையைத் தொடவே கூடாது. தொட்டால் அந்த வீணையை உடைத்து நொறுக்கி விடுவேன். ஜாக்கிரதை!'' என்று பயமுறுத்தினன்.

தன்னைக் கொல்வதென்ருலும் கலாவதி அதைப் பற்றிக் கவலைப் படமாட்டாள். தன் வீணையைப் பற்றி அரசன் சொல்லிய வார்த்தைகள் அவளுடைய உள்ளத்தைக் கொட்டியது. அவளுடைய உடல் முழுதும் பதறியது. தன்னுள் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரத்தை வெளிக் காட்ட முடியாமல் தவித்தாள். எதிர்பாராத ஆபத்தினல் சிறகிழந்து விட்ட தாய்ப் பறவை தன் அருகில் விழுந்து கிடக்கும் சிறு குஞ்சுகளை அணைத்துக் கொள்வது போலக் கலாவதி தன் அருகிலிருந்த வீணையை எடுத்து அணைத்து முத்தமிட்டுஉறையினுள் வைத்தாள்.

வெகு நாள் வரையில் கலாவதி வீணையின் அருகில் செல்லவில்லை.

கலாவதியின் வீணாகானம் ஒலிக்காத அந்த அரண்மனை, கண் இழந்த மனிதனைப்போல சோபை குறைந்து தோன்றியது. இதுவே வீரசேனன் விரும்பிய காட்சி. கலாவதியின் சங்கீதப் பைத்தியம் இன்னும் சில நாட்களில் அறவே நீங்கி விடும் என்று நினைத்து அவன் மகிழ்ந்தான். ஆனால் கலாவதிக்கோ அந்த அரண்மனை வெறும் சூன்யமாகவே காட்சியளித்தது. வீரசேனன் தன் கணவன் உணர்ச்சி கூட மங்கி வந்தது. அவனுடைய சொற்படி நடக்க வேண்டிய ஒரு வேலைக்காரி என்றே தன்னை நினைத்துக் கொண்டாள். வீரசேனன் சொல்லியபடியே ஒவ்வொரு காரியத்தையும் யந்திரம் போலச் செய்து முடித்தாள். அவளுடைய அன்பைப் பெறுவதற்காக வீரசேனன் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின. கூண்டில் அடைபட்ட கிளியைப் போல சோகமே உருவமாக இருந்தாள் கலாவதி!

* * *

பிற நாட்டின் மீது படையெடுப்பதென்றால் வீரசேனனுக்கு அது ஒரு விளையாட்டுப் போலத் தான். ஒருவித காரணமுமின்றிப் பக்கத்து நாட்டின் மீது படையெடுத்து எளிதாக ஜெயித்து விட்டான். போரில் சூடிய வெற்றி மாலையோடு வந்து கலாவதியைக் காண வேண்டுமென்ற ஆவலினால், வீரசேனன் யுத்தகளத்திலிருந்து குதிரையின் மேல் வெகு வேகமாக வந்து கொண்டிருந்தான். தனது வீரச் செயலைக் காட்டியாவது கலாவதியைத் தன் வசப்படுத்த அவன் இந்தச் சூழ்ச்சியைச் செய்தான். குதூகலத்துடன் அரண்மனைக்குள் சென்றான். கலாவதியின் அறைக்குள் நுழையப் போனவன் உள்ளே இருவர் பேசிக் கொண்டிருப்பதை அறிந்து வெளியில் நின்று விட்டான். உள்ளே, கலாவதியும் சேகரனும் பேசியது வீரசேனனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"அம்மா, தாங்கள் அனுப்பிய சேவகர்கள் சிறிது நேரம் கழித்து வந்திருந்தால், இந்தச் சேகரனைத் தாங்கள் கண்ணால் பார்த்திருக்கவே முடியாது.'' என்றான் சேகரன்.

"ஏன் பார்த்திருக்க முடியாது?'' இது கலாவதியின் குரல்.

"நான் இங்கிருந்து துரத்தப்பட்ட அன்றே உலகில் எல்லாவற்றையும் துறந்து துறவறத்தை மேற்கொண்டு விட்டேன். ஆயினும் பாழும் மனம் ஏனோ நிம்மதி அடையவில்லை. எனக்குரிய ஒரு இன்பப் பொக்கிஷம் வேறு யாரிடமோ அகப்பட்டுக் கொண்டிருப்பதாக ஒரு உணர்ச்சி என்னைப் பைத்தியமாக்கி வரும் போலிருந்தது. பைத்தியமாகி உளறுவதற்குள் பிராணத்தியாகம் செய்து கொள்வதே நல்லதென்ற முடிவுக்கு வந்தேன். அந்தச் சமயத்தில் தான் தாங்கள் அனுப்பிய சேவகர்கள் வந்து என்னை அழைத்தார்கள். இனி எனக்கு என்ன நேரிட்டாலும் நான் அஞ்சப் போவதில்லை. தங்களுக்கு அரசரால் ஏதேனும் கெடுதல் வரக் கூடாதென்றே நான் கவலைப்படுகிறேன். தாங்கள் இப்பொழுது ஒரு முறை அந்தக் கேதார கௌளை ராகத்தை வீணையில் வாசித்து நான் கேட்க வேண்டும். இதுவே என் கடைசி ஆவல். இதை நிறைவேற்றி வைக்கத் தாங்கள் மனமிரங்க வேண்டும்'' என்று கெஞ்சினான் சேகர்.

ரசிகனின் விருப்பப் படியே என்றுமில்லாதபடி கலாவதி வீணை வாசித்து மகிழ்வித்தாள். பின்பு சேகரன் அரண்மனையிலிருந்து துரத்தப் பட்ட முதல் அது வரையில் தான் அடைந்துள்ள மனோ நிலையைச் சுருக்கமாக எடுத்துச் சொன்னான்.

"அம்மா, கல் என்றாலும் கணவன். அவருடைய வார்த்தையின் படி நடப்பது தான் தங்கள் கடமை!" என்றான் சேகர்.

"கலையறிவற்ற அவரை நான் இப்பொழுது கணவனாகவே கருதவில்லை, அவர் ஒரு வஞ்சக மிருகம். என்னை மணந்து கொள்ள வேண்டுமென்றே அவர் தனக்கு சகல கலைகளிலும் ரசனையிருப்பது போல ஒரு நாடகம் நடித்திருக்கிறார். நான் இந்தச் சூதையறியாமல், இவரைப் பற்றிக் கேள்விப் பட்டவையெல்லாம் உண்மை யென்று நம்பி மாலை யிட்டு மோசம் போனேன். அபூர்வமாகக்கற்ற கலை வீணாவதை என்னால் சகிக்க முடியவில்லை. மனம் கலை ஒன்றையே நாடி நிற்கிறது. இதற்காக நான் எவ்விதத் தியாகத்தையும் செய்ய துணிந்து விட்டேன்." என்று கலாவதி துடித்தாள்.

"அம்மா தங்கள் குரு வேத நாதர் தானே?" என்று கேட்டான் சேகர்.

"ஆமாம். தங்களுக்கு எப்படி இது தெரிந்தது. அவர் தான் என் குரு. ராகங்களின் ஜீவனையே அவர் என்னிடம் கொடுத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டும்."

"அம்மா, முதல் நாள் நான் தங்கள் வீணாகானத்தைக் கேட்டவுடனேயேதான் இதைத் தெரிந்து கொண்டேன். நானும் வேதநாதரின் சிஷ்யன் தான்!"

"அப்படியா? ஆமாம். என் குரு நாதரே ஒரு சமயம் என்னிடம் சொல்லியிருக்கிறார் 'உனனைப் போல இவ்வளவு சரளமாக வீணை வாசிக்கக் கற்றுக் கொண்டவன் இன்னும் ஒருவன் தான் இருக்கிறான். அவனை நீ காணாதிருப்பதே உன் வாழ்க்கைக்கு நன்மை பயக்கும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். அதே சிஷ்யரை நான் நேரில் காணும் பாக்யம் கிடைத்தது என் அதிர்ஷ்டம் தான். தங்களைக் கண்டதன் காரணமாகவே எனக்கு நன்மை ஏற்படப் போகிறது."

"நன்மையா? எம் குருநாதர் கூறியபடி, இருவேறு நிலைமையிலிருக்கும் நாம் இருவருக்கும் சந்திக்க நேர்ந்ததே இருவருக்கும் துன்பத்தைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது. இதேநிலையில் இங்கு நான் வெகுநேரம் நின்றால் இன்னும் ஆபத்துத்தான் நேரிடும். ஆகையால் சென்று விடுகிறேன். இனி நான் தங்களைச் சந்தித்துத் தங்களது இனிய வீணா கானத்தைக் கேட்கவே முடியாதபடி போய் விடலாம்!'

"இல்லை. குருநாதர் ஆசி கூறியபடி மறு ஜென்மத் திலாவது நாம் ஒன்று சேருவோம்"

"ஆமாம். அந்த மறுஜென்மத்தை வெகு விரைவிலேயே அடைவதற்காக நான் பிராணத்தியாகம் செய்து கொள்ளப் போகிறேன்.'

"வேண்டாம். இந்தப் பிறவியிலேயே நாம் இருவரும் மறு ஜென்மம் எடுக்கலாமே! தாங்கள் இப்பொழுதே மறு ஜென்மத்தை அடைந்திருக்கிறீர்களே."

"ஓஹோ! நான் துறவறம் அடைந்து விட்டதை சொல்கிறீர்களா?"

"ஆமாம். இந்த வினாடி முதல் நானும் ஒரு துறவி. இந்த சங்கீத விரோதியான வீரசேனனுக்கு இனி நான் அடிமையல்ல."

"அரசி, தாங்கள், பதவி, செல்வம் பொறுப்பு எல்லாவற்றையும் யோசிக்காமல் அவசரப் படாதீர்கள்,,"

"இவைகள் எல்லா வற்றையும் விட சங்கீதமே எனக்கு மேல். தீர யோசித்து விட்டேன். என் கலையின் முன் எதுவுமே நிகரில்லை என்று சொல்கிறேன், நாம் இருவரும் துறவிகளாகிக் காவிரிக் கரையில் ஆனந்த மாக மீதிவாழ்க்கையையாவது சங்கீதம் தரும் இன்பத்தில் சாதிக்கலாம் என்று நினைக்கிறேன். தங்கள் இஷ்டம் எப்படியோ?"

"இதுவே எனக்கு இன்பமளிக்கும். ஆனால் இதன் மூலம் தங்கள் வாழ்க்கை வீணாகி விடுமேயென்று தான் நான் கவலைப் படுகிறேன்."

"இல்லையே. என் வாழ்க்கையை சங்கீத தேவதைக் காகப் பயன் படுத்துவது வீணாகுமா? கலைக்காக என் உலக வாழ்க்கையைத் தியாகம் பண்ணி விட்டேன். இதை ஒருவராலும் தடுக்க முடியாது."

"தங்கள் இஷ்டப் படியே நானும் நடக்கிறேன். சென்று வருகிறேன்."

"இன்னும் சிறிது நேரத்தில் நான் ஒரு சந்நியாசினி யாகத் தங்கள் பர்ண சாலைக்கு வந்து சேர்வேன்" என்றாள் கலாவதி. சேகரன் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

மன்னன் வீரசேனன், வெளி வாசலில் கல்லாகச் சமைந்து நின்றான். உயர்ந்த ஆடையாபரணங்களை யெல்லாம் களைந்து விட்டுக் காவியுடையுடன் வெளியே சென்ற கலாவதியை அரசன் கண்டான். அவளைத் தடுத்து நிறுத்தவோ அவளுடன் பேசவோ அவனால் முடியவில்லை. கலாவதி அரண்மனையை விட்டுப் போனவுடன் அவனுக்கு உலகமே இருண்டு விட்டது போலத்தோன்றியது. நின்ற இடத்திலேயே படுத்து விட்டான்.

* * *

மறுநாள் வீரசேனன் அதிகாலையில் எழுந்து வெறி பிடித்தவன் போல ஊருக்கு வெளியே ஓடினான். காவலாளிகள் பின் தொடரவே அவன் வேகம் அதிகரித்தது. அவர்கள் கண்ணில் படாமல், மனித சஞ்சார மற்ற அகன்ற காவிரியின் கரையை அடைந்தான் வீரசேனன். மனித சமூகத்தையே இனி ஏறிட்டுப் பார்ப்பதில்லை என்ற உறுதியுடன் ஓரிடத்தில் உட்கார்ந்தான். பக்கத்து மரத்திலிருந்த ஒரு குயில் இனிய கீதமிசைத்தது. குயிலின் கானம் அவன் மனதில் ஒரு புரட்சியைக் கிளறி விட்டது. "சீச்சி!" என்று காரி உமிழ்ந்து விட்டு அங்கிருந்து ஓடினான். எதிரிலுள்ள மூங்கில்ப் புதர் ஒன்றிலிருந்து அடிக்கும் காற்று, அவனை எதிர்ப்பது போல வேணுகானத்தை ஏந்தி வந்தது. அந்த ஒலியைத் தன் காதுகளில் நுழைத்தகாற்றின் மீது அவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. ஆனால் காற்றை எதிர்க்க முடியுமா? மறு பக்கம் திரும்பி ஓடினான்.

கலகல வென்று பாறைகளின் மீது தவழ்ந்து கொண்டி

ருந்த காவேரி இன்னிசை அமிர்தத்தைப் பரப்பிக் கொண்டிருந்தாள். காவிரியின் இனிய ஓசை அவனுக்கு அந்தப் பாழும் வீணையின் நாதம் போலவே கேட்டது. அதே சமயம், உலகமே கானமயம்' என்று சொல்வது போல ஒரு கிளிக் கூட்டம் 'கீச்கீ' என்று கத்தி ஏளனம் செய்து கொண்டு அவனுடைய தலைக்கு நேராக ஆகாயத்தில் பறந்து சென்றது.

இவ்வித மான இசை உபத்திரங்கள் அவனால் பொறுக்க முடியவில்லை. இதை தடுப்பதற்கு வீரசேனன் ஒரு வழி கண்டு பிடித்து விட்டான். எந்தப் புலனால் ஓசைகளைக்கேட்கிருனோ அந்தப் புலனை அவன் அழித்துக் கொண்டால் அவனுக்கு நிம்மதிதானே! இந்த உபாயத்தினால் அவன் மனம் சாந்தி யடைந்தது. நிம்மதியாகக் காவிரிக் கரையின் ஒரு பாகத்தில் குடிசையமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். காவிரி நகைத்துச் செல்லும் ஒலி அவன் காதுகளில் வந்து இப்பொழுது உபத்திரப் படுத்து வதில்லை.

வீரசேனனுடைய குடிசைக்குச் சிறிது தூரத்திலிருந்த இரண்டு குடிசைகளில் கலாவதியும் சேகரனும் துறவிகளாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் மாலையில், கலாவதி வீணை வாசித்துக் கொண்டிருந்த சேகரைப் பார்த்து "ஸ்வாமி, கூழாங் கற்களின் மீது உல்லாசநடனம் புரிந்து செல்லும் இந்தக் காவிரி நீரும், அதோ மரங்களில் ஜோடி ஜோடியாக அமர்ந் திருக்கும் பக்ஷி ஜாலங்களும், மலரின் அருகே ரீங்காரம் செய்யும் வண்டு களும் ஏன் தாங்கள் வாசிக்கும் வீணைகானத்தை எதிரொலிக்கின்றன?" என்று கேட்டாள்.

"அம்மா, இயற்கை யன்னையின் அம்சங்களான இவையாவும் அந்த அன்னையின் ஜங்காரஸ்ருதியையே பல விதமாக ஒலித்து நிற்கின்றன. நம் மிடமிருந்து அவை கற்கவில்லை!" என்றான் சேகரன்.

சிறிது நேரம் சென்ற பின் கலாவதி வீணையை ஏந்திக் கலாதேவதையைப் போல சேகரனின் எதிரே அமர்ந் திருந்தாள். அவள் வீணை வாசித்து முடிந்தவுடன் "அம்மா, இயற்கையிலுள்ள இன்னிசைகளெல்லாம் ஒன்று சேர்ந்து வீணையின் வடிவமாகத் தங்கள் கரங்களில் வீற்றிருக்கிறது. இந்த கானத்தை அனுபவிக்க முடியாத மனிதன் துரதிர்ஷ்ட சாலிதான்." என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தான் சேகரன்.

சேகரனுடைய வார்த்தைகள் ஒன்றும் சற்றுத் தூரத்திலிருந்த வீரசேனனுடைய காதில் விழவில்லை.

197243

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.